எஸ்.தாயப்பன்

உண்மையான கடவுள் யார்?



இந்திய ஞானிகள், வேதாந்தங்கள், உபநிஷத்துக்கள், சூத்திரங்கள் சுட்டிக் காட்டும் கடவுள் ஒருவரே! அவர் யார் என படித்துப் பாருங்கள்.

உண்மையான கடவுள் யார்?

எஸ். தாயப்பன்

நன்கொடை ரூ.10/-

உண்மையான கடவுள் யார் ?

முதற் பதிப்பு – மார்ச் 2011 – 10,000 பிரதிகள்

ஆசிரியரின் பிற நூல்கள் :

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ்)– 2,35,000 பிரதிகள்

My Cry & Joyful New life (English)- 35,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (கன்னடம்)– 20,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (மலையாளம்)– 20,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தெலுங்கு)– 5,000 பிரதிகள்

சித்தர்கள் கண்ட மெய்ப் பொருள் (தமிழ்) – 85,000 பிரதிகள்

பாவத்தின் சம்பளம் நரகம் – 80,000 பிரதிகள்

VCD– எனது சாட்சியும் செய்தியும் – 1,90,000 சீடிக்கள்

VCD– எழுந்து கட்டுவோம் – 15,000 சீடிக்கள்

இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் – 40,000 பிரதிகள்

இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? – 40,000 பிரதிகள்

கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில் – 10,000 பிரதிகள்

சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே – 10.000 பிரதிகள்

அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு ! (தமிழ்) – 5.000 பிரதிகள்

இந்த நூல்கள், மற்றும் VCD கிடைக்கும் முகவரி :

எஸ். தாயப்பன்

12, ஜி.டி.நாயுடு தெரு,
பாலாஜி அவென்யூ – 1
சேலையூர் PO, சென்னை – 600 073
தொலைபேசி : 044–22234526 e-mail : sakthiprabha@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும் **VCD**க்கும் நன்கொடை ரூ.10 + தபால் செலவு ரூ.1/–. **MO, DD** அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின்

அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள்.உங்கள் டெலிபோன், செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். **செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

VCD அனுப்ப தபால் செலவு மட்டும் : –

1 முதல் 15 **VCD** அனுப்ப ரூ.20/–
16 முதல் 25 வரை **VCD** அனுப்ப ரூ.35/–
100 VCD க்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் **KPN Parcel Service** மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளாச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M.சீரிஸ் மற்றும் வெள்ளைபோர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். இடது புறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலது புறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி.நாயுடு தெருவில், இடது புறத்தில் இரண்டாவது வீடு.

ஒரு வேண்டுகோள்

உங்களுக்கு என்ன புத்தகம் எவ்வளவு வேண்டும் என MO படிவத்தில் அல்லது EMOவில் அல்லது கடிதத்தில் எழுதாத பட்சத்தில் எல்லா புத்தகங்களையும் நீங்கள் அனுப்பிய MOக்கு தகுந்தாற்போல் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க உங்களுக்கு என்ன புத்தகம் தேவை என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன்/ செல் நம்பர்களையும் தவறாமல் எழுதி அனுப்புங்கள். தேவை ஏற்படின் உங்களை தொடர்பு கொள்ள முடியும்.

என்னுரை

தஞ்சையில் ஹவுஸ் ஆஃப் காட் சர்ச்சின் பாஸ்டர் காட்சன் ரவி அவர்கள் 26.1.2011 அன்று என்னை செய்தி கொடுக்க அழைத்திருந்தார். தஞ்சையில் உள்ள பல ஊழியக்காரர்களும், சபைப் போதகர்களும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது இந்தியாவில் ஏன் சுவிசேஷம் பரவவில்லை, நாம இப்போ வெஸ்டனைஸ்டு (ஐரோப்பிய) கிறிஸ்தவத்தை பின்பற்றி வருவதால், நம்ம தேசத்து புற ஜாதிகளுக்கு கிறிஸ்தவத்தை ஒரு அந்நிய மதமாக, இயேசு கிறிஸ்துவை ஒரு அந்நிய தெய்வமாக காட்டுகிறோம். யூதனுக்கு யூதனைப் போலவும், இந்துக்களுக்கு இந்துக்களைப் போலவும் நாம சுவிசேஷத்தை அறிவிக்கணும். இன்னிக்கு இந்து சகோதர, சகோதரிகள் எல்லாம் சைவம், வைணவத்தில் பின்பற்றுவது இயேசு கிறிஸ்துவையும் அவரின் உபதேசங்களையும் தான். அவர்களுடைய வேதங்கள், புராணங்களை, உபநிஷத்துக்களை விளக்கிச் சொல்லி 'நீங்கள் அறியாமல் ஆராரித்துக் கொண்டிருக்கும் தேவன் இயேசுவே' என்று புரிய வைத்து சுவிசேஷத்தை அறிவிக்கணும் என்று கூறினேன். வந்திருந்த எல்லா ஊழியக்காரர்களும், சபைப் போதகர்களும் இது தான் சரியான முறை, வழி என்று ஒத்துக் கொண்டனர்.

கூட்டம் முடிந்த பிறகு தஞ்சை வல்லத்தில் 'உலக சுவிசேஷ ஊழிய சபை'யை நடத்தி வரும் பாஸ்டர் பெ. ஆபிரஹாம் புருஷோத்தமன் என்னை சந்தித்தார். திருவையாருக்கு அருகில் உள்ள மேல உத்தம நல்லூரைச் சேர்ந்த அவரையும், அவருடைய குடும்பத்தாரையும் 'சாமியார் குடும்பம்' என்று தான் ஊர் ஜனங்கள் அழைப்பார்கள். இவருடைய தாத்தாவின் அப்பா வடலூர் இராமலிங்க சுவாமிகளின் காலத்தில் வாழ்ந்து அவரைப் பின்பற்றியவர். அவர் சமாதியாகி, அங்கு ஆண்டு தோறும் தை மாதத்தில் மிகச் சிறப்பாக குரு பூஜை நடக்கும். அன்னதானம், கொட்டு மேளம் என ஊரே அமர்க்களப்படும். அந்த குரு பூஜையில் பூசாரியாக இருந்து பூசை செய்து வந்த புருஷோத்தமனை ஆண்டவர் தொட்டு, ஊழியத்திற்கு அழைத்து 1988 முதல் வல்லத்தில் வல்லமையாக அவரை பயன்படுத்தி வருகிறார். தேவாரம், திருவாசகம் எல்லாவற்றையும் இன்றைய தேதியிலும் மிக அருமையாக, அழகாகப் பாடுகிறார்.

அவர் சொன்னார் 'ஐயா, நீங்கள் சொல்லுகின்ற பல சித்தர்களின் பாடல்களை வைத்து 'கடவுள் யார்? என்ற ஒரு நூலை சில வருஷங்களக்கு முன்பு நான் வெளியிட்டேன். என்னால் அதிகம் பிரதிகள் போட முடியலை. 1000 பிரதிகள் மட்டுமே அச்சிட்டேன். அதைப் படிச்ச எல்லாருமே ரொம்ப நல்லா, பிரயோஜனமா இருக்குன்னு சொன்னாங்க. எல்லா காப்பியும் தீர்ந்து போயிடுச்சு. இப்போ சாம்பிளுக்கு கூட எங்கிட்ட ஒரு காப்பியும் இல்லை. அதோட சீடி மட்டும் இருக்கு. நெறைய பேரு கேக்கிறாங்க என்றார். அதைக் கொடுங்க. கம்யூட்டரில போட்டு பாக்குறேன். நல்லா இருந்தா, கர்த்தருக்கு

சித்தமானால் அதை என்ன செய்யணுமோ செய்யுறேன்னு சொன்னேன். அவர் உடனே வீட்டுக்குப் போயி சீடியை காப்பி பண்ணி நான் கிளம்புறதுக்கு முன்னாடி கொண்டு வந்து கொடுத்திட்டாரு. 4, 5 நாட்கள் கழிச்சு அந்த சீடியை பிரிண்ட் அவுட் எடுக்கலாம்னு பார்த்தா அதில அந்த புக்கை டைப் செய்த ஃபாண்டு இல்லை. அவருக்கு போன் பண்ணினேன். அடுத்த நாளே அதை ஒரு சீடியில பதிவு பண்ணி அனுப்பிச்சிட்டாரு. அவருடைய வேகம், துடிப்பு, ஆர்வம் என்னை அசர வைச்சது.

அப்புறம் அதை பிரிண்ட் அவுட் எடுத்துப் பார்த்தேன். சின்ன புத்தகம் தான். 38 பக்கம் தான் இருந்தது. ஆனா நல்ல முயற்சி. அவரோட ஆதங்கம், ஆத்தும பாரம் அவரோட எழுத்து நடையில தெரிஞ்சது. அது என்னுள் பல தீப்பொறிகளை கிளப்பி பல தலைப்புக்களை கொடுத்து, இந்தக் கோணத்தில் இன்னும் அதிகமாக எழுத என்னைத் தூண்டியது. பிறகு அது என்னால் தாங்க முடியாத அளவு எரிமலையாக வெடித்து சிதற ஆரம்பிச்சது. அவருக்கு போன் பண்ணி சொன்னேன். அதை கொஞ்சம் மாற்றி விரிவுபடுத்தி எழுத எண்ணுகிறேன் என்றேன். தாராளமா செய்யுங்கய்யான்னு, இன்னும் பல சித்தர்களின் பாடல்களை புக்குல இருந்து ஜெராக்ஸ் எடுத்துக்கிட்டு காஞ்சிபுரத்துக்கு ஒரு திருமணத்துக்கு வந்தவர் என்னை நேரடியாவே சந்திக்க வந்துட்டாரு.

ஆண்டவருடைய சமூகத்தில ஜெபம் பண்ணிய போது இன்னும் பல தலைப்புகளையும், பாடல்களையும் விஷயங்களையும் இறைவன் கொடுத்தார். அது தான் இப்போது உண்மையான கடவுள் யார்? என்ற தலைப்பில் உங்களோட கைகளில் இருப்பது. ஜெபத்தோடு படியுங்கள். உங்களுடைய இந்து சகோதர, சகோதரிகளுக்கு இந்த நூலை வாங்கி ஜெபத்தோடு கொடுங்கள். கர்த்தர் இந்த நூலைப் படிக்கின்ற ஒவ்வொரு ஆத்துமாவோடும் பேசுவாராக, இடைப்படுவாராக. இயேசுவே மெய்யான கடவுள் என்பதை அவர்கள் கண்டு கொள்வார்களாக!

கர்த்தருடைய நாமம் இந்த நூலின் மூலமாக மகிமைப்படுவதாக. பாஸ்டர் ஆபிரஹாம் புருஷோத்தமனையும், அவர் குடும்பத்தையும் அவர் செய்கின்ற ஊழியத்தையும் கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக.

சென்னை – 73 | கிறித்துவின் பணியில்
10.3.2011 | ஆத்தும தாகமுள்ள உங்கள் சகோதரன்

எஸ். தாயப்பன்

முனைவர் ஏ. ஜான்சன் தங்கையா
எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி
இணை இயக்குநர்
கிறித்துவ இலக்கியத் தமிழ்ப்பேரவை
சென்னைப் பேராயம் (தெ.இ.தி)
எண் 226, கதீட்ரல் சாலை
சென்னை – 600 086

மதிப்புரை

கடவுள் என்னும் சொல் தனித்தமிழ்ச் சொல். இச்சொல் தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் இலக்கண நூல்களிலும், இலக்கியங்களிலும் காணப்படுகிறது. கடவுள் என்ற சொல்லுக்குப் பல நிலைகளில் பொருள் கொள்ளலாம். கடவுதல் என்றால் இயக்குதல் என்பது பொருள். எனவே கடவுள் என்பதற்கு உலகை இயக்குபவர் என்பது கருத்தாக அமையும். கடவுள் என்பதற்கு உள்ளத்தைக் கடந்தவர் எனப்பொருள் கூறுவதுமுண்டு. கடவுள் உலகைக் கடந்தவர். அதேசமயம் உலகுக்குள்ளும் உள்ளவர். இவ்வாறு உலகினுள்ளும் உயிர்களுக்குள்ளும் வியாபித்து நிற்கும் நிலையையே கடவுள் எனலாம்.

அனைத்தையும் கடந்தப் பொருள் ஒன்றாய்த்தான் இருக்க முடியும் என்பதையே தனக்கு உவமையில்லாதான் (குறள் 7) எனத் திருவள்ளுவரும், மாற்றாரும் தன்னொப்பாரில்லாதான் (திருமுறை 6:1:2) இறைவன். ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாதவன். அவன் அறிவாய் யாண்டும் நீக்கமற நிற்பவன். இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதியுங் காட்டொணதே என அப்பரும் அருளிச் செய்தனர். இவ்வாறு எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனைப் பரிபாடலில் கடுவனிளவெயினனார் என்னும் புலவர் (பாடல் எண் 3) கீழ்வருமாறு பாடுகின்றார்.

தீயினுள் தென்றல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்துநீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களும் அளியுநீ;
அனைத்துநீ; அன்னத்தின் உட்பொருளும் நீ; ஆதலின்
உறைவும் உறைதலும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமார் அனையை;
முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலில்
பிறவாப் பிறப்பில்லை; பிறப்பித்தோர் இலையே.

இதனையே பாரதிதாசன் எங்கெங்கும் காணினும் சக்தியடா என்று முழக்கமிட்டான். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இவ்விறைவனையே திருமந்திரம்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறுகிறது. இதனையே கிறித்தவர்களின் திருவிவிலியம் மிகவும் தெளிவாக, ஆதியில் நீர்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது என்று கூறுகிறது. ஆதியில் உலகத்தில் உருவற்று அசைவாடிக் கொண்டிருந்த இறைவனின் உருவம் பற்றிய கோட்பாடு இன்னும் தெளிவற்றதாகவே மக்களிடையே காணப்படு கின்றது. அத்தெளிவற்ற நிலைக்கு கலங்கரை விளக்கமாய் அமைந்துள்ளது **திரு. தாயப்பன் அவர்களின் உண்மையான கடவுள் யார்?** என்னும் நூல்.

அரும்பெரும் பொக்கிஷமான சித்தர் பாடல்களை மையமாக வைத்து வேதங்கள். வேதாந்தங்கள். உபநிடதங்கள். பல்வேறு காலங்களில் பல்வேறு சூழல்களில் தோற்றம் பெற்ற இலக்கண இலக்கியங்கள் போன்றவற்றின் கருத்துக்களின் சாரமாக இந்நூல் விளக்குவது வியப்பிற்குரிய ஒன்றாகும். இதுவரை இவர் எழுதி வெளியிட்ட அனைத்து நூல்களின் மகுடமாக இந்நூல் விளங்குவது மகிழ்வுக்குரிய ஒன்றாகும்.

சித்தர்கள் தாம் வாழ்ந்த நாட்களில் எந்த அரசனையோ, அரசியல் அமைப்புகளையோ, சமயத்தலைவர்களையோ சார்ந்து வாழந்தாக வரலாற்றுச் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. சமுதாயத்தில் இருந்த இந்த அமைப்பு முறைகளை எதிர்த்தும், மறுத்தும் குரல் கொடுத்து வாழ்ந்தவர்கள். இவர்கள் சமுதாயத்தின் புரட்சியாளர்களாக வருணிக்கப் பட்டனர்.

மதவெறிகளைக் கண்டித்தும், சாதி சமய சண்டைகளை ஏளனம் செய்தும், பொருளற்ற வெறும் சடங்குகளை கடிந்து உரைத்தும் துணிச்சல் மிகுந்த புரட்சியாளர்களாக இவர்கள் வாழ்ந்து வந்தனர். இத்தகைய தெய்வீக மனிதர்களை ஏற்றுக் கொள்ள முடியாத மதவாதிகள், இவர்கள் எழுதிய ஆயிரக்கணக்கான ஏடுகளை அடியோடு அழித்து விட்டதுமன்றி இவர்களைத் துன்புறுத்தி மகிழ்ந்தும் இருக்கின்றனர். இவையனைத் தையும் தாண்டி தப்பி நின்ற சில ஏடுகள் மட்டுமே நம் கைகளில் இன்று கிடைத்துள்ளன. கடவுள் தங்களுக்கு அளித்த வியத்தகு வலிமையால், இவர்கள் ஆற்றிய ஒவ்வொரு செயல்பாட்டிலும் இறைவாக்காளர்களின் நிழலை நம்மால் தெளிவாக காணமுடிகிறது.

திரு. தாயப்பன் அவர்கள், சித்தர்களின் பாடல்களில் பரவியிருக்கும் கிறித்தவத்தை, கிறித்தவம் வெளிப்படுத்தும் கடவுளை, கடவுள் கோட்பாட்டை ஆழ்கடல் முத்தென நம்முன், வைக்க முயன்றிருக்கின்றார். இந்நூலின் ஆசிரியர் திரு. தாயப்பன் அவர்களின் இந்த அரும்பெரும் பணிக்குக் கிறித்தவ ஆய்வுலகம் வாழ்த்துக்கூற கடமைப்பட்டிருக்கிறது.

கொல்கொதா என்னும் குன்றேறி உயிர் நீத்து, ஈமப்புறங்காடாம் கல்லறையில் உயிர்த்தெழுந்து, சாவை வென்று வெற்றிநடம் புரிந்த நடராச பெருமானின் அருள் அவரோடு இருந்து வழிநடத்தி, இன்னும் பல நூல்களைப் படைக்க துணைபுரிவராக.

10.4.2001 அன்புடன்

சென்னை **முனைவர் ஏ. ஜான்சன் தங்கையா**

பொருளடக்கம்

ஒரே தெய்வம் 10
விக்கிரஹஙகளில் இல்லாத கடவுள் 13
ஒளியாக வந்த தெய்வம் 21
குருவாக வந்த தெய்வம் 26
பரிசுத்தமான தெய்வம் 30
சிருஷ்டிப்பில் இல்லாத தெய்வம் 32
உருவமில்லாத தெய்வம் 34
ஈடு இணையில்லாத தெய்வம் 39
மனித அவதாரம் எடுத்த கடவுள் 42
நமக்காக பலியாகிய தெய்வம் 53
உண்மையான கடவுள் 61
நாமாவளிகள் போற்றும் தெய்வம் 63
உண்மையான தெய்வத்தை சொல்லும் வேதம் 67

உண்மையான கடவுள் யார்?

நாகரீகம், கலாச்சாரம், பண்பாடு, சமூகவியல், வானவியல், கணிதம், ஜோதிடம், சித்த மருத்துவம், இயல், இசை, நாடகம் போன்றவைகளில் மாத்திரமல்ல, ஆன்மீகத்திலும் இந்த உலகுக்கு ஒரு முன்னோடியாகவே நமது திராவிட இந்தியா இருந்துள்ளது. பக்தி இயக்கங்கள் பலுகிப் பெருகி இறைத் தேடலலிலும் நாம் முன்னோடிகளாகவே இருந்திருக்கிறோம். உலகில் இருக்கும் பெரிய மதங்களாக கருதப்படும் இந்து மதம், புத்த மதம், சமண மதம், சீக்கிய மதம் எல்லாம் தோன்றியது நமது தேசத்தில் தான். கிறிஸ்வமும், இஸ்லாம் மதமும் தோன்றியது நமது ஆசியாக் கண்டத்தில் தான். உலகத் திருமறையாக கருதப்படும் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் பிறந்தது நமது நாட்டிலே தான்.

அதே போல 63 நாயன்மார்களும், 13 ஆழ்வார்களும் பிறந்தது நமது இந்திய மண்ணில் தான். அவர்கள் உள்ளம் உருகி, நெக்குறுகி, கண்ணீர் மல்க பக்திப் பரவசத்தில் பாடிய தேவாரம், திருவாசகம், நாலாயிரம் திவ்யப் பிரபந்தம், பிரம்ம சூத்திரம், சிவஞான போதம், அக நானூறு, புற நானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம், ராமாயணம், மஹாபாரதம் போன்ற எண்ணி மாளாத பக்தி மணம் கமழும் பாடல்களும், காவியங்களும், காப்பியங்களும் நமது நாட்டில் தோன்றியவைகளே. இத்தனை வானுயர்ந்த கோயில்களும், கோபுரங்களும், புண்ணிய ஸ்தலங்களாக கருதப்படும் இடங்களையும் வேறு எந்த நாட்டிலேயும் ஒருவராலும் காணவே முடியாது.

நமது நாட்டு மக்களின் பக்திக்கு ஈடு இணை எதுவுமே கிடையாது. விரதம் இருத்தல், நேர்த்திக் கடன், பிரார்த்தனை செலுத்தி காலில் செருப்பு இல்லாமல் கோயிலுக்கு பல மைல்கள் நடத்தல், தீ மிதித்தல், காவடி, இருமுடி எடுத்தல், முடி காணிக்கை, அங்கப் பிரதட்சணம், அலகு குத்தல், தலையில் தேங்காய்

உடைத்தல் என இப்படி தெய்வத்திற்காக அர்ப்பணம் செய்து, பய பக்தியோட செய்யும் பூஜை புனஷ்காரங்கள் உண்மையிலேயே யாரையும் புல்லரிக்க வைக்கும். ஆனால் இத்தனையையும் நாம் எந்த தெய்வத்திற்கு செய்கிறோம்? நம்மைப் படைத்த கடவுளுக்கா? அல்லது நாமளே உருவாக்கிய கடவுளுக்கா? அப்படியே நாம ஒரு கடவுளை மட்டுமா உருவாக்கி இருக்கிறோம்? முப்பத்தி முக்கோடி தேவர்களையல்லவா நாம உண்டாக்கி இருக்கிறோம்! நம்மையும் இந்த பிரபஞ்சத்தையும் உண்டாக்கியது உண்மையிலேயே ஒரு கடவுளா? அல்லது பல கடவுளர்களா? அந்தக் கடவுளுக்கு என்ன பேரு? அந்தக் கடவுள் யாரு? யோசிக்க யோசிக்க தலை சுத்துகிறது.

ஊஹீம். நம்மால கண்டு பிடிக்க முடியாது. நாம என்ன தான் படிச்சு, பட்டம் வாங்கி பெரிய பெரிய உத்தியோகத்தில இருந்தாலும், ஒரு பெரிய சயன்டிஸ்ட்டா இருந்தாலும் சரி, இந்த கடவுள் விஷயத்தைப் பொறுத்த மட்டுல நாம எல்லோருமே வெறும் ஆட்டு மந்தைகள் தான். நம்ம அப்பா அம்மா, தாத்தா பாட்டி, ஃபாலோ பண்ணினதை அப்படியே கண்ணை மூடிக்கிட்டு நம்பி நாமும் பின்பற்றுகிறோம். இந்த ஒரு விஷயத்தை மட்டும் நாம் அலசி ஆராய்ந்து பாக்குறதே இல்லை. சாமி கும்பிடும் போது மாத்திரமல்ல, டோட்டலாவே இந்த கடவுள் சம்பந்தப்பட்ட விஷயத்தில நாம எல்லாருமே ஒரேயடியா கண்ணை மூடித்தாம் இருக்கோம்.

அதுனால தேவையில்லாம நம்ம மண்டையைப் போட்டு குழப்ப வேண்டாம். அப்படி குழப்பினா குழப்பம் தான் மிஞ்சும். அதுனால இது விஷயமா பல காலம் அலசி ஆராய்ந்து, தியானம் பண்ணி, தவமிருந்து தெய்வ தரிசனம் பெற்ற, தெய்வ கடாட்சம், அனுபூதி பெற்ற ஞானிகள், தபசிகள், முனிவர்கள், சித்தர்கள் இது குறிச்சு என்ன சொல்லி இருக்கிறாங்கன்னு பாக்கலாமா? அவங்க எழுதிய வேதங்கள், வேதாந்தங்கள், உபநிஷத்துக்கள், சூத்திரங்கள் என்ன சொல்லுதுன்னு பார்க்கலாமா? அது தானே புத்திசாலித்தனம்?

ஒரே தெய்வம்

இந்த வானத்தையும் பூமியையும், எண்ணி முடியாத கோடானு கோடி கோள்களையும், நட்சத்திரங்களையும், ஜீவ ராசிகளையும், மனிதரையும் படைத்த தெய்வம் ஒன்றே ஒன்றாகத் தான் இருக்க முடியும். பல கடவுள்களோ, முப்பத்தி முக்கோடி தேவர்களோ இருக்க முடியாது. ஆக்கல், அழித்தல், காத்தல் எனும் முத்தொழிலைச் செய்யும் முப்பெரும் தெய்வங்களாக இந்து மத புராணங்கள் சித்தரிக்கும் சிவன், விஷ்ணு, பிரம்மா மூவருக்குள்ளுமே ஒற்றுமை இருந்ததில்லை என்றும், அவர்களின் தேவியரிடையேயும் நல்லுறவு இல்லாமல் போட்டி, பொறாமை, பூசல்கள் இருந்தன என்பதற்கும் சான்றாக எத்தனையோ நிகழ்வுகளை இந்து சமய புராணங்களில் காண முடியும். எந்த குழப்பமும்

இல்லாமல், படைக்கப்பட்ட அனைத்துமே அதனதன் நியமத்திலே அதனதன் நோக்கிலே ஒழுங்கும், கிரமமுமாக இயங்கிக் கொண்டிருக்கும்படியாக இவைகள் அனைத்தையும் சிருஷ்டித்தவர் ஒருவராகத் தான் இருக்க முடியுமே ஒழிய பலராக இருக்கவே முடியாது.

ஊர் ஊருக்கு ஒரு தெய்வம் இருக்கு. ஜாதிக்கு ஒண்ணு, இனத்துக்கு ஒண்ணு, மதத்திற்கு ஒண்ணு, ஒவ்வொரு மனிதத் தேவைகளுக்கென்று ஒண்ணு (திருமணம், குழந்தை பெறுதல், நோய் தீர்த்தல், கல்விக்கு, ஞானத்துக்கு, ஐசுவரியத்திற்கு, பில்லி சூன்யக் கட்டுக்கள் நீங்க என இப்படி எண்ணற்ற தேவைகள்) என பல தெய்வங்கள் இருக்கிறதைப் பார்க்கிறோம். நம்மோடு வாழ்ந்த மனிதர்களையும், மரித்த நம் உறவினர்களையும், ஏன் ஆடு மாடு, சிங்கம், புலி, குரங்கு, செடி, கொடி, மலை, ஆறு, கடல் என எல்லாவற்றையும் நாம தெய்வமாக்கிடுறோம்.

கோடிக்கணக்கில பணம் வாங்கிக்கிட்டு நடிக்கிற சினிமா நடிகர்களையும், நடிகைகளையும் கூட நாம விட்டு வைக்கலை. அவர்களையும் தெய்வமாக்கி, அவர்களுக்கு கோவில் கட்டி, பூசைகள் செய்கிறோம். மனிதர்களின் இந்த அறியாமையை, மூட நம்பிக்கையை பயன்படுத்தி தன்னையே தெய்வமாக, கடவுள் அவதாரமாகக் காட்டிக் கொள்ளும் எண்ணி நிறைந்த பித்தலாட்ட, போலி சாமியார்களையும், ஆன்மீக குருக்களையும், ஒரு சிலைக்கு கீழே தியான நிலையில உட்கார்ந்துள்ள மாதிரி போட்டோ எடுத்து தன்னையே அந்த தெய்வ அவதாரமாகக் காட்டும் மனிதர்களையும், பெண் சாமியார்களையும் நாம் பார்க்கிறோம். ஒரு ஊர்ல, பகுதியில, தேசத்தில இருக்கிற தெய்வத்தின் பெயர் மற்ற ஊர், பகுதியில, தேசத்தில யாருக்குமே தெரியாது. இப்படிப்பட்ட நிலையில தெய்வம் ஒன்றா, பலவா, பற்பலவா? கேள்வி எழுகிறது. இது குறித்து நம் நாட்டு சித்தர்கள், ஞானிகள், வேதாந்தங்கள் என்ன சொல்கிறது என்று பார்க்கலாமா? இது குறித்து கொங்கண முனிவர் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்.

“கடவுளோன் ஒருவன் உண்டே – வேதம் ஒன்றே
காரண சற்குரு தீட்சை தானும் ஒன்றே
அடைவுடனே அவர் அருளும் பதவி ஒன்றே
அப்புவியில் மனுப்பிறவியான தொன்றே
நடைவழியும் பல மனுவோர்க் கொன்றேயல்லால்
நாலு வேதம் ஆறு சமய நடக்கை வேறாய்
திடமுடனே தேவர் பல உண்டென்போர்கள்
தீ நரகுக்காளாவார்கள் திண்ணம் தானே”

(பொருள்: கடவுள் ஒன்றே! வேதம் ஒன்றே! பதவி ஒன்றே! பிறவியும் ஒன்றே! இவைகளையன்றி 4 வேதங்கள் 6 சமயங்கள் என்றும், பல தேவர்கள் உண்டென்றும் கூறுபவர்கள் நரகத்திற்கு ஆளாவார்கள்.)

ஞான வெட்டிக் கொச்சகம் 51ம் பாடலில்

> **"உங்கள் தெய்வம் எங்கள் தெய்வம்**
> **உண்டெனவும் வேறு செய்து**
> **பங்கமதாய் வேறு செய்யும்**
> **பாதகரே அங்குமிங்கும் எங்கும் நிறைந்த**
> **ஈசன் என்று அறிகிலீரே"** என்று எழுதப்பட்டுள்ளது.

(பொருள்: ஆளுக்கொரு தெய்வம் உண்டென்று சொல்லும் பாதகரே! தெய்வம் எங்கும் நிறைந்து இருக்கிறார் என்று நீர் அறியாமல் இருக்கின்றீர்)

மேலும் சித்தர் பாடல்கள் என்ற புத்தகத்தில் அகஸ்தியர் ஞானம் 9ல் 4வது பாடல் (பக்கம் 239)ல்

> **"ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்,**
> **உத்தமனாய்ப் பூமிதனிலிருக்க வேணும்,**
> **பருவமதிற் சேறு பயிர் செய்ய வேணும்**
> **பாழிலே மனத்தை விடான் பரம ஞானி:**
> **திரிவார்கள் திருடரப்பா கோடா கோடி;**
> **தேசத்திற் கள்ளரப்பா கோடா கோடி;**
> **வருவார்களப்பனே அனேகங் கோடி**
> **வார்த்தையினால் பசப்புவார் திருடர் தானே"**

என்று அகத்திய முனிவர் பாடுகிறார்.

(பொருள்: ஒரே தெய்வத்தை வணங்கிட வேண்டும். உத்தமமாக வாழ வேண்டும். பருவத்தில் பயிரிட வேண்டும், வீண் விஷயங்களில் மனதை செலுத்தக் கூடாது. தங்கள் நாவன்மையால் மக்களை ஏமாற்றி திரியும் திருடர்களிடம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்)

முக்காலத்தையும் உணர்ந்த, தீர்க்க தரிசிகள் எனக் கூறப்படும் நம் நாட்டு சித்தர்கள் ஞானிகள் அனைவருமே ஒருசேரக் கூறியிருக்கிறாங்க. கடவுள் ஒருவரே என்று அழுத்தம் திருத்தமா சொல்லிட்டாங்க. அப்படி நாம பல கடவுள்களை கும்பிட்டா, நம்மைப் படைச்ச அந்த உண்மையான கடவுளையே நாம அவமானப்படுத்துகிறோம்னு ஆயுடும். அது நமக்கு பெரிய சாபத்தைத் தான்கொண்டு வரும். பரிசுத்த வேதாகமும் ஒரே ஒரு கடவுள் தான் இருக்கிறார்னு 1 தீமோத்தேயு 2ம் அதிகாரம் 5,6 ல அழுத்தம் திருத்தமாக கூறுகிறது "***தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே! இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.***"

மேலும் I கொரிந்தியர் 8ம் அதிகாரம் 5,6 வசனம் கூறுகிறது "***வானத்திலேயும்***

பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவனே நமக்குண்டு. அவராலே (தான்) சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது" என்று கூறுகிறது.

இந்த பிரபஞ்சத்தையும் சகல ஜீவராசிகளையும், நம்மையும் படைத்த தெய்வம் பல அல்ல. அவர் ஒருவரே. அவர் தான் இயேசு கிறிஸ்து என்ற திரியேக தேவன். பாவத்தில் விழுந்து போன நம் அனைவரையும் மீட்க மனித அவதாரம் எடுத்து வந்த கடவுள் அவர் ஒருவரே. அந்த ஒரே கடவுளான இயேசு கிறிஸ்து நமக்கு எப்படியெல்லாம் வெளிப்படுகிறார் என்று மேற்கொண்டு நாம் பார்க்கலாமா?

விக்கிரஹறங்களில் இல்லாத கடவுள்

கடவுள் இருக்கிறார். ஆனா அவர் எங்கே இருக்கிறாரு? வானத்திலா? பூமியிலா? சூரியனிலா? சந்திரனிலா, நவகிரஹங்களிலா? கோயிலிலா? குளத்திலா? நதியிலா? கடலிலா? அரசமரத்திலா? துளசி செடியிலா? கர்ப்பக்கிரஹத்தில் இருக்கும் சிலையிலா? வீட்டு பூஜை அறையில் இருக்கும் சுவாமி படத்திலா? குத்து விளக்கிலா? சிலுவையிா? அவர் எங்கே இருக்கிறாரு? கடவுளை நேரடியாகப் பார்த்தவங்க யாராவது இருக்காங்களா? இல்லையே! அவருடைய அன்பை, அருளை, வல்லமையை, அபிஷேகத்தை, பிரசன்னத்தை, மகிமையை உணர்ந்தவங்க இருக்கிறாங்க.

ஆனா நாம அதிகம் கடவுளை எங்கே தேடுறோம்? கோயில்ல இருக்கிற விக்கிரஹங்களிலேயும், வீட்டு பூஜை அறைகளில இருக்கிற படங்களிலேயும் தானே தேடுறோம்? இல்லேன்னா சில சுலோகங்கள், மந்திரங்களைப் படிக்கிறதில அல்லது சொல்றதுலேயே ஒரு திருப்தி அடைஞ்சு, தெய்வத்துக்கிட்ட நாம அப்படியே சரணாகதி அடைஞ்சுட்டோம், அவர் பாதத்தில எல்லாத்தையும் கொட்டிட்டோம், இனி எல்லாத்தையும் அவர் பாத்துப்பாருன்னு நினைச்சு நம்மை நாமே ஏமாத்திக்கிடுறோம். பயபக்தியோட தான் தேடுறோம். மனதுருக்கத்தோட தான் மந்திரங்களை உச்சரிக்கிறோம், மனத்தாழ்மையோட தான் உக்கி போடுறோம், தலையில குட்டிக்கிடுறோம், சாஷ்டாங்கமா விழுந்து வணங்குகிறோம், பூஜை பண்றோம், மலர் தூவுறோம். நம்மோட மனசையோ, பக்தியையோ, செயல்களையோ நிச்சயமா யாருமே எந்தக் குறையுமே சொல்லவே முடியாது. ஆனா நம்ம மனசை, பக்தியை, செயல்களை புரிஞ்சுக்கிடுற சக்தி அந்த விக்கிரஹத்துக்கு, படத்துக்கு இருக்கா?

உண்மையிலேயே கடவுள் விக்கிரஹங்களிலேயும், சூரியனிலும், சந்திரனிலும்,

நவக்கிரஹங்களிலேயும், மரத்திலேயும், செடியிலேயும், படத்திலேயும் இருக்கிறாராங்கிறதைப் பத்தி முற்றும் உணர்ந்த ஞானிகள், தபசிகள், சித்தர்கள் என்ன சொல்லி இருக்காங்க? வேதங்கள், வேதாந்தங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள் இது விஷயமா என்ன சொல்லுதுன்னு பார்ப்போமா? யாரோட மனசையும் புண்படுத்தணும்கிற நோக்கத்திலேயோ, பாரம்பரியமா நாம செஞ்சுட்டு வர்ற ஒரு பயபக்தியான செயலை கிரிட்டிசைஸ் பண்ணனுங்கிறதுக்காகவோ இதை நான் எழுதலை. இவ்வளவு ஆத்மார்த்தமா நாம செஞ்சும் அதுக்கு எந்த பலனுமே கிடைக்காம போயிடக் கூடாதேங்கிற அந்த கழிவிரக்கத்தில, உண்மையான ஆதங்கத்தில தான் இதை எழுதுறேன். உண்மையை, சத்தியத்தை தெரிஞ்சுக்கிட்டு, நம்மோட பக்திக்குரிய பலனைப் பெறணுங்கிறதுக்காகத் தான் இந்த நூலையே எழுதுறேன்.

போகர் ஏழாயிரம் 6ம் காண்டம் 255வது பாடலிலே போக முனிவர் நம்மோட சாஸ்திரங்கள், தத்துவங்கள், தியான மார்க்கங்கள் பத்தி என்ன சொல்றார்னு பாருங்க. (மேற்கோள் – அகத்தியர் ஞானம் – பக்கம் 78)

"பேசியே வெகு கோடி மாந்தரெல்லாம்
பினாத்தினார் சாஸ்திரத்தின் குப்பை தன்னை
பூசிதங்கள் கொண்டல்லோ படுகுகாட்டி
புகழுடனே சாஸ்திரத்தை மெய்போற் சொல்லி
ஊசிதமாந் தத்துவங்கள் தியான மார்க்கம்
உறுதியுடன் நாதாக்கள் சொன்னதில்லை
வாசித்து நால்வேத மாறு சாஸ்திரம்
வகையுடனே கதை கட்டி உரைத்திட்டாரே"

சிவ வாக்கியர் கண்ணுல கண்டதை எல்லாம் கடவுள்னு கும்பிடாதீங்கன்னு சொல்லி நம்மை எச்சரிக்கிறார் (மேற்கோள் முக்தி வழி – பக்கம் 312).

"அண்ணலாம் பரமசோதி அற்புதம் அறியாததாலே
கண்ணிலே கண்டதெல்லாம் கதி தரும் கடவுள் என்று
மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான்முறைப்படி யிதென்ன
எண்ணியே நடந்து மோட்சம் இழந்து எரிநரகில் வீழ்வார்"

அது மாத்திரமல்ல, இன்னிக்கு ஆன்மீகப் போர்வையில எத்தனையோ போலி சாமியார்கள், சந்நியாசிகள், குருக்கள், தெய்வ அவதார புருஷர்கள் என்று சொல்கிறவர்கள் மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்து கோடீஸ்வரர்களாக உலா வருகிறார்கள். இப்படி வருகிற பக்தர்களின் பணத்தில காலேஜ், ஸ்கூல் என்று ஆரம்பிச்சு, ஊரையே விலைக்கு வாங்கி, சொத்து சேர்க்கிறாங்க. அவங்க தனிப்பட்ட வாழ்க்கை அவங்க சொல்ற உபதேசத்திற்கும், சந்நியாசி வாழ்க்கைக்கும் கொஞ்சங்கூட சம்பந்தமே இல்லாதவாறு இருப்பதை இன்று அனுதினமும் பேப்பர்களிலே பாக்குறோம்.

அப்படிப்பட்ட போலி ஆன்மீக குருக்கள் செய்த சில சமூக விரோத செயல்கள், கொலை, கற்பழிப்பு போன்ற தீய செயல்களுக்காக ஒரு சிலர் இன்னிக்கு ஜெயில்ல இருக்கிறாங்க. அவங்க மேலே கோர்ட்ல கேஸ்கள் நடக்குது, வருமானவரித்துறையின் ரெய்டுகள் நடக்குது.

இப்படிப்பட்ட ஆச்சார போலிகளைக் குறிச்சு எச்சரிக்கையா இருக்கணும்னு வால்மீக முனிவர் சொல்றார் பாருங்க. (ஞானக் கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள் வால்மீகர் சூத்திர ஞானம் 5,6 (பக்கம் 316).

“தானென்ற உலகத்தில் சிற்சில்லோர்கள்
சடை புலித்தோல் காசாயம் தாவடம் பூண்டு
ஊனென்ற உடம்பெல்லாம் சாம்பல் பூசி
உலகத்தில் யோகி என்பார், ஞானி என்பார்;
தேனென்ற சிவ பூசை தீட்சை என்பார்;
திருமாலைக் கண்ணாலே கண்டோம் என்பார்;
கானென்ற காட்டுக்கு அலைவார் கோடி
காரணத்தை அறியாமல் கதறுவாரே”

இதே கருத்தை சிவ வாக்கியவரும் சொல்லி ஒரு வாங்கு வாங்குகிறார் (மேற்கோள் – முக்தி வழி பக்கம் 150–51)

“சுற்றுவார் பெரு நூலை பார்த்துப் பார்த்து
துடிப்பார் உலகத்தில் சிற்சில்லோர்கள்!
தெற்றுவார் அவர் பிழைக்க அநேக வேடம்
தேகத்தில் அணிந்து கொண்டு திரிகுவார்கள்;
பற்றுவார் குருக்கள் என்பார், சீடரென்பார்
பையவே தீட்சை வைப்பார் தீமை என்பார்
கத்துவார் திருமூர்த்தி தாமே என்று
காரணத்தை அறியாத கசடர் தானே”

போலிச் சாமியார்களையும், கபட குருக்களையும் ஒரு பிடி பிடிச்ச சிவவாக்கியர் நம்மோட மூடநம்பிக்கைகளையும் ஒரு சாடு சாடுகிறார்.

“ஓசைபெற்ற கல்லை நீர் உடைத்து உருக்கள் செய்கிறீர்
பூசை பெற்ற கல்லுலே பூவும் நீரும் சாற்றுகிறீர்
வாசலிற் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
ஈசனுக்கு உகந்த கல் இரண்டு கல்லும் அல்லவே

ஈரமான பூவினோடு இலை பறித்து வீணிலே
நீரை மொண்டு கல்லிலே நித்தம் விட்டு மாய்கிறீர்
கால மூல நாடியுட் கருத்து ஒடுங்க வல்விராய்ச்
சீலமாக நாதனும் சிறந்திருப்பான் உள்ளே

நட்டு வைத்த தேவரும் நடாது வைத்த தேவரும்
சுட்டு வைத்த தேவரும் சுடாது வைத்த தேவரும்
இட்டு வைத்த இடத்தை விட்டு எழுந்திராத தேவரை
வட்டமிட்டு மாந்தர்கள் வணங்கும் வாறு எங்கனே!

நட்ட கல்லை தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்துகிறீர்
சுத்தி வந்து மூணுமூணு என்று சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ? நாதன் உள் இருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவங் கறிச்சுவை அறியுமோ?

மாறுபட்ட மணிகிலுக்கி மலர் இறைத்து வீணிலே
ஊறுபட்ட கல்லிலே உருக்கள் செய்யும் மூடரே
வேறுபட்ட தேவரும் விரும்புகின்ற உண்மையும்
கூறுபட்டது ஏது காண் குருக்கள் பூசை பண்ணுறீர்

சாவதான தத்துவச் சடங்கு செய்யும் மூடர்காள்
தேவர் கல்லும் ஆவாரோ? சிரிப்பதன்றி என் சொல்வேன்
மூவராலும் அறியவொணாத முத்தொழில் பகாப் பொருள்
காவலாக உம்முள்ளே கலந்திருப்பது உண்மையே"

சங்கராச்சாரியாரும் சகட்டு மேனிக்கு இப்படிப்பட்டவர்களை இடித்துரைக்கிறார். (மேற்கோள் – முக்தி வழி – பக்கம் 153–54)

"எத்தனை தான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ?
சுத்தமுடன் தலை முழுகித் தவஞ் செய்தாலும்
சொல்லறிய பேரின்பம் தோன்றுமா சொல்
பித்தர்களே கல்லுகளை விலைக்கு வாங்கி
பிரான் என்றே சீலையிலே முடித்துக் கொண்டு
செத்த பின்பு கயிலாசம் சேர்வோம் என்றால்
சேர்வது இல்லை எரிநரகம் சேர்வீர் தானே

சற்குருவை அறியாமல் உலகிலே தான்
சண்டாளர் கல்லுகளைத் தெய்வம் என்று
பொய்க் குருக்கள் சொன்ன புத்தி தன்னைக் கேட்டு
பூசை செய்து கற்களையே போற்றி செய்வார்
சொற்குருக்கள் தங்களுட செய்தி கேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமல்லால் சொல்லும் போது
சற்குருவை அறிந்தவருக்கு உடனே மோட்சம்
சார்வார் என்றே முன்னோர்கள் சாற்றினாரே

வட்டமதி ரவி தன்னைப் பூசிப்போரும்
மண்ணை லிங்கமாக வைத்துப் பூசிப்போரும்
சுட்ட உரு மரச்சிலைகள் பூசிப்போரும்
தூய செம்பு கல்லுருவைப் பூசிப்போரும்
திட்டமுடன் எட்டெழுத்துப் பொருள் என்போரும்
சிறந்த எழுத்து ஐந்துமே பொருள் என்போரும்
விட்ட இடந்தன்னை அறியார் அவர் தாமெல்லாம்
விஷ்ணு என்றும் சிவன் என்றும் விளம்புவாரே"

பட்டினத்தாரும் பட்டறிந்து படிச்சுப் படிச்சு பதறிப் போயி சொல்லுகிறார் பாருங்கள். (பட்டினத்தார் பொது 61).

"உள்ளிட்ட கல்லையும், ஒப்பிட்ட சாந்தையும், ஊத்தையுறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன் உயர்பொன் எனவே
ஒளியிட்ட தாள் இரண்டுள்ளே இருத்துவது உண்மை என்று
வெளியிட்டு அடைத்து வைத்தேன்; இனிமேல் ஒன்றும் வேண்டிலேனே"

பேரின்ப மணிமாலையும் இப்படிப்பட்டவர்களை விட்டு வைக்கவில்லை (முக்திவழி – மேற்கோள் பக்கம் 150–152, 153).

அந்தரவான் கதி புவனம் கீழ் மேல் எங்கும்
அடுக்கடுக்காய் நிறுத்தினவர் என்று எண்ணிச்
சிந்தையிலே உணராமல் புவியிலுள்ள
சிலையது தன்னைச் சுயம்பு லிங்க தேவன் என்று
புத்தியற்று பற்பல பூ எடுத்து நித்தம்
பூசை செய்து பலவிதமாய் புகழ்வது எல்லாம்
எந்தை பராபருக்கு இவைகள் ஏற்குமோ தான்?
எரிநரகப் பேய்க்கு இணங்கும் என்பதாமே!

செம்பினால் மரத்தால் மண்ணால்
சிலையினால் செங்கல் தன்னால்
பைம்பொன்னால், மெழுகால் நீற்றால்
படிகத்தால் உருப்படுத்தி
நம்பியே தெய்வம் என்று
நாள்தோறும் தொழுவோர் எல்லாம்
உம்பர்கோன் பதி இழந்து
உழலுவார் நரகில் தானே!

இனி விக்கிரஹ ஆராதனையை கடுமையாக கண்டித்து நமது புராணங்களே என்ன சொல்லுதுன்னு 'வேத சமாஜ விண்ணப்பம்'கிற புத்தகத்தில் ஒரு மகா பெரிய பண்டிதரே எழுதியிருக்கிறார். அவைகளையும் படிச்சுப் பாருங்க. (அகத்தியர் ஞானம் – டாக்டர் ஞானசிகாமணி – பக்கம் 120–122).

உத்தர கீதையில சொல்லப்பட்டு இருப்பது

**"அக்நிர் தேவோ த்விஜாதீ நாம்
முநீநாம் ஹிருதி தைவதம்
ப்ரதிமாஸ் வபரபுத்தாநாம்
ஸர்வத்ர ஸமதர்ஸிந:"**

இதன் பொருள்: பிராமணர்களுக்கு தெய்வம் அக்கினியில், முனிவர்களுக்குத் தெய்வம் இருதயத்தில், புத்தி குன்றியவர்களுக்குத் தெய்வம் விக்கிரஹத்தில், சமமான அறிவுள்ளவர்களுக்கு எங்கும் தெய்வம்;

ஸ்கந்த புராணத்தில ஞான யோக காண்டத்தில நாடி சாக்கிராத்தியாத்ல என்ன சொல்லி இருக்குன்னு பாருங்க.

**"தீர்த்தே தானே தபோ யக்ஞே
காஷ்டே பாஷாணகேபதா
ஸிவம் பஸ்யதி மூடாத்மா
ஸிவோ தேஹே ப்ரதிஷ்டித"**

பொருள்: மூடாத்துமாக்கள் தீர்த்தத்திலும், தானத்திலும், தபசிலும், யக்ஞத்திலும், கட்டையிலும், கல்லிலும் சிவன் இருப்பதாக நினைக்கிறார்கள். சிவனோ நமக்குள்ளே இருக்கிறார்.

அதே ஸ்கந்த புராணத்தில மேலும் சொல்கிறதாவது.

**"ஸிவம் ஆத்மநி, பஸ்யந்தி, ப்ரதிமாஸு ந யோகிந:
அக்ஞானம் பாவநாத்தாய ப்ரதிமா பரிகல்பிதா"**

பொருள்: யோகிகள் சிவனைத் தமக்குள்ளே காண்பார்களே அன்றி விக்கிரஹங்களில் காணார். அஞ்ஞானிகளுக்கு பாவனார்த்தமாக விக்கிரஹங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன.

அடுத்து சாதா தப வசனம் என்ன சொல்லுதுன்னு பாருங்க.

**"அப்ஸு தேவ மனுஷயாணாம்
திவி தேவா மநீஷிணாம்
காஷ்ட லோஷ்டே ஷீமுடாநாம்
யக்த ஸ்யாத்மநி தேவதா"**

பொருள்: சாதாரண மனிதருக்கு தெய்வம் நீரில், சற்று தெளிந்தவர்களுக்குத் தெய்வம் ஆகாசத்தில். முட்டாள்களுக்குத் தெய்வம் கல்லிலும் கட்டையிலும். யோகிகளுக்குத் தெய்வம் அவர்களுக்குள்ளே. மஹா நிர்வாணத்தில 'இவ்வித சுபாவங்களை அனுசரித்து பலவிதமான உருவங்கள் அற்ப புத்தியுள்ளவர்களின் நிமித்தம் கற்பிக்கப்பட்டன' என்று எழுதப்பட்டுள்ளது.

"ஏவம் குணாநுஸாரேண
ரூபாணி விவிதாநிச
கல்பிதாநி ஹதார்த்தாய
பக்தாநி அல்ப மேதஸாம்"

ஆண்டவர் விக்கிரஹ ஆராதனையை அறவே அருவருக்கிறார், வெறுக்கிறார் என பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. அது தேவ கோபத்தையும், சாபத்தையும் கொண்டு வரும் என்று கீழ்கண்ட வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. '*அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப் போல நீ சாபத்திற்கு உள்ளாகாதபடிக்கு அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போவாயாக.. அது சாபத்துக்குள்ளானது* – (உபாகமம் 7:25,26).

– "*யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார்*" – உபாகமம் 16:22

– "*அவர்கள் வேறே தேவர்களிடத்தில் (விக்கிரஹ தேவர்களிடத்தில்) திரும்பி, அவர்களை சேவித்து, எனக்கு கோபமூட்டி, என் உடன்படிக்கையை மீறுவார்கள்*" – உபாகமம் 31:20

– "*அந்நிய தேவர்களை பின்பற்றாமலும், அவைகளுக்கு ஆராதனை செய்யாமலும், அவைகளைப் பணியாமலும் இருந்து, நான் உங்களுக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்களின் கைகளின் செய்கையினால் எனக்கு கோபமூட்டாமலும் இருங்கள்*" – எரேமியா 2:5,6

– "*கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கை வேலையால் செய்யப்பட்டதும், வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரஹத்தையும் உண்டு பண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்*" – உபாகமம் 27:15

– '*விக்கிரஹங்களை உருவாக்குகிற யாவரும் வீணர். அவைகள் ஒன்றுக்கும் உதவாது*" – ஏசாயா 44:9

– "*அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், தோத்தரியாமலும் இருந்து தங்கள் சிந்தைகளினாலே வீணர்கள் ஆனார்கள். உணர்வில்லாத அவர்கள் இருதயங்கள் இருள் அடைந்தது. அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்*" – ரோமர் 1:19,21,23

மனிதர்களால் படைக்கப்பட்டவைகளை வணங்குவது பாவச் செயலாகும். அதே போல கடவுளை மட்டுமே சேவிக்கணுமே தவிர, அவர் படைச்ச சூரியனையும்,

சந்திரனையும், கோள்களையும், கிரஹங்களையும், நட்சத்திரங்களையும், ஆடுமாடுகளையும், விலங்குகளையும், மரத்தையும், செடிகளையும் வணங்குவது கடவுள் வழிபாடு ஆகாது.

உருவ வழிபாடு செய்கின்றவர்கள் தங்களுடைய செயல்களுக்கு நியாயம் கற்பிக்க எத்தனையோ நியாயங்களை; வாதங்களை வைக்கலாம். 'கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். அவர் இந்த உருவங்களிலேயும் இருக்கிறார். நாங்கள் இந்த சிலைகளையோ உருவங்களையோ வணங்கவில்லை. காணாத கடவுளை பூஜிப்பதற்கும் நாங்கள் எங்கள் கண்களால் காணும் ஒன்றை முன்னிருத்தி, எங்களுடைய சிந்தனைகள் சிதறாதபடிக்கு மனம் ஒருமனப்பட்டு இறைவனை சேவிப்பதற்காகவே இவைகளை வைத்திருக்கிறோமே அல்லாமல் இந்த சிலைகளை வழிபடுவதற்கு அல்ல என்று ஆயிரம் காரணங்களைக் கூறினாலும் அது கடவுள் வழிபாடு ஆகாது.'

"***உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர்கள் கையால் கட்டிய திருக்கோயில்களில் அவர் குடியிருப்பது இல்லை***" என்று அப்போஸ்தலர் 17:24 வசனம் கூறுகிறது. அவர் குடியிருக்க விரும்புவது நமது இருதயங்களில் மட்டுமே. இதையே திருமூலர் '**உள்ளம் பெருங்கோயில். ஊனுடம்பு ஆலயம்**' என்று திருமந்திரம் 1823ல் கூறுகிறார். மாணிக்கவாசகர் '**மனத்திடை மன்னிய மன்னே**' என்று கோயில் திருப்பதிகம் 5ல் கூறுகிறார்.

'**அந்தர்யாமி வித்தை**' – கடவுள் சூக்கும வடிவினன் என வேதாந்தங்கள் கூறுகின்றன. '**அஹம் சர்வஸ்ய சாஹம், ஹ்ருதிஸன்னிவிஷ்ட**' என கீதை 15–15ல கண்ணன் சொல்கிறார். '**நான் எல்லோருடைய உள்ளங்களிலும் வீற்றிருக்கிறேன்**' என்று.

கடவுளுக்கு உருவம் இல்லை. அவர் அரூரூபமாக இருக்கிறார். ஆவியாக இருக்கிறார். அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. அவர் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருக்கிறார் என்று தூணையும், துரும்பையும், கல்லையும், மண்ணையும் நாம வணங்கக் கூடாது. அவரை உள்ளத்திலே, நம்முடைய சிந்தனையில, உணர்வுகளிலே, ஆவியில, ஸ்பிரிட்ல உணர்ந்து அவரை ஆராதிக்க வேண்டும்.

அவருடைய கண்கள் உலா வந்து கொண்டு இருக்கின்றன. அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமே இல்லை என்று பயபக்தியோட, நேர்மையோட, உண்மையோட, உத்தமத்தோட, நீதியோட நாம் வாழ்ந்து அவரை கும்பிடணும். அதுவே உண்மையான ஆராதனை. அதுதான் அவருக்கு உகந்த ஆராதனை. கடவுளுக்குப் பிரியமான ஆராதனை. உள்ளத்தில ஆயிரத்தெட்டு அசிங்கமான, கேவலமான எண்ணங்கள், காமாந்தகார சிந்தனைகள், கோபதாபங்களை வச்சுக்கிட்டு கடவுளை கும்பிட்டா அதை அவர் ஏத்துப்பாரா?

'இந்த உலகத்தால் கறைபடாதபடிக்கு உங்களைக் காத்துக் கொள்கிறதே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாக இருக்கிறது' என வேதம் கூறுகிறது (யாக்கோபு 1:27). இந்த உலகத்தினுடைய இச்சைகளால், உலகப் பிரகாரமான வாழ்க்கையால், கோபதாபங்கள், எரிச்சல், வம்பு, வீம்பு, வைராக்கியம், பாவச் செயல்கள் எதுவும் கறைபடுத்தாபடிக்கு நம்மை காத்துக் கொள்ள வேண்டும்.

'நீங்கள் கறையற்றவர்களும், பிழை இல்லாதவர்களுமாக சமாதானத்தோடே அவர் சந்நிதானத்தில் காணும்படி ஜாக்கிரதையாக இருங்கள்' என்று II பேதுரு 3:14லேயும், *'உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாக இருக்கும்படி காத்துக் கொள்வீர்களாக'* என 1 தெசலோ 5:23லேயும் வேதம் கூறுகிறது.

மகா மகா பரிசுத்தமுள்ள அந்த சுத்த சுந்தரேஸ்வரன் நம்மோட உள்ளத்தில கோயில் கொள்ளணும்னா, நம்மோட உள்ளத்தில எப்பேர்ப்பட்ட சிந்தனைகள் இருக்கணும் தெரியுமா? *'உண்மை உள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதி உள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்'* என பிலிப்பியர் 4:8 சொல்கிறது.

இந்த பிரபஞ்சத்தைப் படைத்த கடவுள் ஒரு ஜீவனுள்ள தேவன். மகா பரிசுத்தமுள்ள பரமேஸ்வரன், சர்வ வியாபி, சர்வத்தையும் அறிந்த, சர்வ வல்லமையுள்ள சர்வேஸ்வரன் அவர், அன்பே உருவான அகிலாண்டேஸ்வரர், தாம் படைத்த மனுமக்கள் பாவத்தில விழுந்து கெட்டு சீரழிஞ்சு போயிடக் கூடாதேங்கிறதுக்காக, நமக்கு வர வேண்டிய ஆக்கினையை, தண்டனையை தாமே ஏற்றுக் கொண்டு பாவ விமோசனம் தருவதற்கு பரத்திலிருந்து இறங்கி அவதாரம் எடுத்த பாப விநாசகர், தியாகேஸ்வரர், விக்னேஸ்வரர் இயேசு கிறிஸ்து ஒருவரே. அவரே உண்மையான தெய்வம்.

அவர் கல்லிலோ, விக்கிரஹத்திலோ கையால் வார்க்கப்பட்ட சிலைகளிலோ வாசம் பண்ணுகிறதில்லை. அவர் நம் இருதயங்களிலே வாசம் பண்ணுகிறார். கடவுள் மனிதனாகப் பிறந்ததை வேதாந்தம் **'ரூப உபன்யாசாத்'** என பிரம்ம சூத்திரம் (1.2.23) கூறுகிறது. அவரின் பிறப்பு மிகவும் தூய்மையானது என்பதை **'திவ்யம் ஜென்மா'** என பகவத் கீதை கூறுகிறது.

ஒளியாக வந்த தெய்வம்

இந்த அண்டத்தையும், பிண்டத்தையும் படைத்த சர்வ வல்ல தேவனாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு ஒளியாக வந்தார் என சித்தர் பாடல்கள் புத்தகத்தில் பட்டினத்தார் பாடல்கள் (பக் 383) 115வது பாடலாகவும், அதே புத்தகத்தில் திருத்தலங்கள் 30ல் 326வது பாடலாகவும் (பக் 129) பட்டினத்தார் எவ்வளவு அழகாகப் பாடி இருக்கிறார் பாருங்கள்.

"எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முனைத்தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்
பட்டப்பகலை இரவென்று கூறிடும் பாதகரே"

(பொருள்: பட்டப் பகலை இரவென்று சாதிப்பதைப் போல மூடர்கள், எங்கும் நிறைந்து ஒளி தருகின்ற ஜோதியான உண்மைக் கடவுளை மறைத்து, பொய்யை கடவுள் என்று பரப்புகிறார்கள்)

மேலும் கௌதமர் விருத்தத்தில் பல அருமையான கருத்துள்ள பாடல்கள் உள்ளன. அவற்றிலிருந்து இரண்டே பாடல்களை மட்டும் பார்ப்போம்.

"சற்குருவின் பெருமைதனை உலகுதன்னிற்
தானறியச் சாற்றுகின்றோம் சார்ந்து கேளீர்
சற்குருவாய் எவ்வுயிர்க்கும் தானே தானாய்
சகல ஜீவ ஆன்மாவின் குருவுமாகி
சற்குருவே பேரொளியாய் நின்ற ஜோதி
தாரணியில் மானிடத்தின் சட்டை சார்த்தி
சொற் குருக்கள் தங்களுக்கும் சீடர் போலாய்
புத்திமதி சொல்லியே புரிவோர் தாமே"

(பொருள்: உண்மை தெய்வத்தின் குணலட்சணங்களை கூறுகிறேன். கேளுங்கள்! அவர் அனைத்து உயிர்களுக்கும் குருவாகவும், ஒளியாகவும், மானுட உருவில், தன்னை பின்பற்றிய சீடர்களுக்கு புத்திமதி கூறுபவராகவும் உலகில் அவதரித்தார்)

"ஆதியந்தம் இல்லாத காலந்தன்னில்
அநாதியாய் நின்றது தான் பரம் என்றாகும்
ஆதியந்தம் படைத்த பரன் மனுவோர்க்காக
அறியாத குருவென வந்து ஆண்டதாகும்
ஒதியதோர் காரணங்கள் விளைந்தவாறும்
உபதேச உண்மைதனை உரைக்கக் கேளீர்
போதக அதி உன்னதமே புரக்கும் ஞானம்
புவிதனிலே நாமும் உமக்குப் போதித்தோமே"

(பொருள்: துவக்கமும் முடிவும் இல்லாத கடவுள் மனிதனுக்காக உலகத்தையும், காலத்தையும் படைத்து, அவனுக்கு குருவாக வந்து, போதனை செய்த உண்மைகளை நாங்கள் உங்களுக்கு போதிக்கிறோம்)

கௌதமரது மேற்கண்ட இப்பாடல்களின் கருப்பொருளை பார்க்கும் போது தெய்வம் ஒளியாக, மனிதனாக, குருவாக வந்து சீடர்களோடு மனிதர்களுக்கு உபதேசித்தார் என்பது தெளிவாகிறது. இதையே அகஸ்தியர் ஞானம் 30வது பாடலும் கூறுகிறது.

“வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனாகி
மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்தே – மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்தில் தான் உதித்து குருவாய் வந்து
சனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்ட தலம் சென்றவரை அண்டுவாயே”

(பொருள்: கடவுள் ஒருவரே! அவர் ஒளிமயமாக இருக்கிறார். இந்த உலகத்தை ஒரே நொடியில் அவர் படைத்தார். பின்பு மனிதனைப் படைத்தார். அவனுக்கு குருவாக அவரே வந்தார். மனைவி பிள்ளைகள் இல்லாமல் சந்நியாசியாக வாழ்ந்தார். தனது சீடர்களை இவ்வுலகில் விட்டு விட்டு விண்ணுலகம் சென்றார். அவரையே நீ வணங்குவாயாக!) என்று அகத்திய முனிவர் பாடுகிறார். அப்படி உலகத்தை படைத்த, மனிதனைப் படைத்த கடவுள் யார்? பிறகு குருவாக வந்து பரிசுத்தமாக வாழ்ந்து சீடர்களை விட்டுச் சென்ற தெய்வம் எது? அவர் தான் இயேசு கிறிஸ்து.

அவரே “*எந்த மனிதரையும் பிரகாசிக்கச் செய்பவரும், அந்த ஒளிமயமாகிய தேவனுடைய திருமைந்தராகிய இயேசு கிறிஸ்து*” என (யோவான் 1:9) கூறுகிறது.

அப்பேர்ப்பட்ட மெய்யான ஒளியாகிய மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவிடம் தன்னை இருளின் பிடியிலிருந்து நிலையாக விடுவித்துக் காக்கும்படியாக இரட்சணிய யாத்திரிகத்தில் மகாகவி கிருஷ்ண பிள்ளையும் கெஞ்சிப் பாடுகிறார் பாருங்கள்.

“மெய் ஒளியே! வித்தகமே! வேதத்தின்
விழுப்பொருளே! மேசியாவே!
துய்ய பரிசுத்தத் திரித்துவத்தில் ஒன்றாம் தனிச்
சுடரே! துரோக சிந்தை
வெய்ய பொருள் ஆசை நன்றி ஈனம் அன்பு
இலாமை மறம் விடர் சிநேகம்
எய்தி உமை அடியேனும் மறவாமல்
எனக்கருள் செய்திரங்குவீரே”

அப்படி இந்த உலகுக்கு ஒளியாக வந்தவர், ஒளியாக இருப்பவர், நம்மையும் இருளில் நடவாமல் ஒளியினிடத்திற்கு வரவழைத்து நம்மையும் பிரகாசிக்கப் பண்ணுகிற மெய் தெய்வம் யார் என்று வேதங்கள் கூறுகிறது பார்த்தீர்களா? அவர் இயேசு கிறிஸ்து ஒருவரே! அவர் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல. உலக மாந்தர் அனைவருக்கும் அவரே ஒளி, அவரே தேவன், அவர் ஒருவரே கடவுள்!

இந்தப் பாடலில் சொல்லப்பட்ட அம்சங்கள் நிறைந்த கடவுளைத் தேடாமல் நாம் எல்லோரும் வாழ்நாட்களை வீணாகக் கழித்துக் கொண்டு இருக்கிறோம் என்று சித்தர் பாடல்கள் புத்தகத்தில் 5ம் பக்கத்தில் சிவவாக்கியர் 'சரியை விலக்கல்' என்ற தலைப்பில் மூன்றாவது பாடலாக பாடி வருந்துகிறார்.

"ஓடி ஓடி, ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி, நாடி நாடி, நாட்களுங் கழிந்து போய்
வாடி வாடி, வாடி வாடி, மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி, கோடி கோடி எண்ணிறந்த கோடியே"

(பொருள்: சோதிமயமான கடவுளைத் தேடாமல் தங்கள் நாட்களை வீணடித்து விட்டு, உலகத்தில் மனமுடைந்து மாண்டு போனவர்கள் பல கோடி பேர்!)

ஜோதியாகிய தெய்வத்தைக் காணாதவர்கள் கோடான கோடி என்று வேதனையோடு தாயுமானவரும் பாடுகிறார். தாயுமானவர் பாடல்கள் புத்தகத்தில் (பக் 149) பாடல் 7ல் இறைவனை அவர் ஒளியாக, ஆனந்த ஜோதியாக வழிபடுகிறார்.

"உலக மாயையிலே எளியேன் தனை
உழல விட்டனையே உடையாய் அருள்
இலகு பேரின்ப வீட்டினில் என்னையும்
இருத்தி வைப்பது எக்காலம் சொலாய்? எழில்
திலகம் வாள்நுதல் பைந்தொடி கண் இணை
தேக்க நாடகம் செய்து, அடியார்க்கு எலாம்
அலகு இலாவினை தீர்க்கத் துஜங்கட்டும்
அப்பனே; அருள் ஆனந்த ஜோதியே!"

(பொருள்: மாயையான உலகில் என்னை பிறக்கச் செய்தாய், சோதியான தெய்வமே! நான் சொர்க்க நாட்டில் வந்து சேருவதற்கு எனக்கு அருள் புரிவாயாக!)

இன்னும் அவர் எப்படியெல்லாம் அந்த சர்வேஸ்வரனை சிலாகித்து தாயுமானவர் பாடல்கள் புத்தகத்தில் (பக் 122) 18ல், பொன்னை மாதரை (கலிவிருத்தம்) 22ம் பாடலில் பாடுகிறார் எனப் பாருங்கள்.

"ஜோதியே, சுடரே, சுகமே துணை
நீதியே, நிஜமே, நிறைவே, நிலை
ஆதியே, உனையான் அடைந்தேன்; அகம்
வாதியாது அருள்வாய் அருள்வானையே!"

பட்டினத்தாரும் கடவுள் ஒளியாக இருக்கிறார் எனப் பாடுகிறார் பாருங்கள்.

"எட்டுத் திசையும், பதினாறு கோணமும், எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை

மூடர் எல்லாம் கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பர்;
கருத்தில் வையார்;
பட்டப்பகலை இரவென்று கூறிடும் பாதகரே"
– பட்டினத்தார் பொது 30

"உள்ளிட்ட கல்லையும், ஒப்பிட்ட சாந்தையும், ஊத்தையுறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன்; உயர் பொன் எனவே
ஒளியிட்ட தாள் இரண்டுள்ளே இருத்துவது உண்மையென்று
வெளியிட்டு அடைத்து வைத்தேன்; இனிமேல் ஒன்றும் வேண்டிலேனே!"
– பட்டினத்தார் பொது 61

தாயுமானவர் பாடல் புத்தகத்தில் 42ல் கல் ஆலின் பகுதியில் 23ம் பாடல் (பக்கம் 230ல்) தாயுமானவர்

"ஜோதியாய் இருள் பிழம்பைச் சூறை ஆடும்
தூ வெளியே! எனைத் தொடர்ந்து, தொடர்ந்து எந்நாளும்
வாதியா நின்ற வினைப் பகையை வென்ற
வாழ்வே! இங்கு உனைப் பிரிந்து மயங்குகின்றேன்"

என்று கண்ணீர்மல்க உள்ளம் கரையப் பாடுகின்றார்.

(பொருள்: இருளடைந்த வாழ்வை வெளிச்சமாக்கி, என்னை தொடர்ந்து வரும் என் தீய செயலுக்கான தண்டனையை வென்று, எனக்கு வாழ்வளித்த உம்மைப் பிரிந்து நான் மயங்குகின்றேன்)

நாம் யாவரும் அறிந்த வடலூர் ராமலிங்க அடிகளார் கூறும் போது,

அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி,
தனிபெருங்கருணை அருட்பெருஞ்சோதி

என்று புகழ்ந்து கூறுகிறார். இப்படியாக தேவன் ஒளியாக இருக்கிறார் என்பதில் எவ்வளவும் சந்தேகமே இல்லை. இன்னும் எண்ணற்ற சித்தர் பாடல்களும் கடவுள் ஒளியாக இருக்கிறார் என்று கூறுகின்றன.

இப்படி சித்தர்களும், ஞானிகளும் கூறும் ஒளியாக இருக்கும் கடவுள் யார் என்று பரிசுத்த வேதாகமம் மிகத் துல்லியமாகக் கூறுகிறது.

'*என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனும் இருளில் இராதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்*' என்று இயேசு கிறிஸ்து யோவான் 12:46ல் கூறுகிறார். '*நான் உலகத்தில் இருக்கையில் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன்*' என்றும் யோவான் 9:5ல் சொல்கிறார். இதை அவரோட பழகிய அவருடைய சீஷனான யோவானும் '*தேவன் ஒளியாக இருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை. இது நாங்கள்*

அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அளிக்கிற விசேஷமாய் இருக்கிறது' என சாட்சி கூறுகிறார் (1 யோவான் 1:5). அப்பேர்ப்பட்ட தேவனுக்கே சகல கனத்தையும் நாம் கொடுக்க வேண்டும் என்பதை ***'ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், காணக் கூடாதவருமாய் இருக்கிறவர், அவருக்கே கனமும், நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக'*** என 1 தீமோத்தேயு 6:16ல் கூறப்பட்டு இருக்கிறது. ***'ஒளியாக இருந்தவர் இந்த உலகத்திற்கு ஒளியாக வந்தார். அவருடைய வாழ்க்கை மனிதருக்கு ஒளியாக இருந்தது'*** என யோவான் 1:4லிலும், ***'அந்த ஒளி இருளிலும் பிரகாசிக்கின்றது'*** என (1:5) பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

யோவான் எழுதின சுவிசேஷம் 1:9 வசனத்தில் ***"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி"*** என்றும், யோவான் 8: 12ல்... இயேசு ஜனங்களை நோக்கி; ***"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார்"*** என்றும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

இந்த உலகத்தில் வழி தெரியாமல் இருளில் திண்டாடித் திரியும் ஜனங்களுக்கு ஒளியாய் வந்த தெய்வம் யார் என்று இப்போது தெரிகிறதா? குருவாக வந்து நம்மை வழி நடத்தும் தெய்வம் யார் என்று தெரிகிறதா? அவர் இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு ஒருவருமே இல்லை. அப்படி உலகுக்கு ஒளியாக வந்த அந்த தெய்வமே நமக்கு குருவாகவும் வந்தார்.

குருவாக வந்த தெய்வம்

இந்த உலகத்திலே அவரை நம்பி விசுவாசிக்கிற எவரையும், அவர்கள் படித்துப் பட்டம் பெற்று, பெரிய பதவிகளில் இருந்தாலும் சரி, படிக்காத பாமரனாக இருந்தாலும், அவர்கள் இந்த உலகத்தால், உற்றார் உறவினர்கள், பெற்றோர்களால், உடன் பிறந்தவர்களால் உதவாக்கரை என்று ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அவர்களையும் பிரகாசிக்கப் பண்ணுகின்ற பேரொளியே அகிலாண்டேஸ்வரராகிய இயேசு கிறிஸ்து. அந்தப் பேரொளியே நம்மை வழி நடத்த, ஒரு பெற்ற தாயைப் போல, அரவணைக்கின்ற ஒரு பாசமிக்க தந்தையைப் போல, நம்மை ஆற்றித் தேற்றி அறிவுரை சொல்லும் ஒரு நல்ல தோழனைப் போல நமக்கு குருவாகவும் வருகிறார்.

குரு எப்படி நாம் இருக்க வேண்டும், எப்படி நாம் நடக்க வேண்டும் என்று உபதேசிப்பவர் மட்டுமல்ல, அந்த உபதேசத்தின்படி தானே வாழ்ந்து காட்டுபவராகவும் இருக்கணும். அப்படி நமக்கு முன் மாதிரியாகவும், உதாரண

புருஷராகவும், நல் நடக்கை உள்ளவராகவும், ஞானப் பிழம்பாகவும், நமக்கு வரும் துன்பம், துயரம், நோய் நொடிகளை, ஆபத்துக்களை தானே ஏற்றுக் கொள்பவராக, அவைகளை அகற்றி நம்மைக் கண்ணின் மணியைப் போல காக்கிறவராகவும், இறுதியில் நம்மை மோட்சத்தில் சேர்ப்பவராகவும் இருக்கணும். அப்படி வாழ்ந்தவரே இயேசு கிறிஸ்து.

இதை நம் வேதங்களும், சித்தர்களுமே தெளிவாகக் கூறியிருக்கின்றனர். இதைத் தான் ***'எனைத் தொடர்ந்து எந்நாளும் வாதியா நின்ற வினைப் பகையை வென்ற வாழ்வே'*** என்றும் ***'அடியார்க்கு எலாம் அலகு இலா வினை தீர்க்கத் துஜங்கட்டும் அப்பனே'*** என்றும் நெக்குருகிப் பாடுகின்றார் தாயுமானவர். கடந்த சேப்டரில் கௌதமர் விருத்தம் பாடலில் இதையே ***'சற்குருவாய் எவ்வுயிர்க்கும் தானே தானாய், சகல ஜீவ ஆன்மாவின் குருவுமாகி*** என்று சற்குருவின் பெருமை தனை புகழ்ந்து பாடுகின்ற கௌதமர், ***'ஆதி அந்தம் படைத்த பரன் மனுவோர்க்காக அறியாத குருவென வந்து...'*** என்று பாடி, ஆதியிலே இந்த பிரபஞ்சத்தையும் படைத்து, அதை அழிக்கவும் இருக்கின்ற அந்தப் பராபரனே நமக்காக அவதாரம் எடுத்து குருவாக வந்தும் அதை அறியாமல், உணராமல் நாம் இருக்கிறோமே என்றும் கலங்கித் தவிக்கிறார்.

இதையே அகத்தியரும் 'ஒரு நொடியிலே இந்த பிரபஞ்சத்தை படைச்சு, மனுஷர்களையும் படைச்சுட்டு, தானே இந்த உலகத்தில அவதரித்து குருவாக வந்தார்' என்பதை, 'மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில் குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்தில் தான் உதித்துக் குருவாய் வந்து..' என்று எவ்வளவு அழகாகப் பாடி பரவசமடைகிறார் பார்த்தீர்களா?

இந்த குவலயத்தைப் படைத்த சர்வேஸ்வரன் ஒருவரே நமக்கு குருவாக வர முடியும். வேற யாரும் நமக்கு குருவாக வர முடியாது, குருவாகவும் ஆக முடியாது. வேறு யாரையும் குருவாக நாம நினைச்சு அவர்களை நாம வணங்கவும் கூடாது. இதையே ***'குருரேவ பர பிரம்ஹ'*** கடவுளே குரு என்று உபநிஷத்துக்களும் கூறுகின்றன. ***'இறவா இன்பத்து எமை இருத்த வேண்டிப் பிறவா முதல்வன் பிறந்தான்'*** என்று போற்றி பஃறொடை 69ல 'என்றும் நாம் நீங்காத இன்பத்தில இருக்கணும்கிறதுக்காக பிறவா முதல்வனாக கடவுளே பிறந்தார்'னு சைவ சித்தாந்தம் சொல்கிறது. அதோட 'தம் முதல் குருவுமாய்த் தவத்தினில்' என்று அவரை, அவரையே, அவரை மட்டுமே நமக்கு குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

இந்த உலகத்தில நமக்கு உலகப் பிரகாரமான கல்வி மற்றும் நாம் அறியாத, புரியாத சில விஷயங்களை நமக்கு கற்றுக் கொடுக்கிறதுக்காக சில ஆசிரியர்கள், ஆசான்கள், ஆன்மீக குருக்கள் இருக்கலாம். அவர்கள் நமக்கு சில நல்ல போதனைகளை, உபதேசங்களை, புராணங்கள், இதிகாசங்கள்,

வேதங்களிலிருந்து எடுத்துச் சொல்லி, நாம் ஆன்மீகத்தில், பக்தியில் வளருவதற்குப் போதிக்கலாம். ஆனால் அவர்கள் எல்லாம் வெறும் மனித குருக்களே. அவர்களை நாம நம்மோட பாவங்களை போக்குகின்றவராகவோ, இறவா இன்பத்தில (மோட்சத்தில) இருத்தி வைக்கின்ற குருவாகவோ, கடவுளாகவோ, கடவுள் அவதாரமாகவோ எண்ணி அவர்களையோ, அவர்களின் படங்களையோ வணங்கவும் கூடாது. பாத பூஜையோ, காலில் விழுந்து நமஸ்காரமோ எதையுமே செய்யவும் கூடாது. அதனால் எந்த பிரயோஜனமும் இல்லை.

மேலும் அது கடவுளுக்கு கொடுக்க வேண்டிய கனத்தை பல பலவீனங்களை உடைய மனிதனுக்கு கொடுப்பதை அவர் அருவருக்கிறார். அதனால் நமக்கு சாபமே வருகிறது. இது அத்தனைக்கும் மேல ஒண்ணுமே இல்லாத வாய் சாமர்த்தியம், தந்திரமுள்ள ஒரு ஆளை தெய்வம், குரு, அவதாரப் பிறவி என்கிற ஒரு உயர்ந்த ஸ்தானத்துக்கு நாம உயர்த்தி விட்டு விடுகிறோம். இந்த உலகத்தில அப்படி நாம உயர்த்திவிட்ட பொய்யான குருக்கள் நிறையப் பேரு இருக்குறாங்க. பக்தி, ஆன்மீகப் போர்வையில தங்களை அவர்கள் குருவாக, அவதாரமாக காட்டிக் கொண்டு ஜனங்களின் அறியாமையை அவங்களோட சுயநலம், பெருமை, அதிகாரம், கோடி கோடியாக சொத்து சேர்ப்பு, சமூக துரோகச் செயல்களுக்கு பயன்படுத்தும் பல போலிச் சாமியார்கள், குருக்கள் இன்று எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அனுதினமும் பேப்பரிலும், டிவி செய்திகளிலும் பார்க்கிறோமே.

அவர்களை நாம் இனங்கண்டு கொள்ள வேண்டும் என்று பாம்பாட்டிச் சித்தர் கூறுகிறார். இறைவன் ஒருவரே நமக்கு குருவாக இருக்க முடியும். வேறு யாரும் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது.

> **"பொய்ம் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்**
> **புத்தி சொல்லி நன்னெறியில் போக விருக்கும்**
> **மெய் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்**
> **மெய்க் குருவின் பதம் போற்றி ஆடு பாம்பே"**

என்று பொய்யான குருக்களைப் பற்றி அறிவுறுத்துகிறார். அந்த மெய்யான பூரண சற்குரு எப்படி இருப்பார் என்றும் அவரே குறிப்பிட்டுச் சொல்கிறார்.

> **"வேதப் பொருள் இன்னதென்றும் வேதம் கடந்த**
> **மெய்ப் பொருளைக் கண்டு மனம் மேவி விரும்பிப்**
> **போதப் பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்**
> **பூரண சற்குரு தான் கண்டு ஆடுபாம்பே**
> **உள்ளங்கையிற் கனி போல உள்ள பொருளை**
> **உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்**
> **கள்ள மனந் தன்னைத் தள்ளிக் கண்டு கொண்டு அன்பாய்**
> **களித்துக் களித்து நின்று ஆடுபாம்பே"**

குருராதிர் அனாதிஷ்ச்சா	–	குருவே பரம தெய்வம்
குரு ஆதி	–	குருவே ஆரம்பம்
குரு அனாதி	–	குருவே ஆரம்பமில்லாதவர்

ஆதியும் அந்தமும் இல்லாத அந்த பரப்பிரம்மமே சர்வ வல்லமையுள்ள தேவன். அவரே நமக்காக நம் பாபங்களுக்காக, சாபங்களுக்காக, நோய்களுக்காக, தம்மையே யக்ஞமாக்கிய, பலியாகிய பரமேஸ்வரன் இயேசு கிறிஸ்து.

பாம்பாட்டி சித்தரின் பாடலின் வழியே வேத நாயக சாஸ்திரியாரும் கிறிஸ்து இயேசுவையே பற்றிப் பிடித்துக் கொண்டு பாடுகிறார்.

"ஆடுபாம்பே எழுந்தாடு பாம்பே கிறிஸ்
தண்ணலைக் கொண்டாடி பண்பாடு பாம்பே"

திருமூலர் சுத்தசிவம் யார் (அதாவதுமெய்யான தெய்வம் யார்?) என திருமந்திரத்தில (6:14) வரையறுத்துக் கூறுகிறார் பாருங்கள்.

"எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக் கொண்டிங்கே அளித்தலால்
சொல்லார்த்த நற்குரு சுத்த சிவமே"

(எல்லா உலகங்களுக்கும் அப்பாற்பட்டவராகவும், எங்கும் நிறைந்திருப்பவராகவும், நல்லோர் உள்ளங்களில் கருணையைப் பொழிபவராகவும், மனிதர்கள் எல்லாம் ஈடேற்றமடைய இவ்வுலகில் தோன்றி அருள் பாலித்தவரும் சொற்களால் விவரிக்க இயலாத சற்குருவே சுத்த சிவத்தன்மை உள்ளவர் (உண்மையான கடவுள்) என்று பாடுகிறார்.

'ஓம் என்றும், ஆம், ஆமென்' என்றும் பிரணவ நாதமாக, வார்த்தையாக இருந்து இந்த பிரபஞ்சத்தைப் படைத்தவரே கடவுள் என்பதை **'வாக்யோ பிரம்ஹ'** என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. இதையே பரிசுத்த வேதாகமம் ***'ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தையே தேவனாக இருந்தது'*** (யோவான் 1:1) என்றும் ***'அந்த வார்த்தை மாம்சமாகி (மனித அவதாரமாகி), கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்'*** என்று யோவான் 1:14ம் கூறுகின்றது. அப்படி மாம்சமாகி அவதாரம் எடுத்த ***'கிறிஸ்துவே நமக்கு போதகராக, குருவாக இருக்கிறார்'*** (மத்தேயு 23:8,10) என்று மட்டும் சொல்லாமல் ***'பூமியிலே (வேறு) ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்தில் இருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாக இருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாக இருக்கிறார்'*** என்றும் மத்தேயு 23:9, 10ல் எச்சரிக்கப்படுகிறோம்.

கடவுள் ஒருவரே நமக்கு குருவாக இருக்க முடியும் என்பதை குரு கீதையும் கூறுகிறது. அப்படி குருவாக வந்த கடவுள் வேறு யாருமல்ல. அவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே. அவர் மட்டுமே.

பரிசுத்தமான தெய்வம்

நம்மை வழி நடத்தும் தெய்வம் ஒளியாக, குருவாக மட்டுமின்றி அவர் பரிசுத்தமாகவும் இருக்க வேண்டும். தெய்வம் பரிசுத்தமாயிருந்தால் தான் அதை வணங்குகிறவர்களும் பரிசுத்தமாயிருப்பார்கள். "***சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்***" என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. "***நான் பரிசுத்தர். நீங்களும் பரிசுத்தராக இருங்கள்***" (1பேதுரு 1:16). "***உங்களை பரிசுத்தத்திற்கென்று அழைத்திருக்கிறேன். பரிசுத்த அலங்காரத்துடனே என்னைத் தொழுது கொள்ளுங்கள். பரிசுத்தமில்லாமல் தேவனைத் தரிசிப்பது கூடாத காரியம்***" என அறுதியிட்டுக் கூறுகிறது வேதம். "***நான் உங்களை அசுத்தத்திற்கு அல்ல. பரிசுத்தத்திற்கென்றே அழைத்திருக்கிறேன்***" என்று மீண்டுமாய் வலியுறுத்தி 1 தெச 4:7ல தேவன் சொல்கிறார்.

நாம இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் இந்த உலகத்தால கறை படியாதபடிக்கு தண்ணீரிலே முளைத்தெழுந்திருக்கும் தாமரை இலையைப் போல பரிசுத்தமாக வாழணும் என்று சிவவாக்கியர் சித்தர் பாடல்கள் புத்தகத்தில் "கிரியை" என்னும் தலைப்பில் பாடல் 307 பக்கம் 47ல் எப்படிப் பாடி இருக்கிறார்னு பாருங்கள்.

> **"நீரிலே முளைத்தெழுந்த தாமரையினோரிலை**
> **நீரினோடு கூடி நின்றும் நீரில்லாத வாறு போல்**
> **பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்**
> **பாரினோடு கூடி நின்ற பண்பு கண்டிருப்பீரே"**

தண்ணீரில் முளைத்த தாமரையில் தண்ணீர் ஒட்டாதது போல, இந்த உலகத்தில் வந்த தெய்வம் பாவம் இல்லாதவராக பரிசுத்தராக வாழ்ந்தவர் தான் என்று கூறுகிறது. அப்படி எந்தப் பாவமுமே செய்யாது வாழ்ந்த தெய்வம் இந்த உலகத்தில இயேசு கிறிஸ்துவைத் தவிர வேற யார் இருக்கிறா? அவரே '***என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னை குற்றப்படுத்தக் கூடும்?***'ன்னு சேலஞ்ச் பண்ணி கேட்டு இருக்காரே (யோவான் 8:46). அவரை விசாரித்த பிலாத்துவும் சொன்னாரே. '***இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை***' என்று (லூக்கா 23:4). அதுனால தான் '***உங்களை அழைத்தவர் பரிசுத்தராக இருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கையில் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்***' என்று 1பேதுரு 1:15ல வேதம் அழுத்தம்திருத்தமாகக் கூறுகிறது.

அதுமட்டுமல்ல. '**கடவுளுக்கு பெண்டேது பிள்ளைகளேது, பொய் களவு ஏது, காம லீலைகள் முதலான குணங்களேது. காருண்ய தொழில் ஒன்றே கடவுளின் பாரம்**' என்று பரமகுரு புத்தகத்தில் (பக் 10ல்) திரு.சு.தா. இரத்தினம் எழுதியுள்ள பாடல் கூறுகிறது. இதெல்லாம் மனுஷங்களாகிய நாம தெய்வத்துக்கு உண்டாக்கினது. நம்முடைய மாம்சீக சிந்தனையில தெய்வத்திற்கு கல்யாணம் பண்ணி வச்சு, (அதுவும் ஒண்ணு இல்லை. இரண்டு கல்யாணம் பண்ணி வச்சு, யாராலேயுமே டைஜெஸ்ட்டே பண்ண முடியாத அளவுக்கு சில ஆபாச கதைகளையும் புனைஞ்சு வச்சு.. ஐயோ... இதையெல்லாம் யாரு பண்ணினா? ஏன் பண்ணினாங்க? தெய்வத்திற்கு இழுக்கு உண்டாக்கணும்கிற நோக்கத்தில பண்ணினாங்களா? இல்லை அந்த புராணங்களை படிக்கிறவங்க உள்ளத்தில கீழ்தரமான ஆபாச எண்ணங்கள், இச்சைகள் உருவாகணும்கிறதுக்காக இப்படி இடைச்செருகல் பண்ணினாங்களா? கடவுளுக்காக கட்டப்பட்ட திருக்கோயில்களில் தான் எத்தனை ஆபாசமான சிலைகள்... இது போன்று திருத்தலங்களில் அசிங்கம் செய்தவர்கள் நிச்சயமாக மோட்சத்தில இருக்கப் போவதில்லை. காலாகாலத்திற்கும், யுகயுகமாக எரிநரகத்தில் கிடந்தல்லவா அவதிப்படுவார்கள்.

இப்படிப்பட்டவர்களை நினைத்துத் தான் பட்டினத்தாரும் பட்டினத்தார் பாடல்கள் என்னும் நூலில் திருத்தலங்கள் 40ல் 336வது பாடலாகவும் (பக்கம் 132) மற்றும் சித்தர் பாடல்கள் எனும் புத்தகத்தில் பட்டினத்தார் பாடல் (பக்கம் 384) (பாடல் 124)லும் கோபம் கொப்பளிக்க குமுறி இருப்பாரோ?

> **"நீற்றைப் புனைந்தென்ன? நீராடப் போயென்ன? நீ மனமே!**
> **மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை; மாமறை நூல்**
> **ஏற்றிக் கிடக்கும் ஏழு கோடி மந்திரம் என்ன கண்டாய்?**
> **ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றாயே!**

(பொருள்; திருநீறு பூசி என்ன பயன்? புனித நீராடி என்ன பயன்? பாவ வாழ்க்கையிலிருந்து மாறாமல் ஏழு கோடி மந்திரங்கள் தான் சொல்லி என்ன பயன்? ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் போது ஏறும் வழி தெரியாமல் அலைகிறாயே? என்று அங்கலாய்க்கின்றார்.)

இப்படி மகா பரிசுத்தமுள்ள கடவுளை அறிந்தும், பூஜை புனஷ்காரங்களில் ஈடுபட்டும் உள்ளத்தில் கறை படிந்தவர்களாய், பரிசுத்தமில்லாதவர்களாக வாழ்கின்ற அவ பக்தியுள்ள மனிதர்களுக்காகத் தான் யோவான் சுவிசேஷம் 17ம் அதிகாரம் 17,18,19 வசனங்களில் "***உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்***" என்றும், '***உம்முடைய வசனமே சத்தியம்***' என்றும் சொல்லப்பட்டு இருக்கிறதோ? நம்மை பெயர் சொல்லி அழைத்த இறைவன் மகா பரிசுத்தமுள்ளவர். அதனால் "***உங்களை அழைத்தவர் பரிசுத்தமாயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால்***

நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்றும் I பேதுரு 1: 15–16லேயும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பரிசுத்த தேவன் உங்களுக்கு இறைவனாக இருக்கணும்னா, உங்களை புடமிட்டு, பாவங்களை அறிக்கையிட்டு உங்களை பரிசுத்தராக மாற்றுங்க "***நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப் பண்ணின கர்த்தர் நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக***' என்று சொல்லப்பட்டது போல உங்களை பரிசுத்தமாக்கிக் கொள்ளுங்கள்.

சிருஷ்டிப்பில் இல்லாத தெய்வம்

உலகத்திலே அநேகர் எல்லாவற்றையும் உண்டாக்கின, படைத்த, சிருஷ்டித்த, தேவனை விட்டு விட்டு அவரால் சிருஷ்டிக்கப்பட்ட சிலைகளையும் மனிதர்களையும் மிருகங்களையும், பறவைகளையும், ஊறும் பிராணிகளையும், மரம், செடி, கொடிகளையும், வானத்து நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் ஆகியவற்றையும் வணங்குகிறார்கள். இவைகளை வணங்கக் கூடாது என்று மனுக்குலம் இன்னும் அறியாமல் இருக்கிறது என்று பேரின்ப மணிமாலை விருத்தம் பாடலில் சொல்லப்பட்டு இருக்கிறது.

**"தனு, கரண, புவன போகங்களெல்லாம்
தாழ்மைக்கும் பரஞ்சோதிதனை உட்கொண்டு
அனுதினமும் போற்றி பேரின்ப வீட்டை
அடைய விரும்பாமலே – அவனியுள்ள
மனு, மிருக, பட்சி, தாவர ஜெந்துக்கள்
மற்றுமுள்ள பல பொருளை வஸ்துவென்று
தினமுமதை வணங்கினதாற்கதியுண்டாமோ
சிறுவர் விளையாட்டிதெல்லாம் செப்புங்காலே"**

(பொருள்: சோதியான தெய்வத்தை ஏற்றுக் கொண்டு சொர்க்க வீட்டை அடைய விரும்பாமல், உலகில் உள்ள மனிதர், மிருகம், பறவை, தாவரங்கள், உயிரினங்கள் மற்றும் பல பொருட்களையும் கடவுள் என்று எண்ணி தினமும் வணங்கினால் மோட்ச கதி கிடைக்குமா? இவைகள் சிறு பிள்ளை விளையாட்டுகளே!)

திருமூலர் என்ன பாடுகிறார் என்று பாருங்களேன்.

**"கழுதை, மாடு, ஆடு, பன்றி, கடூரமாம் பாம்பு, பல்லி
பழுதுள்ள மிருகந்தன்னை பராபரம் அதுவே என்று
முழுதுமே மதிகளற்ற மூடராம் மனிதர் கூடி
தொழுதிடும் தெய்வமென்று சொல்லுவதற்கென்ன நீதம்"**

(பொருள்: கழுதை, மாடு, ஆடு, பன்றி, பாம்பு, பல்லி இவற்றை மூடர்கள் தெய்வமென்று தொழுகிறார்களே. அது நியாயமா?)

மேலும் தாவர வணக்கத்தைப் பற்றியும் மனம் நொந்து புலம்புகிறார் பாருங்க.

> **"வில்வம், துளசி, கொன்றை, கொல்லும் அலரி, அத்தி**
> **வேம்போடு அரசு, வன்னி, ஓம்பால், பனை அருகம்புல்**
> **ஓதிய தருப்பை, மாவும் நல்கும் கதி என்றெண்ணி பொருளை**
> **காணாமற் போறீர் – இருளின் மக்களே நீர்"**

இவற்றிற்கெல்லாம் பரிசுத்த வேதாகமம் என்ன கூறுகிறதென்று பார்ப்போமானால் ஒசியா தீர்க்கதரிசன புத்தகம் 4ம் அதிகாரம் 12, 13 வசனங்களில் *'என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள். வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப் பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள். அவர்கள் மலையுச்சியில் பலியிட்டு, மேடுகளிலே கர்வாலி மரங்களின் கீழும், புன்னை மரங்களின் கீழும், அரசமரங்களின் கீழும், அவைகளின் நிழல் நல்லதென்று தூபங்காட்டுகிறார்கள்'* என்று கூறப்பட்டு இருக்கிறது.

ரோமருக்கு எழுதின நிருபம் 1ம் அதிகாரம் 23ம் வசனங்களில் *'அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்'* என்றும், உபாகமம் 5ம் அதிகாரம் 7,8 வசனங்களில் *'என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுருபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்'* என்றும் கூறுகிறார்.

4ம் அதிகாரம் 15 முதல் 10 வசனங்களில்

'கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக் கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின் கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க

இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்' என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்படியாக நாம் யாரை வணங்க வேண்டும்? யாரை வணங்கக் கூடாது என்று வேதங்களும், சைவ சித்தாங்களும், சித்தர்களும், பரிசுத்த வேதாகமும் தெளிவாகச் சொல்கின்றன. இத்தனை சொன்னாப் பிறகும் நான் அப்படித் தான் கல்லையும், மண்ணையும், மரத்தையும், செடியையும் வணங்குவேன்னு நீங்க சொன்னா பிறகு உங்களை யார் காப்பாத்த முடியும்:? நம்ம தலையில நாமளே மண்ணை வாரி போட்டுகிடுறது போல ஆகாதா? யோசியுங்கள். அதுக்காகத் தானே கடவுள் மனிதர்களாகிய நமக்கு ஞானத்தையும், பகுத்தறிவையும் கொடுத்திருக்கிறார்?

உருவமில்லாத தெய்வம்

ஆதியிலே நமது முன்னோர்கள் எந்த உருவத்தையும் வணங்கவில்லை இயற்கையையே வணங்கினார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. நீர், நெருப்பு, காற்று, சூரியன் இவைகளையே வணங்கினார்கள் என்றும், சூரிய சந்திர நட்சத்திரங்களையும் வணங்கினார்கள் என்றும், மரங்களையும், இயற்கை வளங்களையும் வணங்கினார்கள் என்றும், ஆரியர்கள் நம்முடைய நாட்டிற்கு கைபர் போலந்து கணவாய் வழியாக வந்த பிறகு தான் நம்முடைய நாட்டில் உருவ வழிபாடுகள் தோன்றின என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சித்தர்கள் உருவ வழிபாடு கூடாது என்றே பாடி இருக்கிறார்கள். இப்பொழுது நாளுக்கு நாள் கோயில்களும் சிலைகளும் பெருகிக் கொண்டே இருக்கின்றன. கடவுள் நம்மை உண்டாக்கியிருக்க, நாம் கடவுளை சிலையாக செய்து, நாம் உருவாக்கின சிலையை நாமே வணங்குவது எவ்வளவு கொடுமை?

சித்தர் பாடல்கள் புத்தகத்தில் சிவவாக்கியார் "யோக நிலை" பாடல்கள் (பக்கம் 11)ல் 33ம் 34ம் பாடல்களாக என்ன பாடி இருக்கிறார்னு பாருங்க.

"கோயிலாவதேதடா? குளங்களாவதேதடா
கோயிலும் குளங்களும் கும்பிடுங்குலாமரே!
கோயிலும் மனத்துளே! குளங்களும் மனத்துளே!
ஆவதும் மழிவதும் இல்லை யில்லை யில்லையே!"

(பொருள்: கோயில், குளங்களெல்லாம் வெளியே இல்லை! அவை நம்ம மனசுக்குள்ளே தான் இருக்கிறது)

"செங்கலுங் கருங்கலுஞ்சிவந்த சாதிலிங்கமும்
செம்பிலும் தராவிலுஞ் சிவனிருப்பனென்கிறீர்
உம்பதம் மறிந்து நீரும்மை நீரறிந்த பின்
அம்பலம் நிறைந்த நாதராடல் பாடலாகுமே"

(பொருள்: கல்லிலும் செம்பிலும் சிவன் இருக்கிறார் என்கிறீர்கள். நம்மை நாமே அறிந்து கொண்டால் உண்மையான கடவுளை அறியலாம்.)

பாடல் எண் 420, பக்கம் 63 மேலும் என்ன எழுதி இருக்கிறார்னு பாருங்கள்.

"ஓசையுள்ள கல்லை நீர் உடைத்திரண்டு செய்துமே
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்;
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சார்த்துறீர்;
ஈசனுக்குகந்த கல்லெந்தக்கல்லு சொல்லுமே"

(பொருள்: ஓசை வருகின்ற கல்லை இரண்டு துண்டாக உடைத்து, ஒன்றை வாசலில் போட்டு தினம் மிதிக்கிறீர்கள். மறுதுண்டை தெய்வமென்று நாட்டி பூ அர்ச்சனை செய்கிறீர்கள். கடவுளுக்கு எந்த கல் உகந்தது எனச் சொல்லுங்கள்)

கல்லில் தெய்வம் இருக்க முடியுமா? கொஞ்சம் யோசியுங்கள். இன்னும் (பக்கம் 74) பாடல் எண்.497 என்ன சொல்கிறது என்று பாருங்கள்.

"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பஞ் சாத்தியே
சுற்றி வந்து முணமுணென்று சொல்லு மந்திரமேதடா!
நட்ட கல்லும் பேசமோ நாதனுள்ளிருக்கையில்?
சுட்ட சட்டி சட்டுவங்கறிச் சுவையறியுமோ?"

(பொருள்: கல்லை தெய்வமென்று பூ போட்டு சுற்றி வந்து, புரியாத மந்திரத்தை முணுமுணுக்கிறீர்கள். கடவுள் உள்ளத்தில் இருக்கிறார். கல் பேசுமா? பேசாது, பாத்திரத்திற்கு சுவை தெரியாது. சாப்பிடுபவர்களுக்கு மட்டுமே சுவை தெரியும்).

மேலும் கொதிச்சுப் போயி (பக்கம் 76ல்) 511வது பாடலில் என்ன பாடுகிறார்னு பாருங்க.

"கட்டையாற் செய்தே வரங்கல்லினாற் செய்தே வரும்
மட்டையாற் செய்தே வரம் மஞ்சளாற் செய்தே வரும்
சட்டையாற்செய்தே வரும் சாணியாற் செய்தே வரும்
வெட்ட வெளிய தன்றி மற்று வேறு தெய்வமில்லையே"

(பொருள்: கட்டை, கல், மட்டை, மஞ்சள், சட்டை, சாணி இவற்றால் செய்யப்பட்டவைகள் தெய்வங்கள் அல்ல!)

பேரின்ப மணிமாலையும் சிலை வழிபாட்டை கடுமையாக கண்டனம் செய்கிறது.

"அந்தரவான் கதிபுவனங் கீழ் மேல் எங்கும்
அடுக்கடுக்காய் நிறுத்தியவர் யார் என்று எண்ணி
சிந்தையிலே உணராமல் புவியிலுள்ள
சிலையதனைச் சுயம்புலிங்கத் தேவனென்று

புத்தியற்று பற்பல பூவெடுத்து நித்தம்
பூசை செய்து பலவிதமாய்ப் புகழ்வதெல்லாம்
எந்தை பராபரனுக்கு இவைகள் ஏற்குமோ தான்
எரி நரகப் பேய்க்கு இணங்கும் என்பதாமே"

(பொருள்: வான மண்டலங்களை அடுக்காக நிறுத்தியவர் யார் என்று சிந்திக்காமல் பூமியில் உள்ள சிலைகளை தெய்வமென்று புத்தியில்லாமல் பூவெடுத்து அனுதினம் செய்கின்ற பூசையை உண்மையான கடவுள் ஏற்றுக் கொள்ள மாட்டார். எரிநரகப் பேய்களே அவற்றை ஏற்றுக் கொள்ளும்.)

வானம் சிங்காசனமும் பூமி பாதப்படியுமாக இருக்கிற சர்வ வல்ல தேவனுக்கு உருவமேது? இதுவரை அவரை நேரில் கண்டவர் ஒருவரும் இல்லையே. கர்த்தர் சீனாய் மலையிலே மோசேயுடன் பேசிய போதும் அவர் முட்செடியில் அக்கினியாக, நெருப்பாகத் தான் தரிசனம் கொடுத்திருக்கிறார். இறைவன் ஆவியாக இருக்கிறார். ஆகவே அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்றே வேதம் கூறுகிறது. இறைவன் அருவருக்கின்ற காரியங்களில் மிகவும் முக்கியமானது இந்த விக்கிரஹ ஆராதனை தான். அதை பரிசுத்த வேதாகமத்தில் எப்படி கடுமையாக எச்சரிக்கிறார்னு பாருங்கள். பரிசுத்த வேதாகமத்தில் யாத்திராகமம் 20ம் அதிகாரம் 3,4,5 வசனங்களில்

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரஹத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" (யாத்திராகமம் 20:3–5) என்று கடவுள் சொல்கிறார். நாலு தலைமுறை வரைக்கும் அவர் கோபம் தொடர்கிறது பாருங்க. தெய்வ கோபத்திற்கு நாம ஆளானால் நம்ம கதி என்ன ஆகும்? அதோ கதி தான்! நம்மைப் படைத்த தெய்வமே நம்மீது கோபப்பட்டால் நாம யாருகிட்டே போயி அடைக்கலம் புக முடியும்? அப்பேர்ப்பட்ட தேவ கோபத்தை உண்டாக்கும் காரியத்தை நாம செய்யலாமா? யோசித்துப் பாருங்கள்.

ஆண்டவர் விக்கிரஹத்தை எவ்வளவு வெறுக்கிறார்னு ஏசாயா தீர்க்க தரிசன புத்தகம் 44ம் அதிகாரம் 9 முதல் 19 வசனங்களில் சொல்கிறார்னு பாருங்க. '***விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர். அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது. அவைகள் ஒன்றும்***

காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?

இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள். தொழிலாளிகள் நரஜீவன்கள் தானே; அவர்கள் எல்லாரும் கூடி வந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள்; கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காய வைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி, தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்துகிறான்; பட்டினியாயிருந்து பெலனற்றுப் போகிறான்; தண்ணீர் குடியாமல் களைத்துப் போகிறான். தச்சன் நூல் பிடித்து மட்டப் பலகையில் மரத்துக்குக் குறிபோட்டு உளிகளினால் உருப்படுத்தி, கவராசத்தினால் அதை வகுத்து உருப்படுத்தி, மனுஷ சாயலாக மனுஷ ரூபத்தின் படி உருவமாக்குகிறான். அதைக் கோவிலிலே நாட்டி வைக்கிறான்.

அவன் தனக்கு கேதுருக்களை வெட்டுகிறான். ஒரு மருத மரத்தையாவது ஒரு கர்வாலி மரத்தையாவது தெரிந்து கொண்டு காட்டு மரங்களிலே பலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான். அல்லது அசோக மரத்தை நடுகிறான். மழை அதை வளரச் செய்யும். மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும் போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர் காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான். அதனால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி அதை பணிந்து கொள்ளுகிறான். ஒரு விக்கிரகத்தையும் அதனால் செய்து அதை வணங்குகிறான்.

அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்; ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்து புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங்காய்ந்து, ஆ ஆ அனலானேன். நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி, அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து அதற்கு முன் விழுந்து அதை வணங்கி, நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான்.

அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள். காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது.

அதில் பாதியை அடுப்பில் எரித்தேன். அதன் தழலின் மேல் அப்பத்தையும் சுட்டு இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன். அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா? என்று சொல்ல, தன் மனதில்

அவனுக்குத் தோன்றவில்லை. அம்மட்டும் அறிவும் சொரணையும் இல்லை' என்று எழுதப்பட்டுள்ளது.

மேலும் 46ம் அதிகாரம் 5 முதல் 7 வசனங்களில் *'யாருக்கு என்னைச் சாயலும் சமமுமாக்கி யாருக்கு நான் ஒப்பாகும் படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? பையிலிருக்கிற பொன்னைக் கொட்டி வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலி பொருத்திக் கொள்ளுகிறார்கள். அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான். அதை வணங்கிப் பணிந்து கொள்ளுகிறார்கள். அதைத் தோளின் மேல் எடுத்து, அதைச் சுமந்து அதை அதன் ஸ்தானத்திலே வைக்கிறார்கள். அங்கே அது நிற்கும். தன் இடத்தை விட்டு அசையாது; ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால் அது மறு உத்தரவு கொடுக்கிறதுமில்லை. அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக்கிறதுமில்லை'* என்று எழுதப்பட்டுள்ளது.

மேலும் எரேமியா புத்தகம் 2ம் அதிகாரம் 26ம் வசனத்தில அவர்கள் வெட்கப்பட்டுப் போவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

'...கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும், கல்லைப் பார்த்து நீ என்னைப் பெற்றாய் என்றும் சொல்லுகிற அவர்கள் .... வெட்கப்படுவார்கள்'

10ம் அதிகாரம் 3 முதல் 5 வசனங்களில் – *'ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது; காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள்; அது தச்சன் கையாடுகிற வாச்சியால் பணிப்படும். வெள்ளியினாலும், பொன்னினாலும், அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள்.*

அவைகள் பனையைப் போல நெட்டையாய் நிற்கிறது. அவைகள் பேச மாட்டாதவைகள். அவைகள் நடக்க மாட்டாததினால் சுமக்கப்பட வேண்டும். அவைகளுக்குப் பயப்பட வேண்டாம். அவைகள் தீமை செய்யக் கூடாது. நன்மை செய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லை' என்று கர்த்தர் திட்டமாகச் சொல்லுகிறார்.

14வது வசனத்தில் – *'மனுஷர் அனைவரும், அறிவில்லாமல் மிருககுணமுள்ளவர்களானார்கள்; தட்டார் அனைவரும் வார்ப்பித்த சுரூபங்களாலே வெட்கிப் போகிறார்கள். அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் ஆவி இல்லை.'*

இவ்விதமாக ஆணித்தரமாக சித்தர்களும், ஞானிகளும், பரிசுத்த வேதாகமமும் இறைவனும் வேத வசனம் மூலமாக நமக்கு தெளிவுப்படுத்துகிறார்கள். இத்தனைக்கும் பிறகும் விக்கிரஹங்களில் தெய்வங்கள் இருக்குன்னு நம்புறீங்களா? இன்னும் அப்படியே நீங்க நம்பி அவைகளை கும்பிட்டால் உங்களுக்கு 'ஐயோ' தான்! நான் வேற என்ன சொல்ல முடியும்?

ஈடு இணையில்லாத தெய்வம்

வேதங்கள் பலி செலுத்தி வழிபடும் வழிபாட்டை விளக்குகின்றன. அதாவது அவைகள் ஆரியர்களின் சிந்தனைகளையும், வழிபாட்டு முறைமைகளையும் வெளிப்படுத்துகின்றன.

வேதங்களில் முழு முதற் கடவுள் என்ற கொள்கை கிடையாது. இயற்கை சக்திகளையும், சிறு சிறு தெய்வங்களையும், முன்னோர்களையும், ஆவிகளையும் வழிபடும் வணக்கங்களையும் உள்ளடக்கியவைகள். வேதங்கள் வழிபாடுகளைக் கூறுகின்றன. சமயங்களைக் கூறவில்லை. கடவுள் மனித அவதாரம் எடுத்து வருவார் என்று வேதங்களில் கூறப்படவில்லை. கடவுள் ஒருவரே. அவர் திரியேக தேவனாக, திரித்துவமாக செயல்படுகிறார் என்ற மூவொருமைக் கோட்பாடுகளும் அதில் இல்லை. கடவுளுக்கு கோவில் கட்டி வழிபடும் முறையும் அதில் விளக்கப்படவில்லை. துறக்கம், நிரயம் போன்ற கோட்பாடுகளும் வேதங்களில் கூறப்படவில்லை. முற்பிறவி, அடுத்த பிறவி பற்றி கோட்பாடும் அதில் இல்லை என டாக்டர் பேராசிரியர் யா.தா. பாஸ்கரதாஸ் தமது 'வேதாந்தமும் கிறிஸ்தவமும்' என்ற நூலில் எழுதியுள்ளார்.

ரிக் வேதம் செய்யுள் அமைப்பில் பலிகளைக் குறித்து எடுத்துரைக்கிறது. யசூர் வேதம் யாக முறைகளைக் கூறுகிறது. சாம வேதம் இசையமைதியில் அமைந்துள்ளது. சாவிப்பு மந்திரங்கள் போன்றவற்றை உள்ளடக்கியது அதர்வண வேதம்.

வேதாந்தம் பலி வழிபாட்டு முறைகளை மறுத்து வேதங்களில் உள்ள பலிக்கோட்பாட்டை அந்தப்படுத்துவதே வேதாந்தம். வேதாந்தம் திராவிட ஆன்மீக சிந்தனைக் கருவூலங்களாக கொள்ளப்படுகின்றன. உபநிஷத்துக்களை வேதாந்தம் என்று குறிப்பிடுவர். (உப +நி+ஷத் – ஈடுபாட்டுடன் நெருங்கி அமர்தல்) (ஆதிகாலத்தில் ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும் தங்கள் மாணக்கர்களுக்கு வாய்மொழியாக வனாந்திரங்களில் நெருக்கமாக இருந்து பல உபதேசங்களை கற்றுக் கொடுத்தனர்) சிதறிக் கிடந்த உபநிஷத்துக் கருத்துக்களை 'பிரம்ம சூத்திர'மாகத் தொகுத்து முறைப்படுத்தி கொடுத்தவர் வேத வியாசர் என்ற திராவிடரே.

சாந்தோக்கியம், பிருகதாரணியம், ஐதரேய, ஈசா, செள சிதகி, தைத்திரிய, கேன என 100க்கும் அதிகமான உபநிஷத்துக்கள் உள்ளன. உபநிஷத்துக்களில் கடவுளுக்குரிய இலக்கணங்கள் மிகச் சிறப்பாக குறிக்கப்பட்டுள்ளது. கடவுள் எல்லாவற்றையும் படைத்தார். அவரே அனைத்திற்கும் மூலவர். எல்லா முற்றறிவும் உடையவர். மேலான ஆற்றல் உடையவர். அனைத்தையும் கடந்தவர் பிரம்மன் என்பது போன்ற பல மேலான தெய்வீக குணங்களை தைத்திரிய உபநிஷத் மிக அழகாக, சுருக்கமாக இலக்கணம் வகுத்துக் காட்டுகிறது.

'யதோ வா இமானி பூதானி ஜாயந்தே
ஏன ஜாதனி ஜீவந்தி
யத் பிரயந்த்ய பிசம் வஸந்தி'

– தைத்திரிய உபநிஷத் II 1.9

(எல்லாப் பொருளும் எதிலிருந்து பிறந்து, எங்கு வாழ்ந்து, எதனிடத்திற்குத் திரும்புகிறதோ அதுவே பிரம்மன்).

வேதாந்த சூத்திரமாகிய பிரம்ம சூத்திரத்தை எழுதிய வேத வியாசர் அதன் தொடக்கத்தில் பிரம்மனை ஜன்மாதி அதாவது பிறப்புகளுக்கெல்லாம் மூலமானவர் என்று கூறுகிறார் (பிரம்ம சூத்திரம் 1.1.2).

'ஜகத் வாசித்வாத்' (எல்லாமுமே அவரால் படைக்கப்பட்டது) (1.4.16) என சுட்டுகிறார். பிரம்மனின் (கடவுள்) படைப்பிற்குள் சகலமும் அடங்கி விடுகின்றன. அவரது படைப்பிற்கு அப்பாற்பட்டு வெளியே ஒன்றுமே இல்லை, கிடையாது. அப்பேர்ப்பட்ட கடவுளை (சகலத்தையும் கடந்தவரை) 'கர்த்தர்' என்று பரிசுத்த வேதாகமம் இடுகுறிப்பெயராக அதாவது சகலத்தையும் உருவாக்குபவர், செய்கிறவர், படைக்கிறவர் என்ற பொருளில் குறிப்பிடுகிறது.

அந்த கர்த்தரையே '***மலைகள் தோன்று முன்னும், நீர் பூமியையும், உலகத்தையும், உருவாக்கு முன்னும், நீரே அனாதியாய் என்றென்றைக்கும் கடவுளாய் இருக்கிறீர்***' என சங்கீதம் 90:2 அனாதி தேவனாகக் காட்டுகிறது. அந்த அனாதி தேவனையே அகத்தியர் '**பராபரனார் ஆறு கொயம் பகர்ந்த ஜோதி**' (பாடல் 9:4) அதாவது ஆறு குணங்களை உடைய ஜோதியான பராபரனாகிய கடவுள் என புகழ்ந்து பாடுகிறார். அந்த ஆறு குணங்கள் என்ன?

1. சுயம்பு – தாமே எல்லாவற்றையும் செய்ய வல்லவர்
2. அநாதி – தாமே முதல்வராய் என்றென்றும் இருப்பவர்
3. அரூவி – ஐம்பொறி கொண்ட உருவமில்லாதவர்
4. அதிகுணர் – நிலைபேறுடைய எல்லா நன்மைகளையும் உடையவர்
5. சர்வ வியாபி – எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர்
6. ஆதி – தாமே தாமாய் எல்லாவற்றிற்கும் ஆதி காரணர்

ஆதி காரணர் தமது கீழ்கண்ட பாடலில் அந்த ஆறு குணங்களையும் அழகுற விளக்குகிறார்

'தன் வயத்தானாதல், முதலினதால்,
தகும் பொறி உருவிலனாதல்,
மன்வயத் தொல்லா நலமுளனாதல்,
வயின் றொறும் வியாபகனாதல்,
பின் வயத்தின்றி ஒருங்குட னனைத்தும்

பிறப்பித்த காரணனாதல்,
பொன்வயத் தொளிர்வான் முதலெலா
உலகும் போற்று மெய் இறைனையினிலையே'

இந்த ஆறு குணங்களையும் உடையவரே பொன்னொளி வீசும் வானுலகு முதல் எவ்வுலகும் வணங்கத் தக்க உண்மையான கடவுள் என்கிறார். இந்த ஆறு குணங்களையும் மகாகவி கிருஷ்ணப்பிள்ளை தமது இரட்சண்ய யாத்திரீகத்தில் (நிதானப்படும் – இரட்சண்ய நவநீதப்படலம்–2) தெளிவாக்கியுள்ளார்.

"நீதி கருணை பரிசுத்த நேசஞ் சுயம்பு சாமர்த்தியம்
போத மினைய லட்சணங்கள் பரிபூரணமாய்ப்
பொருந்தியவாறு
ஏதமிலனாய்க் காமாதி யெறிந்து பவத்தை யெரிக்கின்ற
ஆதி தேவன் சரண நிழலுடைய வாரும் செகத்தீரே!

இந்த ஆறு குணங்களையும் முக்குணங்களாக்கியும் சிலர் கூறுவர் (1) எல்லாம் வல்லவர் (Omani potent), (2) எல்லாம் அறிந்தவர் (Omniscient) (3) எங்கும் நிறைந்தவர் (Omni present)

திருவள்ளுவர் கடவுளை எண் குணத்தர் என விளிக்கிறார்

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத்தலை'

வள்ளுவர் கூறும் எட்டு குணங்கள் (1) தன் வயத்தானாதல் (2) தூய உடம்பினனாதல் (3) இயற்கை உணர்வினனாதல் (4) முற்றுமுணர்தல் (5) இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல் (6) பேரருளுடைமை (7) முடிவில்லாத ஆற்றலுடைமை (8) வரம்பில்லாத இன்பமுடைமை என நிகண்டுப் பாடல் கூறுகிறது.

'கடையிலா ஞானத்தோடு காட்சி வீரியமே இன்பம்
மிடையுறு நாமமின்மை, விதித்த கோத்திரங்களின்மை
அடைவிலா ஆயுளின்மை, யந்தரா யங்க ளின்மை
உடையவன் யாவன் மற்றிவ் வுலகினுக்கிறைவனாமே

(மேற்கோள் – இரட்சண்ய மனோகரம் – பக்கம் 618)

இந்த உலகை தம் வார்த்தையால் படைத்த அந்த சர்வேஸ்ரனாகிய இயேசு கிறிஸ்து, வள்ளுவப் பெருந்தகை கூறும் எண் குணத்தவராகவும், அதிகாரணர் குறிப்பிடுகின்ற அருங்குணத்தை உடையவராகவும் இருக்கிறார். அவரே தந்தையாகி இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார். தான் படைத்த மக்களின் பாவம் நீக்க மைந்தனாக அவதரித்தார், ரத்தம் சிந்தி மரித்து உயிர்த்தெழுந்து பரமேறிச் சென்று பரிசுத்த ஆவியாய் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்த வந்த திரியேக தேவன்.

அந்த திரி பொருளை '**அறிவினால் உணர்ந்து பார்த்து தெரிசிப்பாய் நெறி பத்தும்**' என அகத்திய முனிவர் தமது 9வது பாடலில் பாடுகிறார். உணர்ந்து பார்த்து இருதயத்தில் ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல. அவர் கூறிய பத்துக் கட்டளைகளையும் கைக் கொண்டு நட என்றும் அறிவுறுத்துகிறார். எவருமே அவருக்கு ஈடு இணை ஆக முடியாது என்பதை '**ஒருவருமே நிகராத வஸ்து**' என்று பாடுகிறார். அந்த ஈடு இணை இல்லாத தேவனை வள்ளுவரும்

> '**தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
> **மனக்கவலை மாற்றல் அரிது**' என்று பாடுகிறார்.

இதையே '***இப்படி இருக்க (இந்த) தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்த சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?*** என ஏசாயா தீர்க்கதரிசியும் கூறுகிறார் ஏசாயா 40:18ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் '***யாருக்கு என்னை சாயலும், சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்***' என ஏசாயா 46:5ல் கேட்கிறார். இதையே எரேமியா தீர்க்கதரிசியும் '***கர்த்தாவே, உமக்கு ஒப்பானவர் (ஒருவரும்) இல்லை. நீரே பெரியவர். உமது நாமமே வல்லமையில் பெரியது*** (எரேமியா 10:6) என்று கூறுகிறார். அந்த ஒப்புவமையில்லா, ஈடு இணையில்லா தேவனையே பற்றிப் பிடித்து நாம் உய்வோமாக!

மனித அவதாரம் எடுத்த கடவுள்

கடவுள் மனிதனாக அவதாரம் எடுத்திருக்கிறாரா? அப்படி அவர் ஏன் எடுக்கணும்? மனிதனாகப் பிறக்காமலேயே அவர் செய்ய நெனச்சதை செய்ய முடியாதா? கடவுள் எல்லாருக்கும் பொதுவானவர். அவர் எந்த ஒரு மதத்துக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. எல்லா மதங்களும் கடவுளுக்கு அவங்களே ஒரு பேரை வச்சு, அவர் தான் சர்வ வல்லவர், மத்ததெல்லாம் தெய்வங்கள் இல்லை என்று அவரை அவர்களுக்கே உரியவர் என்று சொந்தம் கொண்டாடுறாங்க.

யாரு வேணா அவரை தனிப்பட்ட முறையிலேயும், அவங்களோட மத, இன ரீதியாகவும் கொண்டாடிக்கிடலாம். ஏன்னா அவர் எல்லாருக்கும் உரியவர் தான், சொந்தமானவர் தான். அவர் மதங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர். கடவுள் ஜாதி, மத, இன, மொழி பேதமின்றி எல்லாரையுமே நேசிக்கிறாரு. எல்லாரையுமே அவரு தான் படைச்சாரு. ஆனா அவர் படைச்ச முதல் மனுஷர்களாகிய ஆதாம் ஏவாளே பாவத்திலே விழுந்து தொலைச்சுட்டாங்க. அவங்களோட வாரிசான நாமும் அதுனால ஜென்ம பாவத்திலேயே ('**சகசமலம்**'னு வேதங்கள் சொல்லுது. சகச – இயல்பாக வருதல் (பிறவியிலேயே), மலம் –பாவம்) பிறக்கிறோம்.

பிறகு இப்போ நாம செய்யுற பாவங்களும் (**கர்ம வினை**ன்னு சொல்றோமே) சேர்ந்துக்கிடுது. இதைத் தான் '**இருசேர் இருவினை**'ன்னு திருவள்ளுவரும் சொல்றாரு. இதை '**உத்தர பூர்வ அதயோ**' என்று பிரம்ம சூத்திரமும், '**ஜன்ம பந்தம்**', '**கர்மபந்தம்**' என்று கீதையும், வேதாங்களும் கூறுகின்றன. இந்த பாவங்களை நம்மோட சொந்த முயற்சியிலேயோ, தான தர்மங்களினாலேயோ போக்க முடியாது.

'**கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான்? விட்ட வேதனையைத் தீர்க்க விடுவிப்பான் ஒருவன் வேண்டும். அட்டமா சித்தியைக் காலறிவினால் அறியலாகும். தட்டறப் பாசம் நீக்கத் தற்பர குருவே வேண்டும்**' என்று சீடாச்சாரம் சொல்கிறது. குருவே, கடவுளே இறங்கி வந்து பலியாகணும்னு வேதாந்தம் சொல்லுது.

பாவத்தின் சம்பளமோ மரணம். அதை அவர் கொடுக்காம இருக்க முடியாது. ஏன்னா அவர் நீதிபரர். நியாயாதிபதி. தண்டனையை கொடுத்தாகணும். அதுக்கு என்ன பண்றாரு? நமக்கு கொடுக்க வேண்டிய தண்டனையை தானே ஏத்துக்கிட்டு நமக்கு பாவ விமோசனத்தை கொடுக்கிறாரு. கடவுளா இருந்துக்கிட்டு தண்டனையை ஏத்துக்கிட முடியாது. அதுக்கு அவரு நம்மைப் போலவே ஒரு மனிதனாப் பிறந்தாகணும். இதைத் தான் 'ஊனுடம்பெடுத்தல்'னு கிறிஸ்தவமும், அவதார்னு (அவ – கீழே, தார் – இறங்கி வருதல்) சமஸ்கிருதத்லேயும், அவதாரம்னு தமிழ்லேயும் சொல்றோம்.

கடவுள் மனுஷனா இந்த உலகத்துக்கு வந்தார்ங்கிறதை பல கற்பனைக் கதைகளைக் கொண்டும், புராணக் கதைகளைக் கொண்டும் ஒவ்வொரு மதமுமே விளக்குகின்றன. ஆனா அவைகள் எதுவுமே வரலாற்று உண்மைகளை விளக்கும் விதமாக எழுதப்படாமல், சில புராணங்களில் ஆபாசமாகவும், பொருத்தமில்லாமலும் எழுதி அந்த அவதாரத்தையே கொச்சைப்படுத்தி இருக்கிறதைப் பார்த்தா மனசுக்கு ரொம்ப வேதனையா இருக்கு.

கடவுள் மனுஷனைப் போல தோற்றமளிக்கிறது அவதாரமாகாது. அவர் மனுஷனா பொறக்கணும். அப்படி கடவுள் மனுஷனாப் பிறந்ததைத் தான் வேதாந்தம் '**ரூப உபன்யாசாத்**' என்று பிரம்ம சூத்தரத்தில 1.2.23ல சொல்கிறது. அந்தப் பிறப்பும் தூய்மையாக, திவ்வியமாக, மாசு மருவற்று இருக்கணும். அதைத் தான் '**திவ்யம் ஜன்மா**'ன்னு பகவத்கீதையும் சொல்லுது. மனுஷ உறவில உருவாகாம, பரிசுத்த ஆவியினால கன்னி மரியாளின் மூலமாக அப்படி தூய்மையா, திவ்வியமா, பரிசுத்தமாகப் பிறந்தவர் தான் இயேசு கிறிஸ்து.

கிறிஸ்து பிறந்தது ஒரு வரலாற்று உண்மை. இந்த உலக சரித்திரத்தையே கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் (கி.மு, கி.பி) என்று பிரித்த ஒரு

சத்திய வரலாறு அது. இயேசு கிறிஸ்து பிறந்ததோ, வாழ்ந்ததோ, சிலுவையில் மரித்ததோ, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததோ ஒரு கற்பனையோ, புனை கதையோ அல்ல. அது புராணமும் அல்ல.

'**இரத்தப் பிரதோஷணம் பாவ விநாசம்**' (இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை) என சம்பூர்ண மஹாபாரதமும், '**பிரஜாபதியே பலியாகி யக்ஞம் செய்யணும்**'னு தாண்டிய மஹாப் பிரமாணமும் சொல்கிறது. இதையே திருமூலரும் திருமந்திரத்தில் பாடுகிறார் (முதல் தந்திரம் – உபதேசம் 1) (மேற்கோள் – அவதாரமும், கிறிஸ்தவமும் – டாக்டர் யா.தா. பாஸ்கர தாஸ் பக்கம் 12)

'விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய் கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன் வைத்து
உண்ணின் றுருக்கியோ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிப்பறுத்தானே'

(பாப வினையை ஈடுகட்டுவதற்காக கடவுள் ஊனுடம்பு எடுத்து (மெய் கொண்டு) விண்ணிலிருந்து (இழிந்து) இறங்கினார்.

'**உலகெலாம் உய்ய வேண்டி உருக்கொண்டு மண்ணில் வந்தாய்**' என்று கண்ணீர் மல்க திரு.வி.க வும் '**கிறிஸ்துவின் அருள் வேட்டலில்**' பாடுகிறார்.

'**வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய் ஆதியாகி ஆயனான மாயமென்ன மாயமே**' என்று நாலாயிரம் திவ்யப் பிரபந்தத்தில் திருமழிசை ஆழ்வார் மனம் நெகிழ்ந்து இறைவனைப் போற்றிப் புகழ்கிறார் (நாலாயிரம் 1786). வேள்வி என்றால் பலி என்று பொருள். இதையே அப்பர் பெருமானும் தேவாரப் பாடலில் (320) உலக மக்களின் பாவங்களைப் போக்குவதற்காக கடவுள் பலியானார்னு பாடுகிறார்.

'அவியாய் அவியுமாகி
அருக்கமாய்ப் பெருக்கமாகிப்
பாவியர் பாவந் தீர்க்கும்
பரமனாய்ப் பிரமனாகி'

(அவி என்றால் பலி என்று பொருள். பரமனாகிய பிரமன் (அவதாரக் கடவுள் – பலியானவர்). கடவுள் பலியான செய்தியை பகவத் கீதை '**அகம் ஏவ அதியக்ஞம்**' (கீதை 8:4) என்றும், '**அகம் யக்ஞம்**' (கீதை 9:16)லும் குறிப்பிடுகிறது. '**நானே பலியாக இருக்கிறேன்**' என பிருகதாரணியக உபநிஷத்தும் (1.5.17), '**அசுமேவ யக்ஞம்**'னு பிரம்ம சூத்திரமும் (2.3.43), '**புருசா பலியாகி இருக்கிறார்**'னு சாந்தோக்கிய உபநிஷத்தும் (3.16.1), '**பிரஜாபதி பலியாகி இருக்கிறார்**'னு சதபத பிரமாணமும் கூறுகிறது.

மேற்கண்ட இவை எல்லாமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த மனுக் குலத்தின் பாவங்களுக்காக கழுவாயாக, பாவப் பரிகாரியாக பலியானார் என்று

கிறிஸ்தவ வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள கி.பி முதல் நூற்றாண்டில் நடந்தேறிய இந்த அவதார வரலாற்று நிகழ்ச்சிகளின் தாக்கங்களே, இந்திய சமயங்களிலும், அதன் வேதாந்தங்களிலும், உபநிஷத்துக்களிலும் பிரம்ம சூத்திரத்திலும், பகவத்கீதையிலும் 5ம், 6ம் நூற்றாண்டுக்குப் பிறகு பிரதிபலிக்கிறது என வேதாந்தங்களை ஆராய்ந்த பல ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக் கருத்துக்கள் இன்று ஏராளமாக வெளி வந்துள்ளன.

அவதாரம் என்றால் கடவுள் இப்பூமியில் மனிதனாகப் பிறத்தல் ஆகும். மனித உடல் உறவிலோ, வித்திலோ அல்லாமல் ஒரு கன்னித் தாயின் வயிற்றில் கருவாகி, உருவாகி பிறத்தல் வேண்டும், அறநெறி காட்டி வாழ வேண்டும். பிறகு மரிக்க வேண்டும். ஆனால் மனிதர்களைப் போல மரித்து மண்ணோடு மண் ஆகாமல், உயிர்த்தெழுதல் வேண்டும். இதுவே அவதாரமாகும். அப்படி உருவாகி பிறந்து, வளர்ந்து, மரித்து உயிர்த்தெழுந்ததற்கு ஆதாரங்களாக வரலாற்றுப் பின்புலங்கள் வேண்டும். இவைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில சொல்லப்பட்டு இருக்கு.

இப்படிப் பிறக்காமல் 'டக்'கென்று பூமியில் தோன்றி பல அதிசயங்களை நிகழ்த்தி விட்டு 'படார்'னு மறைந்து போவதோ அல்லது சாதாரண மனிதர்களைப் போல மனித வித்தில் பிறந்து, பிறகு இறந்து மண்ணோடு மண்ணாகிப் போவதோ அவதாரம் ஆகாது. மனிதராகப் பிறக்காமல் ஒரு மிருகமாகவோ, பறவையாகவோ, சமுத்திரத்து மச்சமாகவோ உருக் கொண்டு வந்து ஒரு அற்புதம் செய்வது என்பதுவும் அவதாரம் ஆகாது. அது தாங்கள் நம்பும் தெய்வத்தை மகிமைப்படுத்த சிலர் செய்த அதீதக் கற்பனையே அது.

இயேசு கிறிஸ்துவினுடைய பிறப்பு, அவர் பலியாவது அனைத்துமே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே பிதாவாகிய கடவுளாலும், பல தீர்க்கதரிசிகளாலும் முன் குறிக்கப்பட்டு உரைக்கப்பட்டது.

– ஆதியாகமம் 3:15ல் '***உனக்கும் (சாத்தானாகிய சர்ப்பம்), ஸ்திரிக்கும், உன் வித்திற்கும், அவள் வித்திற்கும் பகை உண்டாக்குவேன்***' என்று ஆண்டவர் சர்ப்பம் ஆதாம் ஏவாளை வஞ்சித்த உடனேயே முன்னுரைத்தார். அதை கலாத்தியர் 4:5ல் '***காலம் நிறைவேறின போது, ஸ்திரியினிடத்தில் பிறந்தவரும் (கன்னி மரியாளிடம் பிறந்தவரும்) நியாயப் பிரமாணத்திற்குக் கீழாவருமாகிய தம்முடைய குமாரனை (இயேசுவை) தேவன் அனுப்பினார்***' என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

– ஆதியாகமம் 21:12ல் கடவுள் ஆபிரகாமை நோக்கி (கி.மு.2050ல்) '.... ***ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்***' என்றார். எபிரேயர் 11:17–19ல '***விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்ட போது, ஈசாக்கை பலியாக ஒப்புக் கொடுத்தான். ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டு இருந்ததே. இப்படிப்பட்ட***

வாக்குத் தத்தங்களைப் பெற்றவன் மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராய் இருக்கிறார் என்று எண்ணி, தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக் கொடுத்தான்'. மரித்தோரிலிருந்து ஈசாக்கை பாவனையாக திரும்பவும் பெற்றுக் கொண்டான். இயேசு கிறிஸ்துவை வாக்குத்தத்தின் படியே ஈசாக்கின் வம்சத்தில் பிறக்க வைத்து 'ஆபிரஹாமின் தேவன், ஈசாக்கின் தேவன்' என்று அழைக்கவும், இயேசு கிறிஸ்துவின் மரிப்பிற்குப் பின் நிகழும் உயிர்த்தெழுதலுக்கு முன் உதாரணமாக பலிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டவனான ஈசாக்கையும் பலி பீடத்திலிருந்து மீட்டார்.

–ஆதியாகமம் 22:18ல ***'நீ (ஆபிரகாம்) என் சொல்லுக்கு கீழ்படிந்தமையால், 'உன் சந்ததிக்குள் பூமியில் உள்ள சகல ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று என் மேல் ஆணையிட்டேன்'*** என்று கர்த்தர் சொல்கிறார். அப்படி 'உன் சந்ததிக்குள்' என்று சொல்லப்பட்டது இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தான் என கலாத்தியர் 3:16ல் ***'ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத் தத்தங்கள் பண்ணப்பட்டன'***. 'சந்ததிகளுக்கு' என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல் 'உன் சந்ததிக்கு' என்று ஒருவனைக் குறித்துச் சொல்லி இருக்கிறார். அந்த சந்ததி கிறிஸ்துவே' என விளக்கப்பட்டு இருக்கிறது.

–ஏசாயா தீர்க்கதரிசி(கிமு. 740–681) பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே ஏசாயா 7:14ல் முன்னுரைத்தார். ***'ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள்'*** என்று அந்த தீர்க்க தரிசனம் நிறைவேறியதை கர்த்தருடைய தூதனானவர் மரியாளுக்கு நியமிக்கப்பட்ட யோசேப்பிடம் மத்தேயு 1:20–22ல கூறினார் – ***'அவளிடத்தில் (மரியாளிடத்தில்) உண்டாயிருப்பது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'***. இதே செய்தியை கேபிரியல் தூதன் மரியாளிடமும் லூக்கா 1:31,34,35ல் முன்பே கூறி விட்டார்.

–சகரியாவின் மனைவி எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு மரியாளின் வயிற்றில் வளர்வது பரிசுத்த ஆவியினால் உருவானது என உணர்ந்து ***'ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளே! உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது' எனக் கூறும் போதே அவளுடைய வயிற்றில் இருந்த பிள்ளையும் களிப்பாய் துள்ளிற்று'*** என்று லூக்கா 1:41, 42ல சொல்லப்பட்டு இருக்கிறது. இயேசு கிறிஸ்துவினுடைய வருகைக்கு ஜனங்களை ஆயத்தம் பண்ணுவதற்காக குழந்தையே இல்லாமல் இருந்த சகரியா எலிசபெத் தம்பதிகளுக்கு யோவான் ஸ்நானகனை முன்பே கருவுற வைத்து, பிறக்கவும் வைத்தார் இறைவன். கர்த்தர் சகலத்தையும் ஒழுங்கும் கிரமுமாக செய்கிறவர் ஆச்சே.

– 'பிள்ளைகள் மாமிசத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாக (மனிதர்களாக) இருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர் (மனிதனாக) ஆனார்' என எபிரேயர் 2:14ல சொல்லப்பட்டு இருக்கிறது.

–இவரோ (இயேசு கிறிஸ்துவோ) (மனிதர்களுடைய) பாவங்களுக்காக (தம்மையே) ஒரே பலியாகச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலப்பக்கத்தில் அமர்ந்தார் எனவும், அவர் உயிர்த்தெழுந்து விண்ணுலகில் இருந்து வந்த அவர் மீண்டுமாய் அங்கே சென்று இறைவனுடன் இருந்தார் என எபிரேயர் 10 :12ல சொல்லப்பட்டு இருக்கிறது.

சைவ, வைணவ சமயங்களில், புராணங்களில் தெய்வம் என்று கூறப்படுகின்ற பலர் அவதாரம் எடுத்ததாக காட்டப்படுகின்றன. அவர்கள் எப்போது பிறந்தனர், எப்போது இறந்தனர் என்பதற்கு ஆதார பூர்வமான வரலாறு எதுவுமில்லை. இத்தெய்வங்களின் அவதாரங்களைக் குறித்து பலவித கருத்து வேறுபாடுகள் உள்ளன. 'விஷ்ணு தான் அவதாரங்களை எடுக்கும் மூலக் கடவுள் என்பது ஒரு சாராரின் கோட்பாடு. சிவனுக்கு கன்மம் இல்லை. அதுனால அவருக்கும் அவதாரத்திற்கும் தொடர்பு இல்லை என்பது மற்றொரு சாராரின் கருத்து. கடவுளை மறுதலிக்கிற சங்கரர் சிவனின் அவதாரமாக வந்தார் என்பது ஒரு சாராரின் கோட்பாடு. அது போல கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய புத்தரையே விஷ்ணுவின் அவதாரமாக மாற்றி கதை கட்டினார்கள்.

மகாபாரதத்தில நாராயணியா என்னும் பகுதியில் பத்து அவதாரங்கள் என குறிக்கப்படுகின்றன. வாயு புராணம் 98:17ல பத்து அவதாரங்கள் குறிக்கப்படுகின்றன. பாகவத புராணத்தில அவதாரங்களின் எண்ணிக்கை மூன்று முறை பட்டியலிடப்படுகின்றன. முதல் முறை 22 அவதாரங்கள் எனவும், இரண்டாம் முறை 23 அவதாரங்கள் என்றும், மூன்றாம் முறை 16 அவதாரங்கள் என்றும் குறிக்கிறது. சாத்வத சம்கிதை 39 அவதாரங்களைச் சுட்டுகின்றன. அவதாரங்கள் பத்து என்று குறிப்பிடும் நூல்களில் அவதாரங்களின் பெயர்கள் மாறுபடுகின்றன. ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது மற்றொன்றில் இல்லை. இப்படி அவதாரங்களின் எண்ணிக்கையும், பெயர்களும் புராணத்திற்கு புராணம், நூலுக்கு நூல் மாறுபடுகிறது.

புத்த மதத்தை இந்திய மண்ணிலிருந்து அகற்றுவதற்காக விஷ்ணுவின் அவதாரமாக இணைத்து வெற்றி கண்டதைப் போல, கிறிஸ்தவ மதத்தையும் அகற்றுவதற்காக இயேசு கிறிஸ்துவையும் விஷ்ணுவின் அவதாரமாக மாற்றுவதற்கு எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை என இந்து மத வேதங்களையும், புராணங்களையும், சைவ, வைணவ சமயங்களின் தோற்றம், வளர்ச்சி, அவதாரங்கள் மற்றும் கிறிஸ்தவ மதக் கொள்கைகளையும் கற்றுத் தேர்ந்து, மிக ஆழமாக அலசி ஆராய்ந்து பல வியத்தகு ஆராய்ச்சி நூல்களை படைத்துள்ள டாக்டர் பேராசிரியர் யா. தா. பாஸ்கரதாஸ் MA (Tamil), MA

(Econ), M.Ed, M.Phil, Ph.D. Certificate in Sanskrit அவர்கள் எழுதிய 'அவதாரமும் கிறிஸ்தவமும்' என்ற தமது நூலில் (பக்கம் 29–30) எழுதியுள்ளார்.

மேலும் அவதாரம் என்பது ஒரே ஒரு முறை தான் நிகழ்வது. அவதாரமாக வந்த கடவுள் மறுமுறையும் வெளிப்படுவது அவதாரமல்ல. 'சம்பவாமி யுகே யுகே' அதாவது நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன் என கீதையில் கண்ணன் சொல்வதை அவதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது. இயேசுவின் அவதாரம் ஒரு முறை தான் நிகழ்ந்தது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் உள்ள இரகசிய வருகை அல்லது நியாயந் தீர்க்கிற நீதி அரசராக வர உள்ள இரண்டாம் வருகை, அதற்குப் பின் உள்ள ஆயிரம் ஆண்டு அவரின் அரசாட்சி என கிறிஸ்தவர்கள் நம்புகின்ற, வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள நிகழ்வுகள் எதையும் இயேசு கிறிஸ்துவின் மறு அவதாரமாக கொள்ளக் கூடாது. ஒரு முறை அவதாரமாக வந்த அவர் வெவ்வேறு காலக் கட்டங்களில் வெவ்வேறு விதமாக அவர் வெளிப்படுவார் என்றே கொள்ளப்பட வேண்டும். அதை அவதாரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

நான்கு வேதங்களான ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களில் அவதாரம் பற்றிய எந்த தகவலுமே இல்லை. வரலாற்று அடிப்படையில் காணும் போது கிறிஸ்தவமே அவதாரக் கருத்தை முதலில் உலகுக்கு வழங்கியுள்ளது என உறுதியாகக் கூற முடியும். அதன் தாக்கத்தால் எழுந்தவைகளே இந்து சமயத்தில் உள்ள அவதார கோட்பாடுகளும், அது சம்பந்தப்பட்ட புனை கதைகளும், புராணங்களும். இதில் கொடுமை என்னவென்றால் அப்படி எடுத்துக் கட்டி உருவாக்கிய நிலையில் பகுத்தறிவுக்கு கொஞ்சங்கூட ஒவ்வாத பல கதைகளையும் காலங்காலமாக இணைத்து அதை பெருகச் செய்து விட்டனர் என்பது மிகத் தெளிவாகப் புலனாகிறது. எப்போதுமே உண்மை உண்மை தான். புனையப்பட்ட கட்டுக்கதையோ எப்போதுமே கட்டுக் கதை தான்!

கடவுள் அவதார நிகழ்வுகளாக சொல்லப்படுபவைகள் மாத்திரம் கதைகள் அல்ல. அவர்களே கடவுள்கள் அல்ல என்றும், அவர்கள் வெறும் மனிதர்களே என்றும், தெய்வங்களுக்குரிய தெய்வாம்ச குணங்கள் எதுவுமே அவர்களிடத்தில் கிடையாது என்பதற்கு பல ஆதாரங்களை இந்து சமய புராணங்களிலேயே நிறைய காண முடியும் என்று பல பாடல்கள் மூலம் ஞானிகளும், சித்தர்களுமே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அவைகள் அனைத்தையும் எழுதுவது என்றால் அதுவே பெரிய வால்யூமாக மாறி விடும். அதுனால ஒரு சில பாடல்களை மாத்திரமே இங்கு எழுதுகிறேன். இதை இந்து சமய சகோதர, சகோதரிகளின் மனதையோ, உணர்வுகளையோ இழிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்திலோ அல்லது புண்படுத்த வேண்டும் என்ற நினைப்பிலேயோ இதை எழுதவில்லை. அவதாரமாக சொல்லப்படுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்ற சத்தியத்தை புரிய வைப்பதற்காகவே எழுதப்படுகின்றது.

ஔவையாரும் திருமூலரும் என்ன சொல்லியிருக்கிறார் என்று பாருங்கள் (மேற்கோள் – முக்திவழி – பக்கம் 312)

"மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டன் அவன் மனிதன் – சிலமுடன்
உற்று உணர்ந்த உகந்த பெரியார்
கற்று மறிந்தாரில்லை காண்" – ஔவை

"பலகலைகளோ துவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால் வேதமானது சாஸ்திரம்
அலையுடனே தத்துவங்கள் தொண்ணுற்றாலும்
அவைகளிலே பொய்களவு அதர்மஞ் சேரும்
மலையரசன் சிவன், பிரம்மா, விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங்காணார்
நிலை பெருக மோட்ச வழி காணாததாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே"

– திருமூலர்

கவிமன்னர் வேத நாயக சாஸ்திரியார் பாடி இருக்கின்ற பாட்டைப் பாருங்கள். (வேத நாயக சாஸ்திரியார் ஞானத் தச்ச நாடகம், வெண்கலச் சற்பம் பக்கம் 28–30)

"பாம்பை யணிந்தவன் தேவனாமோ
பாம்பிற் கிடந்தவன் தேவனாமோ
பாம்பிற் கிடந்தவன் தேவனானாற்
பாம்பாட்டியும் கூட தேவனாவான்
பாம்பாட்டி பாம்புனக்கு நன்மை செய்ததோ
பாம்பையடித்துக் கொன்ற நீயே
பாம்பைப் பணிந்தாயென்றாடு பாம்பே."

சுத்த சிவனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட திரு.வி.க. சிவனைப் 'பாழ்' என்று அழைத்துப் பாடுகின்றார். (திரு.வி.க சிவன் அருள்வேட்டல் கடந்த நிலை 1–2)

"அருவல்லை உருவல்லை அளவெல்லை யல்லை
ஆதியல்லை அந்தமல்லை அகண்ட வெறும் பாழ்நீ
மருவு முன்பைப் படைப்பதேது? மாண்புடைய சிவமே
மன்னுமுன்றன் பாழ்வெளியில் மாநிலங்களெல்லாம்
அருவுருவாய் ஆங்காங்கே அமைந்தமைந்து கோட்டில்
அசைந்தசைந்தே இயங்கி வரும் அதிசயந்தானென்னே
ஒரு பெயரும் ஒன்றுமில்லா உனையுஞ் சிவமென்றே
உரைத்து விட்டார் புலவரந்நாள் ஓதுகின்றேன் அதையே'

சுத்த சிவம் எப்படி இருக்கணும், எப்படி இருக்கக் கூடாது என சு.தா. இரத்தினம் அவர்கள் தமது 'பரமகுரு' என்ற நூலில் பக் 10ல் கூறியுள்ளதைப் பாருங்கள்.

> **"சுத்தசிவம் என்னும் போது, அசுத்த சிவம்**
> **உண்டென்பதும் அறிய வேண்டும். கொங்கண**
> **மகரிஷி கூறியதாவது: கடவுளுக்குப்**
> **பெண்டேது? பிள்ளையேது? காம குண லீலை**
> **முதலானதேது? கடவுளுக்குப் பகடி சீட்டுத்**
> **தாயமேது? காடுகளில் வேட்டை கட்டுத்**
> **திரிவதேது? கடவுளுக்குக் காமிகளின்**
> **தொழிலேயில்லை. காருண்யத் தொழில்**
> **ஒன்றே கடவுள் பாரம். தெய்வ குண**
> **மற்ற தீயோனை கடவுள் எனச் சொல்வது**
> **பாவமும் அறியாமையும் ஆகும்'**

இவர்கள் யாரைக் கொண்டு படைக்கப்பட்டார்கள் என திருமழிசை ஆழ்வார் திரு அந்தாதியில் பாடியிருக்கிறதை பார்த்து விட்டு பிறகு நீங்களே முடிவு பண்ணுங்கள் (மேற்கோள் – இரட்சணிய சமய நிர்ணயம் – பக்கம் 110).

> **'நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந்**
> **தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் – யான் முகமாய்**
> **அந்தாதி மேலிட்டறிவித்தேன் ஆழ்பொருளைச்**
> **சிந்தாமற் கேண்மினீர் தேர்ந்து'**

இது அத்தனைக்கும் மேல இவர்கள் எப்படி இறந்தார்கள் என்றும் டாக்டர் பேராசிரியர் யா,தா, பாஸ்கரதாஸ் தமது 'அவதாரமும் கிறித்தவமும்' என்ற நூலிலே பக்கம் 23ல் மிகத் தெளிவாக எழுதியுள்ளார். அதையும் படித்து கருத்தில் கொள்வது இந்த விஷயத்தில் ஏற்புடையதாக இருக்கும் என எண்ணி கீழே தருகிறேன். புராணங்களில் ஏற்கனவே எழுதப்பட்டுள்ளவைகளைத் தான் மறுபடியும் எடுத்துரைக்கிறோமே அன்றி, புதிதாக எதையும் எழுதி விடவில்லை என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

'இந்தியப் புராணங்களில் கண்ணனின் செயல்களும், இராமனின் செயல்களும் மிகவும் விரிவாகப் பேசப்படுகின்றன. மகாபாரதம், அரி வம்சம், இராமாயணம் போன்ற இதிகாசங்களும், புராணங்களும் கண்ணனின் லீலைகளையும் இராமனின் வீர தீரச் செயல்களையும் மிக விரிவாகப் பேசுகின்றன. மதுரா, குருசேத்திரம், பிருந்தாவனம், துவாரகை, யமுனை ஆற்றை ஒட்டிய பகுதிகள் கண்ணனோடு தொடர்புடைய இடங்களாக மேற்கண்ட நூல்களில் குறிக்கப்படுகின்றன. மகாபாரதத்தில் கண்ணன் நிகழ்த்திய வியப்பான வீரச் செயல்களும், ஆயர்பாடியில் கண்ணனின் குறும்புச் செயல்களும், யமுனை ஆற்றங்கரைப் பகுதியில் கோபியரோடு கொஞ்சிக் களித்த ரச லீலைகளும் தொன்மை நூலாசிரியர்கள் பலரையும், ஆழ்வார்கள் போன்றோரையும் மிக

விரிவாகச் கவர்ந்தவை ஆகும். ஆனால் கண்ணனின் இறுதிக்காலம் மிகவும் துன்பியல் நிகழ்வுகள் பல நிரம்பியவனவாக விளங்குகின்றன.

கண்ணனின் சக்கரப்படை விண்ணில் எடுத்துக் கொள்ளப்பட்டது. குதிரைகள் அவன் தேரினை விண்ணில் எழுந்து கடலுக்கு மேலே இழுத்துச் சென்ற போது அவை மறைந்து விட்டன. பலராமனின் கொடியில் இருந்த பனைச் சின்னமும், கண்ணனின் கொடியில் இருந்த கருடச் சின்னமும், கொடிகளை விட்டு பிரிந்து மறைந்து விட்டன. பலராமன் இறந்து விட்டார். கண்ணனின் பெயரனும் பிற மக்களும் உறவினர்களும் மடிந்து விட்டனர். யாதவர் ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்ந்து பட்டனர். இவற்றால் சொல்லொண்ணாத கலக்கத்தில் ஆழ்ந்த கண்ணன் அடர்ந்த கானகம் சென்று, கையற்றுக் கலங்கி, தரையில் அமர்ந்து தன் முழங்கால்களில் தலையைக் கவிழ்ந்து இருந்த போது, அவ்வழியே சென்ற ஜரஸ் என்ற வேடன் ஒருவன் கண்ணனை காட்டுவிலங்கு என்று தவறாகக் கருதி அம்பெய்தமையால் குதியூடுபட்டு கண்ணன் மாய்ந்தார்.

அங்ஙனமே இராமனும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு மாண்டு போனார். உழவுச் சாயினின்று தோன்றிய சீதை மீண்டும் தன்னை பிறப்பித்த நிலத்தின் கண்ணே வீழ்ந்து பட்டனள்.

இவர்களின் இறப்பினின்றும் இயேசுவின் இறப்பு மாறுபட்டது. அவர் யூத இனத்தாரால் சிலுவையில் கொல்லப்பட்டார். யூதருடைய ஆளுநரிடம் இயேசுவின் மீது குற்றம் சுமத்தி அவரை சிலுவையில் அறைய வேண்டும் என கூச்சலிட்ட போது, ஆளுநர் இயேசுவை பல முறை விசாரித்து விட்டு '*இவரிடம் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை*' என்று மூன்று முறை உறுதிப்படுத்தினார் (யோவான் 18:38, 19:4–6) யூதர்களின் கூச்சலின் நிமித்தம் இயேசுவை சிலுவையில அறைய பிறகு பிலாத்து ஒப்புக் கொடுத்தார். அப்போது இயேசுவின் இரத்தப் பழி தம்மீது சுமராது என்று கூறி அவர்களின் கண் முன்பாகவே தமது கைகளைக் கழுவினார் (மத் 27:24).

இயேசுவைப் பகைவர்களிடம் காட்டிக் கொடுத்த யூதாஸ் '*குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்ததினால் நான் பாவஞ் செய்தேன்*' (மத்தேயு 27:4) என்று மனம் வருந்தி நாண்டு கொண்டு செத்தான். இது போன்ற நிகழ்ச்சிகள் இயேசுவை குற்றமற்றவர் என்று நிரூபிக்கின்றன.

இயேசு உண்மையிலேயே சிலுவையில் கொலையுண்டார் என்று உலகப் பிரகாரமா சொன்னாலும், உண்மையிலேயே அவர் கொலை செய்யப்படவில்லை. அவர் பலியாக்கப்பட்டார். இதையே '*இயேசு கிறிஸ்துவின் உடல் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே.. நாம் பரிசுத்தமாக்கப்பட்டு இருக்கிறோம்*' – என்று எபிரேயரில் 10:10ம், '*இவரோ (இயேசு) பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி என்றென்றைக்கும் தேவனுடைய வலப்பக்கத்தில் அமர்ந்தார்*' என்று எபிரேயர் 10:12ம் கூறுகிறது.

பாவங்களுக்காக, குற்றங்களுக்காக கழுவாயாக பலி செலுத்துவது என்பது எல்லா சமயங்களிலும் காணப்படும் ஒரு வழிபாட்டு முறையாகும். இயேசு தன்னையே பலியாக கொடுத்த பிறகு இப்போது எல்லா கோயில்களிலும் பலி கொடுக்கப்படுவதில்லை. அது நிறுத்தப்பட்டு விட்டது. சைவ, வைணவ கோயில்களில் பலி பீடம் இருக்கும். ஆனால் பலிகள் கிடையாது.

இது இவ்வாறிருக்க, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக தம்மையே பகுத்து நிற்கும் பகவானாகிய அந்த பரமேஸ்வரன் தம்மில் ஒரு பாகமான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை எதற்காக அவதாரமாக அனுப்பி வைத்தார் என பரிசுத்த வேதாகமம் கூறுவதையும் கவனியுங்கள்.

'..கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும், பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே நேரத்தில் தரிசனமானார். அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள்' என 1 கொரிந்தியர் 15:3–6ல சொல்லப்பட்டு இருக்கிறது.

– *'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்ய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்'* – யோவான் 3:16

– *'உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்'* – யோவான் 3:17

– *'அவரை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாக (தண்டனைக்குரியவனாக) தீர்க்கப்படான்'* – யோவான் 3:18

– *'பாவிகளை இரட்சிக்க (காப்பாற்ற) இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார் (அவதரித்தார்)'* – 1 தீமோ 1:15

– *'ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்ய ஜீவன்'* – யோவான் 17:3

ஆக (1) நாம் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவதற்காக (2) நாம் பாவ மன்னிப்பு பெற்று இரட்சிக்கப்பட (3) நாம் நமது பாவங்களுக்காக ஆக்கினைக்குள்ளாக நியாயந்தீர்க்கப்படாமல் இருக்க, (4) ஜென்ம பாவத்திலும் கர்ம வினையிலும் விழுந்து போன பாவிகளான அனைத்து ஜாதி, மத, இன மக்களையும் மீட்கவே திரியேக திரிமூர்த்திக் கடவுளான இயேசு கிறிஸ்து இப்பூலோகத்தில் மனித அவதாரம் எடுத்து வந்தார். பாவிகளான நம்மீதும் பாசம் வைத்து, பாதை காட்டும் அந்த பரமேஸ்வரனை நாம் பற்றிப் பிடித்துக்

கொள்வோமா? ஏனென்றால் அவர் ஒருவரே 'வழியும், ஜீவனும், சத்தியமுமாக' இருக்கிறார்.

நமக்காக பலியாகிய தெய்வம்

தெய்வம் பலி ஆகணுமா? ஏன் ஆகணும்? பலி ஆகாமலேயே எதுக்காக பலி ஆகணுமோ அதை நிறைவேற்றிக் கொள்ள ஒரு தெய்வத்துக்கு முடியாதா? அப்படி முடியலைன்னா அது ஒரு தெய்வமா? இப்படி எத்தனையோ கேள்விகள் நம்மோட உள்ளத்தில எழலாம். இவை எல்லாமே நியாயமான, தர்க்கரீதியான கேள்விகளே. கேள்வி கேட்டு அதுக்கு பதிலை கண்டுபிடிச்சாப் பிறகு தான் எதையுமே நாம நம்பணும். அதுக்குத் தானே தெய்வம் நமக்கு பகுத்தறிவை கொடுத்திருக்கு? நம்ம தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா எல்லாரும் கும்பிடுறாங்களேன்னுகிட்டு நாமளும் அப்படியே பிளைண்டா எதையுமே யோசிக்காம ஃபாலோ பண்ணவே கூடாது.

இந்த பிரபஞ்சத்தைப் படைத்த இறைவன் ஒரு நீதிபரர், சத்தியவான், சகலத்தையும் ஒழுங்கும் கிரமமுமாகச் செய்கிறவர். அந்த நீதி மத்தவங்களுக்கு மாத்திரமல்ல, அந்த நீதியை உண்டாக்கின அவரே அதை கடைப்பிடிக்கவும் செய்யணும். கடவுள் மனுஷனைப் படைச்சாரு. அவன் பாவத்தில வழுந்து தொலைச்சிட்டான். அவன் மாத்திரமல்ல. அவனோட வாரிசுகளான நாமளும் இறைவன் அருவருக்கின்ற எத்தனையோ் பாவங்களை அனுதினமும் அறிந்தும் அறியாமலும் செஞ்சுக்கிட்டே இருக்கிறோம். செய்யுற பாவங்கள் ஒண்ணா ரெண்டா எடுத்துச் சொல்ல? பொய், பித்தலாட்டம், விபச்சாரம், வேசித்தனம், கர்வம், மமதை, வம்பு, வீம்பு, வைராக்கியம், வாக்குவாதம், சண்டை, அடுத்தவர்களை ஏமாற்றுதல், கெடுத்தல், குறை சொல்லுதல், இப்படி எத்தனை எத்தனையோ செஞ்சுகிட்டே தானே இருக்கோம்.

தெய்வமும் கிடையாது. ஒரு புண்ணாக்கும் கிடையாதுன்னு சொல்ற ஒரு நாத்தீகன் இப்படிச் செஞ்சான்னா அதை ஓரளவு புரிஞ்சுக்கிட முடியும். தெய்வ பயபக்தி இல்லாததுனால இப்படி எல்லாம் செய்யுறான்னு ஏத்துக்கிடலாம். ஆனா சர்ச்சுக்கு போய்கிட்டே, பைபிள் படிச்சுகிட்டே, கோயிலுக்கு போய்கிட்டே, நெற்றி நிறைய விபூதி, சந்தனம், குங்குமம் வச்சுக்கிட்டே, வாய் நிறைய கந்த சஷ்டி கவசம் சொல்லிக்கிட்டே, பாலாபிஷேகம் பண்ணிக்கிட்டே இத்தனை பாவங்களையும் நாம செஞ்சா கடவுள் மன்னிப்பாரா? பாவத்திற்கு தண்டனை கொஞ்ச நஞ்சமில்ல. மரணம், சாவு தான். '***பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும்***'னு பைபிள் சொல்லுது. சாவு, மரணம்னா சாதாரண மரணம் இல்ல. எரிநரகத்தில, அக்கினி சூளையில, கந்தகக் கடலில புழுவா துடியாதுடிச்சு கொஞ்சம் கொஞ்சமா வெந்து சாகிற மரணம்.

தான் பார்த்துப் பார்த்து தம்மோட சாயலிலேயே படைச்ச தமக்கு மிகவும் பிரியமான படைப்பு ஆச்சேங்கிறதுக்காக அவர் மரண தண்டனையை எதுவும் கொடுக்காம இருக்க மாட்டாரு. அதுக்குண்டான தண்டனையும் அவர் கொடுத்தாரு. கொடுக்கிறாரு. ஆனா, தண்டனையை கொடுத்தாப் பிறகு அந்த பாசமுள்ள நெஞ்சு படபடக்குது. 'ஐயோ எம் புள்ளைங்க அவஸ்தப்படுறாங்களே. அவங்களை மீட்கணுமேங்கிற ஒரு ஆதங்கத்தோட ஒரு திட்டம் வகுக்கிறார். தான் கொடுத்த தண்டனையைத் தானே ஏத்துக்கிட்டு, தம் புள்ளைகளுக்கு விடுதலை கொடுக்கணும்கிற ஒரு உன்னதமான திட்டம். அந்த திட்டத்தின் பிரகாரம் தான் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே அவர் பூலோகத்துக்கு மனித அவதாரமா அனுப்பிச்சு, அந்த பாவங்களுக்கு உண்டான தண்டனையாக அவரையே பரிகார பலியாகக் கொடுத்து அந்த திட்டத்தை நிறைவேற்றுகிறார். இதை விளக்குறதுக்கு ஒரு சின்ன கதையையும் சொல்றேன். கேளுங்க.

அந்த ஊர்ல அவர் ஒரு பெரிய ஜட்ஜ். நீதிமான். அவருக்கு ஒரு பையன் இருக்கான் – தறுதலை. கெட்ட சகவாசத்தினால கெட்டு சீரழிஞ்சு என்னவெல்லாம் செய்யக் கூடாதோ அத்தனை அக்கிரமம், ரௌடித்தனம் எல்லாம் செஞ்சு கடைசியில ஒரு பெரிய குற்றத்தையும் செஞ்சுடுறான். அது போலீஸ் கேசாகி, அவனை இவர் நீதிபதியாக இருக்கிற கோர்ட்டுக்கே கொண்டு வர்றாங்க. வழக்கை விசாரித்த நீதிபதி அவன் செய்த குற்றத்திற்கு ஒரு பெரிய தொகையை நஷ்ட ஈடாக கொடுக்கவும், தண்டனையாக சிறைத்தண்டனையையும் வழங்கி தீர்ப்பு அளிக்கிறார்.

அந்த தீர்ப்பைக் கேட்ட மகனுக்கு பயங்கர அதிர்ச்சி. ஒரு நீதிபதியாக பாரபட்சமின்றி தீர்ப்பு வழங்கிய அவர், ஒரு தந்தையாக தன் பிள்ளையை மீட்பதற்காக தன் சொத்துபத்தையெல்லாம் விற்று நஷ்ட ஈட்டுத் தொகையை அவரே கட்டுகிறார். மகனுக்குப் பதிலாக தானே சிறைத் தண்டனையையும் ஏற்றுக் கொண்டு அவனுக்கு பரிரண விடுதலையையும் தருகிறார். குற்றம் செய்த மகன் எந்தக் குற்றமுமே செய்யாத தன் தந்தை தான் செய்த குற்றத்திற்குரிய தண்டனையை அவர் அனுபவிக்கிறாரேங்கிறதை பார்த்திட்டு மகன் பாவ வாழ்க்கையை விட்டு மனந்திருந்துகிறான்.

இப்படி நடக்க வேண்டும் என்பதற்காகவே பிதாவாகிய இறைவன் இயேசு கிறிஸ்துவை இப்பூலோகத்தில் அவதரிக்க வைத்தார். நமது பாவங்களுக்காக அத்தனை பாடுகளையும், உபத்திரவங்களையும், சித்திரவதைகளையும் அனுபவிக்க வச்சு, கடைசியில சிலுவையிலும் கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்த வைத்தார்.

செய்த பாவத்திற்காக பழைய ஏற்பாட்டு காலத்தில ஆடு, மாடு, பறவைகளை பலியாக கொடுத்து பாவ நிவாரணம் பெற ஆண்டவர் அனுமதிச்சாரு. அதையே நாம இங்க நம்ம தேசத்திலேயும் அப்படி ஃபாலோ பண்ணினோம். அதுக்கப்புறம்

இயேசுவையே பலியாக செலுத்தினதுனால, இந்த உலகத்தினுடைய ஒட்டு மொத்த பாவங்களையும், சாபங்களையும் இயேசு சிலுவையில சுமந்து தீர்த்ததுனால, அவர் நமது பாவங்களுக்காக மரித்தார்னு நாம விசுவாசித்தாலே போதும், பாப விமோசனம் கிடைக்கும். இனி பலி எதுவும் கொடுக்கத் தேவையில்லை என்கிற அந்த '**பலி நிறைவேற்றக் கொள்கை**'யை இந்து மதமும் ஏற்றுக் கொண்டு சைவ வைஷ்ணவ கோயில்களில பலிகள் கொடுக்கப்படுறதை நிறுத்திட்டாங்க. நம்ம கோயில்களில பலி பீடங்கள் இருக்கும் ஆனா பலிகள் எதுவும் இப்போ கொடுக்கப்படுறது இல்லை. அதுக்கு காரணம் இயேசு கிறிஸ்து தன்னைத் தானே பலியாகக் கொடுத்தது தான்.

இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லைன்னு பைபிள் மாத்திரமல்ல இந்து மத வேதங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள் எல்லாமுமே சொல்லுது. '**இரத்தப் பிரதோஷணம் பாப விநாசம்**'னு சம்பூர்ண மஹாபாரதம் சொல்லுது. '**ஜனங்களை ஆளுகின்ற பிரஜாபதி தன் ஜனங்களின் பாவம் போக்கும்படியாக தன் சொந்த சரீரத்தையே பிராயச்சித்த பலியாக ஒப்புக் கொடுப்பார்**'னு சாம வேதத்தினுடைய இரண்டாம் பகுதியாக தாண்டீய மஹா பிரமாணம் சொல்லுது. '**உலகத்தைப் படைக்கும் போதே பிரஜாபதி பலியிடப்பட்டார். பலியிடும்படி விஸ்வகர்மா தம்மையே கையளித்தார்**'னு உபநிஷத்துக்கள் கூறுகிறது. '**புருஷா பலியாயிருக்கிறார்**'னு சாந்தோக்கிய உபநிஷத் 3:16ம், '**பிரஜாபதி பலியாகி இருக்கிறார்**'னு சதபத பிரமாணம் 1.12.1.15ம், '**அசுமே யக்யம்**'னு பிரம்ம சூத்திரம் 2.3–43மும், '**நானே பலியாகிறேன்**'னு பிரருகதாணிய உபநிஷத்தும் சொல்லுது.

இறைவனாகிய இயேசு நம் பாவங்களுக்காக பலியானார்ங்கிறதை திருவள்ளுவரின் திருக்குறளிலும், 63 நாயன்மார்கள், 13 ஆழ்வார்கள் மற்றும் சித்தர்களின் பாடல்களிலேயும் பார்க்க முடியும்.

> **'பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
> **நெறி நின்றார் நீடு வாழ்வார்** – குறட்பா 6

(பொருள் – பொறியாகிய கருவியில் (சிலுவையில்) தன் புலன்களை அவித்தவனாகிய (பலியாக்கியவனாகிய) இறைவன் (இயேசு கிறிஸ்து) காட்டிய வழியில் நிற்பவன் நீடுவாழ்வு (நித்ய ஜீவனை) பெற்றுக் கொள்வான்)

சைவ சித்தாந்த நூல்களுக்கு அடிப்படையாக இருக்கிற மெய்கண்டார் எழுதிய சிவஞான போதத்தின் முதல் பாடலைப் பாருங்கள்.

> **'அவன் அவள் அது எனும் மூவினைமையின் தோற்றிய திதியே**
> **ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்.'**

(பொருள்: அவன் – ஆதாம், அவள் – ஏவாள், அது – உலகம். மூவினைமையின் தோற்றி திதியே – கடவுள் மூன்று விதமாக இவர்களை உருவாக்கினார். ஆதாமை இந்த மண்ணிலிருந்தும், ஏவாளை ஆதாமின் விலா எலும்பில்

இருந்தும், உலகத்தை வார்த்தையினாலும் உருவாக்கினார். ஒடுங்கி மலத்துளதாம் – இவைகள் படைக்கப்பட்ட போது தூய நிலையில் இருந்தன. அந்த தூய நிலையில் இருந்து ஒடுங்கி பாவத்தில் விழுந்தன. அந்தம் ஆதி – அது தூய நிலையின் அந்தமும் (அதாவது பாவம் இல்லாத நிலையின் முடிவும்) பாவ நிலையின் தொடக்கமும் ஆயிற்று. என்மனார் புலவர் – என்று அறிஞர்கள் கூறுகின்றனர்).

'முத்தி முதற் கொடிக்கே மோகக் கொடி படர்ந்தது
அத்தி பழுத்தது என்று உந்தீ பற, அப்பழம் உண்ணாதே உந்தீபற'

– திருவுந்தியார் 4

(பொருள்: முக்தி நிலையாகிய இன்ப நிலையில் இருக்க வேண்டி படைக்கப்பட்ட முதல் கொடியில் (ஆதாமில்) மோகமாகிய பாவக் கொடி படர்ந்தது. எப்போது எனில் 'உண்ணாதே' என்று கூறப்பட்ட பழத்தை அவன் உண்டபோது).

இறைவன் மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்க அவதாரம் எடுக்க வேண்டி வந்தது என்பதை நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (1–3580) அழகாகப் பாடுகிறார் பாருங்க.

'பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'

(பொருள்: கறைபட்ட ஞானமும், தவறான ஒழுக்கமும், அழுக்கு (பாவம்) நிறைந்த உடம்பும் நம்மை ஆட்கொள்ளாமல் நமக்கு நல்லதோர் வாழ்வைத் தருவதற்காகவே இறைவன் ஒரு ஸ்திரியில் பிறந்தார்).

உமாபதி சிவாச்சாரியாரும் இதையே 'போற்றிப் பஃறொடை'யில் (69) பாடியிருக்கிறார்.

'இறைவா இன்பத்து எமை இருத்த வேண்டி
பிறவா முதல்வன் பிறந்தான்'

நாலாயிரம் திவ்வியப் பிரபந்தமும் (இயற்பா இரண்டாம் திருவந்தாதி (24) – 3307) இதையே சொல்கிறது.

'அவன் கண்டாய் நன்னெஞ்சே ஆரருளும் கேடும்
அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான் அவன் கண்டாய்'

(பொருள்: மாசே இல்லாத கடவுள் மாசுள்ள மனிதனின் பாவத்தை அறுத்து மீட்பதற்காக ஐம்புலன்களையும் உடைய மனிதன் ஆனார்)

அப்பர் பெருமானும் (அப்பர் தேவாரம் 320ல்) பாவியர் பாவம் போக்குவதற்காக இறைவன் பலியானார் எனப் பாடுகிறார்.

**'ஆவியாய் அவியுமாகி, அருக்கமாய்ப் பெருக்கமாகிப்
பாவியர் பாவம் தீர்க்கும் பரமனாய்ப் பிரமனாகி'**

'கௌதம விருத்தத்தில் கௌதமர் அநாதி தேவன் மனுக்குலத்தின் பாவத்தைப் போக்க குருவாக வந்து மக்களை இரட்சிப்பார் என்று பாடுகிறார் பாருங்கள்.

**"ஆதியந்த மில்லாத காலந்தன்னில்
அநாதியாய் படைத்த பரன் மனுவோர்க்காக
அறியாத குருவென வந்தாண்டதாகும்"**

'குருரேவபர பிரம்ஹ' – கடவுளே குரு என உபநிஷத்துக்கள் கூறுகின்றன. அப்படி குருவாக அவதரித்த கடவுள் கோடு ஆயுதத்தால் (அதாவது மரக்கொம்பால் ஆன ஆயுதத்தால் – சிலுவையில்) கொடிய பாவ வினையைத் தீர்த்தார் என ஒரு சைவப் பாடல் கூறுகிறது பாருங்கள்.

**"குருவடியாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடா வகை தான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடு ஆயுதத்தால் கொடு வினை களைந்தே"**

சர்வ ஜனங்களின் பாவப் பரிகாரியாக பிரஜாபதி (கடவுள்) மரிக்க வேண்டும் என்று ரிக் வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.

**'யக்ஞும் பிரதாமனி தர்மனி
யக்னோவ புவன சய நாபிஹ
யக்னம் சுதர் மனோவ்
யக்னம் ப்ரதிஷ் திதம்
ருத்சயன பதயை அதி விஷ்வினி துரிதா'**

(பொருள்: தர்மங்களில் எல்லாம் தலையாய தர்மம் பலியே. அந்த பலியிலே சர்வேஸ்வரன் பிரியம் கொள்கிறார். இந்த பலியினால் தான் இந்த பிரபஞ்சம் கேடடைந்த நிலையிலிருந்து விடுபட முடியும். அதற்காக பிரஜாபதி பலியாக்கப்படுவார்).

மனுஷர்களுடைய பாவ கர்மத்தை போக்கும் பலியாக கொல்லப்பட வேண்டிய அந்த பலி ஆடு பற்றியும் இந்து மத வேதங்கள் தெளிவாகக் கூறுகின்றன.

- **அந்த ஆடு அப்பழுக்கற்ற கொழுத்த ஆட்டுக்கிடாவாக இருக்கணும்** (இயேசு 33 1/2 வயது வாலிபன்)
- **அதன் தலையில் பலுசு செடியால் கிரீடம் செய்து அணியப்பட வேண்டும்** (இயேசுவின் தலையில் முட்கிரீடம் சூட்டப்பட்டது)
- **அது பலிபீடத்தோடு சேர்த்து இழுத்து கட்டப்பட வேண்டும்** (இயேசு சிலுவையில் வைத்து கட்டப்பட்டார்)

- **அதன் நான்கு கால்களிலும் ரத்தம் வரும்படியாக காயப்படுத்தப்பட வேண்டும்** (இயேசுவின் கை கால்களில் ஆணிகள் கடாவப்பட்டன)

- **அந்த ஆடு கொன்று புதைக்கப்பட வேண்டும்** (மரித்த இயேசு அடக்கம் பண்ணப்பட்டார்)

- **அது மீண்டும் பிழைத்து உயிர்த்தெழ வேண்டும்** (மரித்து மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தெழுந்தார்)

- **அதன் இறைச்சியை சாப்பிடக் கொடுக்க வேண்டும்** (அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் இயேசுவின் பிய்க்கப்பட்ட சதையாகவும், சிந்தப்பட்ட இரத்தமாகவும் நினைவு கூறும்படி திருவிருந்து, பந்தி, இராப்போஜனம் என்ற பெயரில் கிறிஸ்தவர்கள் சாப்பிடுகிறார்கள்)

(பலியாக கொடுக்கப்பட வேண்டிய பலி ஆட்டின் சகல விதமான அம்சங்களும், பாவப் பரிகாரியாக தன்னைத் தானே பலியாக ஒப்புக் கொடுத்த தேவ ஆட்டுக் குட்டியான இயேசு கிறிஸ்துவுக்கு பொருந்துகிறது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது).

இந்து மத வேதங்களிலும், வேதாந்தகளிலும், உபநிஷத்துக்களிலேயும் தெய்வம், பிரஜாபதி, விஸ்வகர்மா, புருஷா பலியாகி இருக்கிறார் என்று கூறுகின்றன.

- **'அசுமேவ யக்ஞும்'** – பிரம்ம சூத்திரம் 2.3–43

- **'நானே பலியாக இருக்கிறேன்'** – பிருகதாரணீயக உபநிஷத் 1.5.17

- **'புருஷா பலியாகி இருக்கிறார்'** – சாந்தோக்கிய உபநிஷத் 3.16.1.

- **'பிரஜாபதி பலியாயிருக்கிறார்'** – சதபதபிரமாணம் 1.13.1.15

- **'இனி ஈண்டு தேகத்திலுள்ள நானே பலியாகிறேன்'** – பகவத் கீதை 84
- **'மற்றவர்களுக்காக கடவுள் தாமே இறப்பைத் தெரிந்து கொண்டார்'**

- **'உலகத்தை படைக்கும் போதே பிரஜாபதி பலியிடப்பட்டார்'**

- **'பலியாகும்படி விசுவகர்மா தம்மையே கையளித்தார்'** என உபநிஷத்துக்கள் கூறுகின்றன.

இப்படி வேதங்களும், உபநிஷத்துக்களும், கீதையும் பிரஜாபதி பலியாகி இருக்கிறார். நானே பலியாகி இருக்கிறேன்னு சொன்னாலும், எந்த தெய்வம் பலியாகி இருக்கு? சிவன் பலியாகி இருக்கிறரா? விஷ்ணு பலியாகி இருக்கிறாரா? கண்ணன், கிருஷ்ணன், ராமன் பலியாகி இருக்காங்களா? முருகன், பிரம்மா, ஐயப்பன் அல்லது ஓம் சக்தி பலியாகி இருக்காங்களா? இல்லை அவதார புருஷர்கள் ஆன்மீக குரு, ஜகத் குரு, பாபான்னும், சக்தியின் சொரூபம் என்றும் சொல்கிறவர்களும் பலியாகலையே! பலியாகி இருப்பது இயேசு கிறிஸ்து ஒருத்தர் தானே.

இவங்கள்லாம் நல்லவங்க தான். ஜனங்களை நல்வழிப்படுத்த நல்ல போதனைகளை, உபதேசங்களை, சொல்பவர்கள் தான். ஆனா இவங்களால நாம செஞ்ச பாவங்களை, நம்மோட பிறவிலேயே நம்மைத் தொடர்ந்து வந்துள்ள இந்த சகசமலத்தை (ஜென்ம பாவத்தை, கர்ம பந்தத்தை) போக்க முடியாதே. இந்தப் பாவங்கள் கழுவப்படாம நாம பரலோகம், மோட்சம், சொர்க்கம், கைலாசம், வைகுண்டம் போக முடியாதே. நாம எத்தனை தான் தான தர்மங்கள் பண்ணினாலும், கோயில் குளம்னு போனாலும், எத்தனை மந்திர உச்சாடனங்கள் சொன்னாலும், கலச விளக்கு, வேள்வி பூஜை, இருமுடி, காவடி எடுத்தல், மொட்டை போடுதல், அங்கப் பிரதட்சணம், பாத யாத்திரை, கங்கை யமுனையில் புனித நீராடுதல் என எத்தனை பண்ணினாலும் இந்த பாவங்களைப் போக்க முடியாது என்பதற்கு ஆதாரமாக எத்தனையோ சித்தர்களின் பாடல்களை இந்த நூலிலேயே படித்தீர்களே.

கீதை 18:66ம், 9.32ம் '**தர்மங்களை எல்லாம் அறவே கைவிட்டு விட்டு என்னை சரண் அடைக. பாவங்களிலிருந்து உன்னை விடுவிப்பேன்**'னு கூறுகிறது. இதற்கு தர்மம் செய்யாதே என்று அர்த்தமல்ல. தர்மங்களை செய்யுறதுனால பாவங்களிலிருந்து மீட்பு கிடைக்கும்னு நம்பி கடவுளை விட்டு விடாதே. பாவ விமோசனத்திற்கு, மீட்புக்கு, விடுதலைக்கு தான தர்மத்தை மட்டும் சார்ந்து இருக்காதே. தர்மங்களால் பாவ மன்னிப்பை தர முடியாது. தான தர்மம் நம்மோட பாவத்தை போக்காது. கடவுளை சார்ந்து இருப்போர்க்கு மட்டுமே மீட்பு, பாவ மன்னிப்பு கிடைக்கும். தர்மத்தின் மீது நம்பிக்கை கொள்ளாதே. பாவ மன்னிப்பை வழங்க தகுதியுள்ள கடவுளையே (அதாவது தன்னையே பலியாகக் கொடுத்தவரையே) நம்பு என்று அர்த்தம்.

இயேசு கிறிஸ்து ஒருவரே நமக்காக, நமது பாவங்களுக்காக பலியானார் என்று பரிசுத்த வேதாகமம் தெள்ளத் தெளிவாறு கீழ்கண்ட வசனங்களில் தெளிவுபடுத்துகிறது. இதைத் தான் இந்து மத வேதங்களும், வேதாந்தங்களும், உபநிஷத்துக்களும் கூறுகின்றன.

–ஏசாயா 53:4–6,12 – '***மெய்யாகவே அவர் (இயேசு கிறிஸ்து) நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லோரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம் எல்லோருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப் பண்ணினார்.***'

– மத்தேயு 20:28 – '***அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் (இயேசு கிறிஸ்து) வந்தார்***'

– II கொரி 5:15 – '*அவர் (இயேசு) எல்லாருக்காகவும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்*'

–I கொரி 15: 3–6 – '*கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்*'.

– தீத்து 2:14 – '*அவர் நம்மைச் சகல அக்கிரமங்களிலிருந்தும் மீட்டுக் கொண்டு. தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காக தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்.*'

– II கொரி 5:21 – '*நாம் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்*'

–கலா 3:13 – '*மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.*'

–எபிரேயர் 10:10 – '*இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டு இருக்கிறோம்*'.

– எபிரேயர் 10:12 – '*இவரோ (நம்) பாவங்களுக்காக ஒரே பலியை செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து...*'

– லூக்கா 22:37 – '*அக்கிரமக்காரர்களில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்று எழுதி இருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேற வேண்டியது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்*'

பார்த்தீர்களா? நமக்காக, நமது பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக, மீறுதல்களுக்காக பலியானவர் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே, வேறு ஒருவரும் இல்லை என்று இப்போது புரிகிறதா? அவர் ஒருவராலேயே நம் பாவங்களைக் கழுவ முடியும். '*இயேசு கிறிஸ்துவின் இரத்தமே சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்தீகரிக்கும்*' (1யோ 1:7). '*அவராலே அன்றி வேறு ஒருவராலும் நமக்கு இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழே, பூமியின் மேலே அவருடைய நாமமே அல்லாமல் வேறு நாமம் கட்டளையிடப்படவில்லை*' (அப் 4:12) '*நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் சுமந்து தீர்க்கிற கிருபாதார பலி அவர் ஒருவரே*' (1 யோ 2:2). '*நாம் நமது பாவங்களை*

அவரிடத்தில் அறிக்கையிட்டால் அவர் நமது பாவங்களை எல்லாம் மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராக இருக்கிறார்' (1 யோவான் 1:9). ***'அவருக்குள் அவருடைய இரத்தத்தினால் பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாகி இருக்கிறது'*** (கொலோ 1:14). ***'கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்'*** என்று ரோமர் 10:13 கூறுகிறது.

நாம் ஒவ்வொருவருமே அறிந்தும் அறியாமலும் எத்தனையோ பாவங்களை செய்திருக்கிறோம். இந்த பாவங்கனள இயேசுவைத் தவிர வேறு யாராலும் போக்க முடியாது. ஏன்னா, இயேசு கிறிஸ்து ஒருவரே எல்லா வேதங்களும் சொல்கிறபடி நமது பாவங்களுக்காக இரத்தம் சிந்தியுள்ளார். இந்தப் பாவங்கள் கழுவப்படலைன்னா நமக்கு மோட்சம், கைலாசம், வைகுண்டம் இல்லை. இப்போ முடிவு எடுத்துக்கோங்க. இந்த இயேசு கிறிஸ்து உங்களுக்கு வேணுமா? வேண்டாமா? என்று. இது மத மாற்றமல்ல. மன மாற்றம் மட்டுமே!

உண்மையான கடவுள்

உண்மையான கடவுளைக் குறித்து அனைவரும் அறிந்து கொள்ள பல ஆண்டுகளுக்கு முன்னமே எத்தனையோ பேர் பல புத்தகங்களை எழுதி இருந்தாலும், இந்த புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள பாடல்களெல்லாம் ஆதாரத்தோடு எழுதப்பட்டுள்ளன. உண்மையான கடவுள் யார் என்று தெரிந்து கொள்வதற்கு முன்பாக, நாம் இதுவரை சேவித்துக் கொண்டு இருப்பவைகள் தெய்வங்களா? நாம் வழிபடும் முறை சரியா என்பது குறித்து ஞானிகள், சித்தர்கள் பாடியுள்ள சில பாடல்களை இங்கு பார்ப்போம். இன்னும் பல பாடல்களுண்டு. சில முக்கியமாக பாடல்களை மட்டுமே இங்கு எழுதுகிறேன். ஒளவையார் வெண்பா என்ன கூறுகிறது என்று பாருங்கள்.

"மாலும் மனிதன் – மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டன் அவன் மனிதன்
சீலமுடன் உற்று உணர்ந்த உகந்த பெரியோர்
கற்றும் அறிந்தோர் இல்லை காண்"

சித்தர் பாடல்கள் புத்தகத்தில் சிவவாக்கியர் பாடல் எண்.237 (பக்கம் 37ல்) என்ன கூறுகிறார் என படியுங்கள்.

"ஊரிலுள்ள மனிதர்காள்! ஒருமை மனமாய் கூடியே
தேரிலே வடத்தையிட்டுச் செம்பை வைத்திழுக்கிறீர்;
ஆரினாலு மறியொணாத ஆதிசித்த நாதரைப்
போரிலான மனிதர் பண்ணும் புரளி பாரும் பாருமே.

அதே சிவ வாக்கியார் மீண்டும் பாடுகிறார் (பக்கம் 28ல் 178வது பாடலில்)

**'நட்ட தாவரங்களும், நவின்ற சாத்திரங்களும்
இட்டமான ஓமகுண்ட மிசைந்த நாலு வேதமும்
கட்டி வைத்த புத்தகம் கடும் பிதற்றிதற்கெலாம்
பெட்டதாய் முடிந்ததே பிரானையானயறியவே"**

**"ஈரமான பூவினோடிலை பறித்து வீணிலே
நீரை மொண்டு கல்லிலே நித்தம் விட்டு மாய்கிறீர்
கால மூல நாடியுட்கருத்தொடுங் கவல்லிராய்க்
சீலமாக நாதனும் சிறந்திருப்பான் உம்முடனே"** (என்றும்)

**"நட்டு வைத்த தேவரும் நடாது வைத்த தேவரும்
சுட்டு வைத்த தேவரும் சுடாது வைத்த தேவரும்
இட்டு வைத்த இடத்தை விட்டு எழுந்திராத தேவரை
வட்டமிட்டு மாந்தர்கள் வணங்கும் வாறு எங்கனே"**
(என்றும்)

**"சாவதான தத்துவச் சடங்கு செய்யு மூடர்காள்
தேவர் கல்லுமாவரோ சிரிப்பதன்றியென் சொல்வேன்
மூவராலும் அறிய ஒண்ணா முத்தொழில் பாகப் பொருள்
காவலாகி உம் உள்ளே கலந்திருப்பது உண்மையே"**

என்றும் எழுதப்பட்டுள்ளது. இப்பாடல்கள் எவ்வளவு தெளிவாக உள்ளது. கடவுள் நமக்குள்ளே இருக்கிறார் என்றும் நாம் தான் கோயில் என்றும் பாடல்கள் தெளிவுப்படுத்துகிறது இல்லையா?

பரிசுத்த வேதாகமம் 1 கொரிந்தியர் 3ம் அதிகாரம் 16ம் வசனம் கூறுகிறது ***"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா?"***

ஆனந்த களிப்பு என்ற பாடல் பகுதியில் எழுதப்பட்டு இருப்பதை படித்த பிறகாவது நாம் மனந்திருந்த வேண்டுமா?

**"பாபஞ் செய்யாதிரு மனமே! நாளைக்
கோபஞ்செய்தே யமன் கொண்டோடிப் போவான்"**

6வது சரணத்தில் எழுதப்பட்டுள்ளதையும் பாருங்கள்

**"நல்லவழிதனை நாடு – எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு;
வல்லவர் கூட்டத்திற் கூடு – அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு" (பாபஞ்
செய்யாதிரு)**

என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும் பத்ரகிரியார் என்ற பக்தன் சித்தர் பாடல்கள் புத்தகத்தில் பக்கம் 429ல், பாடல் 15ல் எழுதுகிறார். **"பாவியென்று பேர் படைத்துப் பாழ் நரகில் விழாமல் தன்னுயிர் போல் எண்ணித் தவம் முடிப்பது எக்காலம்?"** என்று.

தன்னுயிர் போல் பிற உயிரையும் நினைத்து நாம் அன்பு காட்ட வேண்டும். ***"உன் சத்துருக்களையும் சிநேகியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்"*** என்று உபதேசித்தது மாத்திரமல்ல. அதன்படியே தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும் அவரை சித்திரவதை செய்தவர்களையும், கொடுமைப்படுத்தி, அவமானப்படுத்தி, துன்புறுத்தியவர்களையும் மன்னித்து, ***'இப்போதும் இவர்கள் என்ன செய்கிறோம் என்று அறியாமற் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்'*** என்று பகைஞருக்கும் இரங்கி விண்ணப்பம் செய்தாரே அந்த மெய் தேவனையே பற்றிப் பிடித்து உய்ய வழி தேடுங்கள்.

இயேசு ஒருவரே மெய் தேவன், உண்மையான கடவுள். இதையே அனைத்துலக வேதங்களும் சந்தேகமறக் கூறுகின்றன. இப்படியாக உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உண்மையான தெய்வத்தை அறிந்து கொண்டு, பரிசுத்தமாய் வாழ்ந்து பரமனின் பாதம் பணிந்து கொண்டு, பரமனோடு சேர நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளுவோம்.

நாமாவளிகள் போற்றும் தெய்வம்

1. ஓம் ஸ்ரீ பிரம்ம புத்ரராய நமக:

பிரம்மா – பிதா, கடவுள்; புத்ராய – குமாரனாகிய (அதாவது கடவுளின் குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே) உமக்கு நமஹ: உமக்கு ஸ்தோத்திரம். நமஸ்காரம் (யோவான் 3:16)

2. ஓம் ஸ்ரீ கன்னி சுத்தாய நமக:

'கன்னியின் வயிற்றில் பிறந்தவரே உம்மை நான் நமஸ்கரிக்கிறேன் (மத்தேயு 1:23). சாம வேதத்தில் ஒரு மந்திரம் – அவதாரம் எடுக்கப் போகிறவர் ஒரு கன்னியின் வயிற்றில், பசுவின் தொட்டியில் பிறப்பார் என்று கூறப்பட்டு இருக்கிறது. அதாவது பிறக்கின்றவர் ஒரு அவதார புருஷர் என சாம வேதம் சாட்சி கூறுகின்றது. எந்த தெய்வமும் இது வரை கன்னியின் வயிற்றில் பிறக்கலை. கன்னியின் வயிற்றில் பிறந்த ஒரே தெய்வம் இயேசு கிறிஸ்து மாத்திரமே.

3. ஓம் ஸ்ரீ தரித்திர நாராயண நமக:

'ஏழை மானிட கோலத்தில் பிறந்தவரே உம்மை அர்ச்சிக்கிறேன்'. லூக்கா சுவிசேஷம் 2ம் அதிகாரம் 7ம் வசனத்தில் "*அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்த படியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். தேவ குமாரனாகிய இயேசு நமக்காக தரித்திர கோலம் பூண்டார்" என்று எழுதப்பட்டு இருக்கிறது.*

4. ஓம் ஸ்ரீ ஸிபிலிஸ்டாய நமக:

'*விருத்த சேதனம் பெற்றவனே உம்மை அர்ச்சிக்கிறேன்*'. லூக்கா 2:21ல் '*பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ண வேண்டிய எட்டாம் நாளிலே, அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்*' என்று எழுதப்பட்டுள்ளது.

5. ஓம் ஸ்ரீ விருட்ச சூல அருந்தாய நமக:

சிலுவை மரத்தில் தொங்கியவரே உம்மை வணங்குகிறேன் (1 பேதுரு 2:24). மாற்கு 15:24ல் அப்பொழுது "*அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்*". அதன் பின்பு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக் கொள்ளும்படி அவைகளைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

6. ஓம் ஸ்ரீ பஞ்சகாய நமக:

'ஐந்து காயங்களையுடையவரே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்'. ஏசாயா 53ம் அதிகாரம் 5ம் வசனம் கூறுகிறது. '*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்*' என்று. இயேசு கிறிஸ்துவின் இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டன. இடுப்பு விலாவில் அவர் ஈட்டியால் குத்தப்பட்டார் (ஐந்து காயங்கள்).

7. ஓம் ஸ்ரீ ம்ருதம் ஜெயாய நமக:

'மரணத்தை வென்றவரே உம்மை நமஸ்கரிக்கிறேன்'. ஏசாயா 25ம் அதிகாரம் 8ம் வசனம் கூறுகிறது. '*அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்*'. கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார்; கர்த்தரே

இதைச் சொன்னார். மற்றும் I யோவான் 2:2ல் *'நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே'* என்று எழுதப்பட்டுள்ளது.

8. ஓம் ஸ்ரீ நமச்சிவாய நமக;

சிவம் என்றால் அன்பு என்று அர்த்தம். அன்புள்ளவரே உம்மை நான் ஸ்தோத்தரிக்கிறேன். அன்புக்கு இலக்கணம் வகுத்தவர் இயேசு கிறிஸ்து. உண்மையான அன்பு எப்படி இருக்கணும் என்று 1 கொரி 13:3–8ல சொல்லியிருக்கிறார் பாருங்க. *'அன்பு நீடிய சாந்தமும், தயவும் உள்ளது. அந்த அன்புக்கு பொறாமையில்லை. அது தன்னைப் புகழாது, இறுமாப்பாய் இராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினம் அடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் சகிக்கும். அந்த அன்பு ஒருக்காலும் மாறாது, அழியாது, குறையாது.'* அப்பேர்ப்பட்ட அன்பை உடையவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

9. ஓம் ஸ்ரீ பசுபதேய நமக:

'ஆத்ம மணாளரே உம்மை பணிகின்றேன்'. யோவான் 3:29ல யோவான் ஸ்நானகன் கூறுகிறார்.

'மணவாட்டியை உடையவனே மணவாளன். மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான். இந்த சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று' என்று இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறுகிறார்.

10. ஓம் ஸ்ரீ தியாகேசாய நமக:

'மனுக்குலத்தின் பாவம் தீர்க்க உடல், உயிர், ஆவி மூன்றையும் துறந்தவரே உம்மை அர்ச்சிக்கிறேன்'. ஏசாயா 53:12 கூறுகிறது. *'அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம்...'*

11. ஓம் ஸ்ரீ ருத்ராய நமக:

'சகலத்தையும் அழிக்கும் வல்லமையுள்ளவரே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்',

12. ஓம் ஸ்ரீ சதாசிவாய நமக:

'எப்போதும் அன்புடையவரே உம்மை நான் நமஸ்கரிக்கிறேன்'. யோவான் 4:8ல் *'...தேவன் அன்பாகவே இருக்கிறார்'* என்று எழுதப்பட்டுள்ளது.

13. ஓம் ஸ்ரீ மஹேச்வராய நமக:

'சர்வ வல்லமையுடையவரே உம்மை நான் ஆராதிக்கிறேன்'. ஆதியாகமம் 17ம் அதிகாரம் முதல் வசனத்தில் தேவாதி தேவன் ஆபிராம் என்ற பக்தனைப் பார்த்து .. '***நான் சர்வ வல்லமையுள்ள தேவன். நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு***' என்று கூறுகிறார்.

14. ஓம் ஸ்ரீ விஸ்வநாதாய நமக:

'அனைத்திற்கும் தலைவனே, உம்மை நான் போற்றுகிறேன்'. ஏசாயா தீர்க்க தரிசன புத்தகம் 55:4ல் '***இதோ அவரை ஜனக் கூட்டங்களுக்குச் சாட்சியாகவும் ஜனங்களுக்குத் தலைவராகவும், அதிபதியாகவும் ஏற்படுத்தினேன்***' என்று எழுதப்பட்டுள்ளது.

15. ஓம் ஸ்ரீ மகாதேவாய நமக:

'எல்லா தேவர்களுக்கும் தேவனான தேவாதி தேவனே, உம்மை வாழ்த்துகிறேன்'. யாத்திராகமம் 18ம் அதிகாரம் 11ம் வசனத்தில் '***கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்***' .... என்று எழுதப்பட்டுள்ளது.

16. ஓம் ஸ்ரீ காலகாலய நமக:

'காலங்களுக்கு அப்பாற்பட்டவரே உம்மை சேவிக்கிறேன்'. யோபுவின் சரித்திரம் 24ம் அதிகாரம் முதலாம் வசனம் கூறுகிறது. '***சர்வ வல்லவருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன?***' என்று கூறுகிறது. மேலும் சங்கீத புத்தகம் 31ம் சங்கீதத்தில் 15ம் வசனத்தில் தாவீது ராஜா '***என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது***' என்று கூறுகிறார்.

17. ஓம் ஸ்ரீ நித்திய பிரம்மச்சாரியாய நமக:

'திருமண பந்தம் எதுவும் இல்லாமல் பிரம்மச்சரியத்தை கடைப்பிடித்து பரிசுத்தமாக வாழ்ந்த தூயவரே உம்மை துதிக்கிறேன்'. மனைவி, பிள்ளை, குட்டி என்ற உலகப் பிரகாரமான எந்த உறவும் இல்லாமல் சந்நியாசி போல் துறவறம் பூண்டு பரிசுத்த ஜீவியத்தை வாழ்ந்தவர் இயேசு பிரான்.

இயேசு கிறிஸ்து திரியேக தேவனில் ஒருவராக, திரித்துவமாக, தமது வார்த்தையால் இப்பிரபஞ்சத்தை படைத்து, காத்து, வழி நடத்துகிறார். அவரே நமக்கு ஒளியாக, குருவாக, அவதாரமெடுத்து வந்த தெய்வம். அவர் ஒருவரே நம்முடைய பாவங்களுக்காக மரித்தவர், நம் பாவங்களை மன்னித்து நம்மை பரலோகம் சேர்க்கும் வல்லமை அவர் ஒருவருக்கே உண்டு. அவர் இன்றும் ஜீவிக்கிறார். அவர் நம் அனைவரையும் நேசிக்கிறார்.

என் அன்பான சகோதர சகோதரிகளே, வாருங்கள். நமக்காக உயிரை விட்ட அந்த தியாகேஸ்வரனை, பரமேஸ்வரனை, சர்வேஸ்வரனை, அகிலாண்டேஸ்வரனை, வைத்தீஸ்வரனை, லோகேஸ்வரனை கெட்டியாக பற்றிப் பிடித்துக் கொண்டு இம்மையிலும், மறுமையிலும் நாமும் நமது முழுக் குடும்பத்தாரும் சகல விதமான ஆசீர்வாதங்களையும், சம்பத்துக்களையும் பெற்றுக் கொள்வோமா?

உண்மையான தெய்வத்தை சொல்லும் வேதம்

பாவ இருளில் வாழும் மக்களை மீட்க ஒளியாக வந்த தெய்வம் இயேசு கிறிஸ்து. நம்மை நாச மோசங்களுக்கு விலக்கிப் பாதுகாத்து, நடக்க வேண்டிய வழிகளை போதித்து, நம்மை நல்வழிப்படுத்த குருவாக வந்த குல தெய்வம் இயேசு கிறிஸ்து. தானும் பரிசுத்தமாக வாழ்ந்து நம்மையும் பரிசுத்தப்படுத்தும் ஒரே தெய்வம் தூயாதி தூயவரான இயேசு கிறிஸ்து. ஆதி அந்தம் இல்லாது, வார்த்தையாக, ஓங்கார நாதமாக இந்த உலகை உருவாக்கிய உருவமில்லாத உண்மையான தெய்வம் இயேசு கிறிஸ்து. எந்த மனிதராலும், மனிதக் கரங்களாலும், கற்பனையினாலும், எவராலும், எதனாலும் சிருஷ்டிக்கப்படாத நம்மை சிருஷ்டித்த தெய்வம் இயேசு கிறிஸ்து, மனிதர்களின் படைப்பான எந்த விக்கிரஹங்களிலும் இல்லாமல் நம்முடைய உள்ளத்தில் கோவில் கொள்ளும் உன்னத தேவன் இயேசு கிறிஸ்து. நமக்காக பரத்தை விட்டு இறங்கி வந்து அவதாரம் எடுத்து, உலக சரித்திரத்தை கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்று பிரித்த ஒரே கடவுள் இயேசு கிறிஸ்து. இந்து சமயக் கோவில்களில் சொல்லப்படும் நாமாவளிகளில் உட்பொருளாய் போற்றப்படும் தெய்வம் இயேசு கிறிஸ்து. அவரே உண்மையான தெய்வம், கடவுள்.

அந்த தெய்வத்தின் பிறப்பு, அவர் பிறப்பைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் பற்றிய முழு விபரத்தையும், அவரின் குண நலன்களையும், அன்பையும், பண்பையும், அவருடைய உபதேசங்களையும், அவரின் சிலுவை மரணத்தையும், உயிர்த்தெழுதலையும், அவரின் மறு வருகை, நியாயத் தீர்ப்பு, ஆயிரம் வருஷ நல்லாட்சி போன்ற சகல விதமான விபரங்களையும் மிகத் தெளிவாக, துல்லியமாக எடுத்துரைக்கும் வேதம் எது? நம்மை உயிர்ப்பிக்கின்ற, உன்னதத்திற்கு உயர்த்துகின்ற அந்த வேதம் எது? அந்த வேதத்தைக் குறித்து நமது சித்தர்களும் ஞானிகளும் என்ன கூறுகின்றார்கள் எனப் பாருங்களேன்.

இந்த உலகத்திலே வேதங்கள் என்று சொல்லி எத்தனையோ வேதங்களும், வேதாந்தங்களும், இதிகாசங்களும், புராணங்களும் அநேகமாக இருந்தாலும் உண்மையான வேதம் எது என்று நாம் அறிந்து தெரிந்து அவைகளைக் கைக் கொள்ள வேண்டும் என்று அகஸ்தியர் தமது 16ம் பாடலில் கூறுகிறார்.

**"நிசமான நாலு வேதம் ஆறு சாஸ்திரம்
நினைவதனை மயக்கி வைக்கும் புராண சாஸ்திரம்,
வசமாக நால் மதத்தில் வந்த சாஸ்திரம்
மற்ற மற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்,
குசமசக்கு, குசமசக்கு, அப்பா, அப்பா,
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரம் தன்னை
நிசமதாய் நம்பினோர்க்கு ஈடேற்றமுண்டு,
நிலை ஞானக் கண்ணொளியு நிற்குந்தானே"**

(இந்த வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் எல்லாமே பொய்யும் புரட்டும், வீணான மயக்கங்களையும், குழப்பங்களையுமே கொண்டு வரும்) என்றும்,

'.. ஞானமது கோடி சொன்னார் நன்மைக்காக, சுயம் போல மயக்கிடவே வைத்தராப்பா'

(அவரது கூற்றுக்கள் ஞானம் போல காணப்பட்டாலும், மெய்ப்பொருளை தேடுவது போல காணப்பட்டாலும் அவைகள் யானையைப் போல மயக்கமாகவே இருக்கின்றன) என்றும் அழுத்தம்திருத்தமாக கூறுகிறார்.

வேதங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் பொய்யும் புரட்டும் நிறைந்து குழப்பங்களையும், மயக்கங்களையுமே ஏற்படுத்துகின்றன என்ற அகத்தியரின் கருத்தை அமரர் புராணமும் கூறுகிறது.

**"உலகிலே பிறந்த முன்னோ
ரோதிய கலைகளெல்லாம்
நிலையதாஞ் சோதி தன்னை
நிசமாய்ச் சொன்னதில்லை
பலபல பேதமாகப்
பங்கமாய்க் கூறு செய்து
அலகை போற் பொய்யைப் பேசி
யரு நரகிழுந்திப் போனார்"** என்று சங்கராச்சாரியாரும்

**"அண்ணலாம் பரமசோதி யற்புத மறியாதாலே
கண்ணிலே கண்டதெல்லாங் கதி தருங்கடவுளென்று
மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான்முறைப்படியிதென்ன
எண்ணியே நடந்து மோட்சமிழந் தெரிநரகில் வீழ்வார்"**
என்று சிவ வாக்கியரும் பாடுகிறார்கள்.

(முன்னோர்கள் சொல்லி இருக்கிற வேதங்கள், புராணங்கள் எதுவுமே நிலையான தெய்வத்தைக் குறித்து சொல்லவில்லை. கண்ணிலே கண்டதையெல்லாம் கடவுள் என்று வணங்கினார்கள். இதனால் மோட்சத்தை இழந்து நரகத்தில் வீழ்வார்கள்).

மேலும் அமரர் புராணத்தில என்ன கூறப்பட்டுள்ளதுன்னு பாருங்க.

**"பல கலைகள் ஓதுவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால்வேதம், ஆறுசாஸ்திரம்,
அலையுடனே தத்துவங்கள் தொண்ணூற்றாரும்
அவைகளிலே பொய், களவு, அதர்மம் சேரும்
மலையரசன், சிவன், பிரமா விஷ்ணுதானும்
மாசில்லாத நாதனுட வழியுங்காணார்
நிலை பெருக மோட்ச வழி காணாததாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே"** .

(பொருள்: சிவன், பிரம்மா, விஷ்ணு என்று சொல்லக் கூடியவர்கள் மாசற்ற கடவுளுடைய வழி தெரியாதவர்கள். மோட்ச வழி தெரியாததால் நீதியில்லாத மனிதர் என்று கூறப்பட்டுள்ளது).

சித்தர் பாடல்கள் புத்தகத்தில் பாம்பாட்டி சித்தரும் இதே கருத்தை தமது 98வது பாடலில் பக்கம் 93ல் கூறுகிறார்.

**"சதுர்வேதம் ஆறுவகைச் சாத்திரம் பல
தந்திரம் புராணங்களை கற்றுமாகமம்
விதம் விதமான வேறு நூல்களும்
வீணான நூல்களே யென்றாடு பாம்பே!"**

கருவூராரும் பூஜா விதியில் சித்தர் பாடல்கள் புத்தகத்தில் 16வது பாடலாக (பக்கம் 183ல்) இந்த வேதங்களையும், சாஸ்திரங்களையும் உபதேசிக்கும் கபட வேதாந்திகள், ஆன்மீகவாதிகள் எப்படி இருக்கிறார்கள் என்று மிகவும் நொந்து போயிப் பாடுகிறார்னு பாருங்கள்.

**"புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய் பேசிச் சாத்திரங்கள் மிகவும் கற்றே,
அகலுவார் பெண்ணாசை விட்டோமென்றே;
அறிவு கெட்டே ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர் போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந்தன்னைச் சுற்றி
இகலுமனமங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெல்லாம் பெண்ணாசை பூசை தானே"**

(பொருள்: பல வேதங்களை புகழ்ந்து, பல சாத்திரங்களை கற்று, பெண் ஆசை ஒழித்து, துறவறம் பூண்டோம் என்று கூறிக் கொண்டு, முனிவர் வேடம் பூண்டவர்கள் மனமுழுவதும் பெண் ஆசை வைத்து ஊரை சுற்றுகிறார்கள்).

மயக்கங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தும் பொய்யும், புரட்டும் நிறைந்த வேதங்களையும், புராணங்களையும், சாஸ்திரங்களையும் தவிர்க்கும்படி

அறிவுறுத்திய அகத்திய முனிவர் எது உண்மையான வேதம், எதை நாம் பின்பற்ற வேண்டும் என்றும் தெள்ளத் தெளிவாக சந்தேகத்திற்கு இடமின்றி, தமது 22வது பாடலில் கூறுகின்றார்.

"தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு,
செப்பினதோர் நூல்களெல்லாம் சுட்டுப் போடு,
தரிசிப்பாய் ஓர் வழி, மெய் ஞானப் பாதை,
அடைவதற்கு அடையாளம் ஒன்று சொல்வேன்
பரிட்சிப்பாய் பத்து மொழி கையிற் கொண்டு
பரப்பிரமம் ஒன்றையே நாடித்தேடு
அர்ச்சிப்பாய் நிலை தவறா மார்க்கந்தேடி,
வணங்கு அந்தமறை புகுந்து வாழுவாயே!"

'பத்து மொழி கைக் கொண்டு' அதாவது பத்துக் கட்டளைகளை இறைவன் தன் கைப்படவே எழுதி சீனாய் மலையில் மோசேக்கு கொடுத்தாரே அந்த பத்துக் கட்டளைகளை உள்ளடக்கிய பரிசுத்த வேதாகமத்தை கைக் கொண்டு, அந்த சத்திய வேதத்தில் சொல்லப்பபட்டுள்ள பரப்பிரம்மமான இயேசு கிறிஸ்துவையே பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அகத்தியப் பெருந்தகை கூறுகின்றார்.

அகத்தியர் பரிந்துரைக்கும் பரிசுத்த வேதாகமம் எப்படி இருக்கிறது என்று சங்கீதம் 19ல் 7 முதல் 10 வரையிலுள்ள வசனங்கள் கூறுகின்றன.

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.

கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது".

"கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும் அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது" என்று சங்கீதக்காரன் சிலாகித்துச் சொல்கிறான்.

அது மட்டுமல்ல '*அவருடைய வசனங்கள் நம்முடைய கண்களுக்கு தீபமாயும், நம் பாதைகளுக்கு (நாம் நடக்க வேண்டிய வழிகளுக்கு) வெளிச்சமாயும் இருக்கிறது*' என சங்கீதம் 119:105 சொல்கிறது. இந்த வானமும் பூமியும் அழிந்து போம். ஆனால் கர்த்தருடைய வார்த்தைகளோ ஒரு நாளும் அழியாது. அவைகள் இருபக்கமும் கருக்குள்ள பட்டயம் ஆகும். அந்த பட்டயத்தை நாம் பற்றிப் பிடித்துக்

கொண்டால் எந்த தீமையையும், பாவங்களையும், இந்த உலகப் பிரகாரமான இச்சைகளையும், ஆசைகளையும் நாம வெல்ல முடியும்.

இந்த பரிசுத்த வேதாகமம் ஒன்றே இறைவனால் அருளப்பட்டது. நாம் வாழ வேண்டிய வழிகளையும், வாழக் கூடாத வழிகளையும் எச்சரிப்போடும், திருஷ்டாந்தங்களோடு துல்லியமாகக் காட்டுகிறது. நாம் நீதியோட நேர்மையோடு, உண்மையோடு உத்தமத்தோடு வாழ்ந்தால் என்ன ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்றும், அப்படி வாழாமல் அநீதியாய், அதர்மமாய், அக்கிரமத்தோடு, பாவஞ் செய்து வாழ்ந்தால் என்ன சாபம் கிடைக்கும் என்றும் மிகத் தெளிவாகக் கூறும் ஒரே வேதம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே.

நாம் தவறு செய்யாமல் இருக்கணும், ஆண்டவருடைய சன்னிதானத்தில் கடைசியில் நாம் நியாயத் தீர்ப்புக்கு நிற்கின்ற சமயத்தில் அவர் நம்மைப் பார்த்து 'இதோ என் பரிசுத்தன், கபடமற்றவன், உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகியவன்'னு அவர் வாயினாலேயே சொல்லணும்னா, அதுக்கு ஒரே வழி '***நானே வழியும் ஜீவனும் சத்தியமுமாய் இருக்கிறேன்***'னு சொன்ன பகவான் இயேசு கிறிஸ்து காட்டிய அந்த உண்மையான சத்திய வேதத்தின் பிரகாரம் நடப்பது ஒன்றே.

இந்த பரிசுத்த வேதாகமம் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் சொந்தமல்ல. இந்த உலகில் பிறந்த அனைத்து ஜாதி மக்களுமே மதம், இனம், மொழிக்கு அப்பாற்பட்டு, அனுதினமும் படித்து அதை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு சத்திய வேதம் அது.

எத்தனையோ வேதங்களைப் படிச்சிருக்கோம். இறைவன் நமக்கு எதையும் பகுத்தறியும் அறிவையும், ஞானத்தையும் கொடுத்திருக்கிறார். யாரும் யாரையும் ஏமாற்ற முடியாது. நல்லது கெட்டது எல்லாவற்றையும் நம்மால் பிரித்து உணர முடியும். இறைவனே அருளிய இந்த பரிசுத்த வேதாகமத்தை படிச்சுப் பாருங்க.

இது உங்களை கரை சேர்க்க, பண்படுத்த, பக்குவப்படுத்த, பரிசுத்தப்படுத்த உதவுமா இல்லையா எனப் பாருங்க. நாம் இது வரை வாழ்ந்த வாழ்க்கை எப்படி இருக்கிறது? நீதியுள்ள நியாயாதிபதியாக, நம் இருதயத்தின் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனுடைய பார்வையில் எப்படி இருக்கும் என ஒரு கண்ணாடியைப் போல நம்மை நாமே தற்பரிசோதனை செய்து கொள்ள, எடைபோட, நிதானிக்க உறுதுணையாக இருப்பது பரிசுத்த வேதாகமம் மட்டுமே. ஒருவரும் கெட்டுப் போவது தேவனுடைய சித்தமல்ல.

நாம் அனைவரும் பரலோக, மோட்ச பிரஜைகளாக மாறணும்கிறதுக்காக தேவ ஆவியினால் அருளப்பட்ட தேவ வாக்கியங்களால் நிரம்பிய தெய்வீக, சத்திய வேதமே பரிசுத்த வேதாகமம். மறுபடியும் சொல்கிறேன். பைபிள் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல; அனைவருக்குமே சொந்தமானது.

அனைவருமே அனுதினமும் படித்து வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்போதனைகளை அடக்கிய ஒரே நூல் பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இந்த உண்மையான சத்திய பரிசுத்த வேதாகமத்தை படியுங்கள். அதன்படி சர்வ வல்ல தேவனாகிய அந்த சர்வேஸ்ரனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனும் திரியேக தேவனின் அன்பும், அரவணைப்பும், வழி நடத்துதலும், ஆசீர்வாதமும், உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் பரம்பரைக்கும் கிடைக்கும்.

கர்த்தர் இந்த நூலைப் படிப்பவர்களையும், வாங்கி மற்றவர்களுக்கு கொடுப்பவர்களையும் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

எஸ். தாயப்பன் எழுதிய இதர நூல்கள்.

இவைகள் எதைப் பற்றி?

1. என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், தெலுங்கு, VCD - **(தமிழ், ஹிந்தி, கன்னடம்)**

58 வயசு வரைக்கும் தீவிர வைராக்கியமுள்ள இந்துவாக, விக்கிரஹ ஆராதனைக்காரனாக, இயேசு எதிர்ப்பாளனாக இருந்த சகோ. தாயப்பனையும், அவரின் மனைவி, மகன் கார்த்திக், சக்தி, மகள் காயத்ரி அனைவரையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்படித் தொட்டார், 18 ஆபரேஷன்கள் செய்து கோமா நிலைக்குப் போயி அமெரிக்கன் டாக்டர்களே கை விட்டு, கருணைக் கொலை செய்து விடுங்கள் என்று சொல்லப்பட்ட நிலையிலே இயேசு கிறிஸ்து கார்த்திக்கை எப்படி அற்புதமாக காப்பாற்றினார் என எழுதப்பட்டுள்ள சாட்சி நூல். இது படிக்கின்ற எவருடைய உள்ளத்தையும் உலுக்கி எடுக்கும். தமிழில் 2 லட்சத்திற்கும் அதிகமாக விற்கப்பட்ட ஒரே நூல்.

2. சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் (தமிழ்).

இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம். தெய்வம் என்ற சொல்லப்படுகின்ற மற்ற எதுவும் தெய்வம் இல்லை. விக்கிரஹங்களில் தெய்வம் இல்லை என அழுத்தம் திருத்தமாக ஆதாரத்தோடு அகத்திய முனிவர், அழுகுனிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கோரக்க முனிவர், பட்டிணத்து அடிகள், திருமூலர், சிவவாக்கியர், போகர், கழாய்ச் சித்தர், வால்மீகர் போன்ற பல சித்தர்களின் பாடல்களின் விளக்கத்தோடு எழுதப்பட்ட நூல். 85000 பிரதிகளுக்கு மேல் விற்பனையில்.

3. பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ்)

திருடினாத் தான் பாவம், கொலை, கொள்ளை, ஒரு பெண்ணை கற்பழித்தல் போன்றவைகள் தான் பாவம் என்று இல்லை. ஆண்டவரின் பார்வையில் எதெல்லாம் பாவமாக இருக்கிறது, கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டே, கோயில், மசூதிக்கு போய்க் கொண்டே எத்தனை பாவங்களை அன்றாடம் நாம் செய்து கொண்டு இருக்கிறோம் என்றும், நியாயத் தீர்ப்பு, பரலோகம், நரகம் எப்படி இருக்கும் எனவும் பல சாட்சிகளோடு எழுதப்பட்ட ஒரு நூல் இது. படிப்பவர் எவரையும் பாவம் செய்ய தயங்க வைக்கும் என்பது திண்ணம். 80,000 பிரதிகள் விற்பனையில். இது ஆங்கிலத்திலும் தயாராகிக் கொண்டு இருக்கிறது)

4. இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் (தமிழ்)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு பேசினால் என்ன பேசுவார்? நாம்

எப்படி இருக்கணும்னு அவர் விரும்புகிறார்? அவருடைய வருகைக்கு நாம ஆயத்தமா இருக்கிறோமா? மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துகிறோமா? என நம்மை நாமே ஒருமுறை அலசி ஆராய்ந்து பார்த்து ஆவியில் நம்மை அனலாக மாற்றும் என்பது உறுதி. ஒவ்வொரு கிறிஸ்தவர் கையிலும் இருக்க வேண்டிய ஒரு நூல். 40000 பிரதிகள் விற்பனையில்.

5. இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? (தமிழ்)

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, இந்தியர்களுக்கு மாத்திரமல்ல, இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்குமே அவர் தேவை என்பதை பல ஆதாரங்களோடு, சாட்சிகளோடு, மறுக்க முடியாத பல உண்மை நிகழ்வுகளோடு எழுதப்பட்டுள்ள நூல். திருக்குறள் ஒரு கிறிஸ்துவ நூல். விவேகானந்தர் இயேசுவைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார், கர்னாடகாவிலும், ஒரிசாவிலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்த பல வன்முறைச் சம்பவங்களை கண்ட பிறகும், கிறிஸ்தவர்கள் ஏன் தற்கொலைப் படையாக மாறி பழிக்குப் பழி வாங்கவில்லை என்பதை அற்புதமாக விளக்கும் ஒரு நூல் இது. 30,000 பிரதிகள் விற்பனையில்.

6. என் ஊழியக்காரனே...!? (தமிழ்)

ஆண்டவருக்கு ஊழியம் செய்கின்ற ஊழியக்காரர்கள் எப்படி இருக்க வேண்டும், சபைகள் ஏன் நிரம்பி வழியவில்லை, சுவிசேஷம் ஏன் பரவவில்லை, இந்தியா கர்த்தருக்கு சொந்தமாக என்ன செய்ய வேண்டும் என பல அரிய அறிவுரைகளைத் தரும் நூல் இது. ஒவ்வொரு ஊழியக்காரரையும் தம்மையும், ஊழியத்தையும் தற்பரிசோதனை செய்து கொள்ளத் தூண்டும் ஒரு நூல் இது. 20,000 பிரதிகள் விற்பனையில்.

7. கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்கு பதில் (தமிழ்)

முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா? அந்நிய பாஷை பேசினால் தான் அபிஷேகம் இருக்குன்னு அர்த்தமா? அபிஷேகம் இல்லாம பரலோகம் போக முடியாதா? மேரி, பவுல், அந்தோணியாருக்கு நம் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா? கிறிஸ்தவர்கள் காதலிக்கலாமா? ஊழியம் செய்ய விசேஷித்த அழைப்பு, அபிஷேகம் தேவையா? போன்ற 100 எடக்கு மடக்கான கேள்விகளுக்கு பதில் தரும் நூல். கிறிஸ்தவர்களின் பல சந்தேகங்களை தீர்க்கும் நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

8. சைவமும், வைணவமும் கிறிஸ்தவமே (தமிழ்)

ஆச்சரியமாக இருக்கிறதா? கி.பி 49ல் இந்தியாவிற்கு வந்த புனித தோமாவின் நற்செய்தியினால் உண்டானதே சைவமும், வைணமும் என ஆதாரங்களோடு, சரித்திர வரலாறுகளோடு படிப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் நூல் இது.

சைவர்களும், வைணவர்களும் பின்பற்றுவது தோமாவின் ஆதி இந்திய கிறிஸ்தவக் கொள்கைகளையே என கிறிஸ்தவர்களும் புரிந்து கொண்டு அதை இந்துக்களுக்கும் புரிய வைத்து 'நீங்க கிறிஸ்தவ கொள்கைகளை உங்கள் பாணியில் ஏற்றுக் கொண்டாலும், நீங்கள் ஆராதிப்பது ஒரு நிழலை மட்டுமே. ஒரு டூப்ளிகேட்டையே ஆராதிக்கிறீர்கள். ஒரிஜினல் இங்கே இருக்கிறது. இயேசுவின் மூலமே பூரண இரட்சிப்பு, நித்திய வாழ்க்கை, பாவ மன்னிப்பு, பரலோகம் கிடைக்கும்' என அவர்களுக்கு எளிதாக புரிய வைத்து அவர்களையும் இரட்சிப்பின் பாதையில் வழி நடத்த உதவும் ஒரு உன்னத நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

9. எழுந்து கட்டுவோம் (VCD தமிழ்)

இயேசு கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுமே ஆண்டவருக்கு ஊழியம் செய்யணும், சுவிசேஷத்தை அறிவிக்கணும், கர்த்தர் செய்த நன்மைகளை சாட்சிகளாக புற ஜாதிகளிடம் கூற வேண்டும். சுவிசேஷம் பரவ, தேசம் சந்திக்கப்பட நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என வேதம் கூறுகிறது என்பதை மிகத் தெளிவாக சகோ.தாயப்பன் இந்த VCDயில் கூறியுள்ளார். கேட்கும் எவரையும் தட்டி எழுப்பும். அனல் மூட்டும். வாங்கி நீங்களும் பாருங்கள். மற்ற சபை மக்களுக்கும் கொடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். 20,000 சீடிக்கள் விற்பனையில்.

10. அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு ! (தமிழ்)

ஆபரேஷன் செய்தாலும் செய்யாவிட்டாலும், கீமோதெராவி கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும் சரி உயிர் வாழப் போவது இன்னும் சில மாதங்களே என்று டாக்டர்கள் சொன்ன போது 'எனக்கு கேன்சரா? நோ.. நான் இயேசுவின் பிள்ளை. இந்த சரீரம் கர்த்தருக்குரியது. இதில் கேன்சருக்கு அதிகாரம் இல்லை' என்று கூறி விசுவாசித்து, அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்ட மிஸஸ் டோடி ஆஸ்டின் மற்றும் டாக்டர் தேவகலா அவர்களின் அருமையான சாட்சி அடங்கிய நூல். படிப்போரின் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும் ஒரு அதி அற்புத சாட்சி. தெய்வீக சுகம் சம்பந்தப்பட்ட வேத வசனங்களை கொண்ட ஒரு நூல் இது. 5,000 பிரதிகள் விற்பனையில்

11. நீங்களே எனக்கு சாட்சிகள் (தமிழ்)

'உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்' என்று வாக்குரைத்தவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. நம்மைப் பண்படுத்தும், பக்குவப்படுத்தும், பரிசுத்தப்படுத்தும், கரம் பிடித்து வழிநடத்தும் ஜீவனுள்ள தேவன் அவர். 'அவரை நோக்கிப் பார்த்த முகங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போனதில்லை' என்பதற்கு சாட்சியாக பல அனுபவங்களும் கேன்சர் வியாதியிலிருந்து அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்ட பாஸ்டர் T.ஜார்ஜ் (மதுரை யாசுப்பா நகர் நித்ய ஜீவன் சபை) அவர்களின் மனைவி சுகிர்தா ஜார்ஜ் அவர்களின்

உயிர்த்துடிப்புள்ள சாட்சி அடங்கிய நூல் இது. வியாதியிலிருந்து அற்புத சுகத்தைப் பெற்றுக் கொள்ள வழி காட்டும் ஒரு அற்புத நூல் இது. படித்து விசுவாசியுங்கள். நீங்களும் உங்கள் வாழ்வில் அதிசயங்களைக் காண்பீர்கள். 5,000 பிரதிகள் விற்பனையில்.

12. இயேசுவின் கீழ்படிதலும் ஆதாமின் கீழ்படியாமையும் (தமிழ்)

ஆண்டவரோட வார்த்தைகளுக்கு கீழ்படிதல், அவரின் சித்தத்திற்கு கீழ்படிதல் ஆண்டவரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள மிகவும் அவசியம். கீழ்படிந்தமையால் கிடைத்த ஆசீர்வாதங்களையும், கீழ்படியாமையால் விளைந்த தீமைகளையும் விளக்கும் ஒரு அருமையான நூல் இது. பாஸ்டர் எம். நித்யானந்த மங்களராஜ் எழுதியது. 5,000 பிரதிகள் விற்பனையில்.

13. உண்மையான கடவுள் யார்? (தமிழ்)

சித்தர்கள், ஞானிகள், தேவ மனிதர்களின் பார்வையில் யார் உண்மையான கடவுள் என அவர்களின் பாடல்களின் மூலமாகவும், அதற்கு ஒத்த பரிசுத்த வேதாகம வசனங்களின் மூலமாகவும் ஆணித்தரமாக எழுதப்பட்ட நூல் இது. புற ஜாதி மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க பெரிதும் உதவும்.

14. முக்திக்கு வழி கிறிஸ்தவமே (VCD - தமிழ்)

நாகர்கோவில் ஹெவன் டிவியில் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் சகோ. தாயப்பன் கொடுத்த நெத்தியடி செய்தி அடங்கிய VCD. புற ஜாதிகளை இரட்சிப்பின் பாதையில் வழி நடத்த உதவும் VCD

15. சைவமும் வைணமும் கிறிஸ்தவமே

(கதா காலட்சேபம் – ஆடியோ சீடியும் புத்தகமும்) கேட்கின்ற எவரையும் எளிதில் கவரும் வண்ணம் சத்தியத்தை கதாகாலட்சேப பாணியில் அறிவித்திருக்கும் புதிய முயற்சி. ஒரு தடவை கேட்டால் பல கேட்கத் தூண்டும் சீடி.

உங்கள் இனத்தார்,நண்பர்கள் நரகத்துக்கு போகக் கூடாதா?

மேலே குறிப்பிட்டுள்ள புத்தகங்கள், VCDயில் வரிசை எண் 4,6,7,9,12 தவிர மற்ற புத்தகங்கள், சீடிக்கள் எத்தனை வாங்க முடியுமோ வாங்கி ஜெபத்தோடு அவர்களுக்கு கொடுங்கள். அவர்கள் இரட்சிக்கப்படுவது உறுதி. எல்லா நூல்களும், VCDகளும் ஒவ்வொன்றும் ரூபாய் பத்து மட்டுமே. இந்த நூல்கள் கிடைக்கும் இடம் – எஸ். தாயப்பன், 12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யு – சேலையூர் போஸ்ட், சென்னை–600073. நேரிலும், D.D, M.O. அனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர் குறித்து...

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 66 வயது என்று நம்பமாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்னர் ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத் துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப்படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர, பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவர்களை தெரிந்துக்கொண்ட விதம், மற்றும் இவரின் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணிமாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும், 700க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறிவருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Cosmic Printers, Chennai-5.